விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
உறவுகளுக்கு நிதி தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

வலம்புரி
Valampurii

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆனி 20 புதன்கிழமை (04.07.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 197

ஐக்கிய நாடுகள் சபையின் பிரேரணை தொடர்பில் அரசு
ஆக்கபூர்வமான நடவடிக்கையில்லை
ஐ.நா பிரதிநிதிகளிடம் கூட்டமைப்பு எடுத்துரைப்பு

(கொழும்பு) ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினை அமுலாக்குவதில் அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை என ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதிகளிடம் கூட்டமைப்பு எடுத்துரைத்துள்ளது.

இலங்கைக்கான ஐ.நா வதிவிடப் பிரதிநிதி டெரன்ஸ் டி ஜோன்ஸ், எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனை நேற்று பாராளுமன்றத்தில் சந்தித்து கலந்துரையாடினார். ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவை 22

குற்றச் செயல்களை தடுக்க ஒத்துழைப்பு வழங்கப்படும்
மீனவப் பிரதிநிதிகளிடம் யாழ் கட்டளை தளபதி

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்களை தடுப்பதற்கும் சட்ட ஒழுங்குகள் சீராக நடைபெறுவதற்கும் ஒத்துழைப்பு வழங்குவதாக மீனவ பிரதிநிதிகளிடம் யாழ் மாவட்ட கட்டளை தளபதி தர்சன கெட்டியாராட்சி உறுதியளித்துள்ளார்.

மீனவ சங்க பிரதிநிதிகளுக்கும் யாழ். 02

துப்பாக்கி வெடித்ததில் பொலிஸார் உயிரிழப்பு
தெல்லிப்பளையில் சம்பவம்

(கரணவாய்)

துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் 1.30 மணியளவில் இடம் 23

விஜயகலாவின் கருத்து
அரசியலமைப்பை மீறுகின்றதா?
கடும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்து

(கொழும்பு)

சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்த கருத்து அரசியலமைப்புக்கு முரணானதா? என ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறும் சட்ட 22

ஹயஸ் வாகனம் மோதி பாடசாலை மாணவி பலி
கிளிநொச்சி உமையாள்புரத்தில் சம்பவம்

(பரந்தன்)

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் உமையாள்புரம் அ.த.க. பாடசாலையில் தரம் 3இல் கல்வி கற்கும் பரந்தன் உமையாள்புரத்தைச் சேர்ந்த ராஜ்குமார் யதுர்சா (வயது 8) எனும் மாணவியே உயிரிழந்தவராவார். இச்சம்பவம் நேற்று காலை 7.15 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

தாயுடன் துவிச்சக்கர வண்டியில் பாடசாலைக்குச் சென்ற மாணவியை தாய் பாடசாலைக்கருகில் உள்ள பாதசாரிகள் கடவையருகில் இறக்கிவிட்டு வீடு திரும்பி விட்டார். இதன்போது பாதசாரிகள் கடவையை குறித்த மாணவி 23

இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனை உடனடியாக பதவி விலகுமாறு பிரதமர் ரணில் அறிவிப்பு

(கொழும்பு)

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக தற்போது சர்ச்சை நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் விஜயகலாவை இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து உடனடியாக நீக்கு 23

புலிகள் மீள் உருவாக்கம்
நாடாளுமன்றம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

சபையில் ஏற்பட்ட அமளிதுமளியை கட்டுப்படுத்த முடி 22

மன்னார், வவுனியா மாவட்டங்களுக்கு
அரச அதிபர்கள் நியமனம்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் மோகன்ராஜ், மன்னார் மாவட்டச் செயலாளராகவும் நிந்தாவூர் பிரதேச 22

இராஜாங்க அமைச்சர் விஜயகலாவால்
சர்ச்சையில் சிக்கிய ஐக்கிய தேசியக் கட்சி

(கொழும்பு)

வடக்கில் பிரச்சினைகள் இருப்பதாகக் காண்பித்து மீண்டும் பயங்கரவாதத்தை ஏற்படுத்துவது தான் ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினரான பந்துல குணவர்த்தன 23

புலிகள் தொடர்பான சர்ச்சைப் பேச்சு
விஜயகலாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி மைத்திரி உத்தரவு

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழ மீண்டும் விடுதலைப் புலிகள் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில் இராஜாங்க அமைச்சர் பதவியில் உள்ள ஒருவர் அவ்வாறு கருத்து வெளியிட முடியாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அத்துடன் இது தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள் 02

விஜயகலாவை விட்டுவிடுங்கள்
அமைச்சர் மனோ

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நல்லவர் 22

புலிகளின் மீள் உருவாக்கம்; விஜயகலா தெரிவித்த கருத்து
தென்னிலங்கையில் பாரிய எதிர்ப்பலை

(கொழும்பு)

புலிகளின் மீள் உருவாக்கம் குறித்து ஐக்கியக் தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமாகிய விஜயகலா தெரிவித்த கருத்தால் தென்பகுதியில் பாரிய எதிர்ப்பு அலை உருவாகியுள்ளது.

நேற்று முன்தினம் யாழில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், புலிகளை மீள உருவாக்குவது எமது நோக்கம் என்ற கருத்தை தெரிவித்திருந்தார். இந்த கருத்து தென்பகுதியில் பாரிய எதிர்ப்பை 22

பேச்சுவார்த்தை தோல்வி போராட்டம் தொடரும்!
பாடசாலைக்கு விடுமுறையில்லை கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்துள்ளதால் இன்றைய தினம் முன்னெடுக்கவிருந்த போராட்டம் தொடரும் என கல்வியைப் பாதுகாப்பதற்கான தேசிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

குறித்த பேச்சுவார்த்தையானது நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. இதன்போது அவர்கள் முன்வைத்த கோரி 23

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குற்றச் செயல்...

மாவட்ட கட்டளை தளபதி தர்சன ஹெட்டியாராட்சிக்கும் இடையில் நேற்று கலந்துரையாடல் ஒன்று பலாலி படை தலைமையகத்தில் இடம்பெற்றது. குறித்த கலந்துரையாடலின் பின்னர் மீனவ சம்மேளனத்தின் தலைவர் வே.தவச்செல்வம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

இந்த கலந்துரையாடலின் போது, படையினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதுடன். மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப வேண்டும் என வலியுறுத்தியதுடன்

கடற்படையால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பருத்தித்துறை வெளிச்சவீட்டினை விடுவித்தல்,படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கரையோரப் பிரதேசங்களது விடுவிப்பு,தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களிற்கான வயர்லெஸ் கருவிகளை பயன்படுத்தும் அனுமதி, கடலில் தொழிலின் போது காணாமல் போகும் மீனவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதாக தெரிவித்தார். தமது கோரிக்கைக்கு கரையோர பிரதேசங்கள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படும் என தளபதி உறுதியளித்திருந்தார் என தெரிவித்தார்.

மேலும் தற்போது மக்களது அன்றாட பிரச்சினைகளை தீர்ப்பதிலும் சட்டம் ஒழுங்கை பேணுவதிலும் அரசு தவறுமானால் மக்கள் தமது பொற்கால மான புலிகளது ஆட்சிக்காலத்தை மீள விரும்புவாரென மீனவ அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் சட்டம் ஒழுங்கு சீர் குலைவதற்கும் படையினருக்கும் தொடர்பில்லையென மறுதலித்துள்ள யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி இந்த விடயம் குறித்த கடற்படை பொலிஸார் இராணுவத்தினர் இணைந்து ஒரு கலந்துரையாடலை ஏற்பாடு செய்வதாகவும் தெரிவித்ததாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

விஜயகலாவுக்...

ளுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோருக்கு உத்தரவிட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின் தகவல் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன. (ம)

வேலைவாய்ப்பு

DS-MAX Marketing international pvt(ltd) ஆகிய எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உண்டு.
ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

பதவி	வெற்றிடம்	வருமானம்
Sales Distributer	10	25000
Sales Supervisor	06	30000
Assistant manager	02	45000

தகைமை
O/L மற்றும் A/L அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை
வயதெல்லை18-30
இறுதித்திகதி 08.07.2018
தொடர்புகளுக்கு:-0761932118,
0766048878
(4783)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் பகுதிநேர கல்விப் பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறிக்கான தெரிவுப்பரீட்சை விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான தெரிவுப் பரீட்சையானது எதிர்வரும் 07.07. 2018 சனிக்கிழமை அன்று காலை 10 மணி முதல் மதியம் 12.00 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
01.07.2018
(சி-3139)

வேலைவாய்ப்பு

கொக்குவிலில் இயங்கும் பிரபல பிறிண்டிங் நிறுவனம் ஒன்றிற்கு கீழ்க்காணும் பணியாளர்கள் உடன் தேவை!

அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புவர்கள்

- புத்தகம் கட்டுநர்கள் (Binding) பெண்
- Screen Printing தெரிந்தவர்கள் ஆண்/பெண்
- Envelope ஒட்டுபவர்கள் பெண்
- திருமண அழைப்பிதழ் தயாரிப்பவர்கள் பெண்

(சி-3133)

- கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

வியாழக்கிழமை (05.07.2018) காலை 9.00 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.

136, கே.கே.எஸ் வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.
PRINT MASTER 0776622981 | 0774481696

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு தம்பிமுத்து அஜீபன்

திருமதி ஏஞ்சலின் தேவமலர் அஜீபன்

எமது நிலைய செயலாளர் திரு.தம்பிமுத்து அஜீபன் அவர்கள் 08.06.2018 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின் போது சைவசித்தாந்தத்தில் முதுகலைமாணி பட்டம் பெற்றமையை இட்டும் அவரது துணைவியார் திருமதி ஏஞ்சலின் தேவமலர் அஜீபன் தமிழ் சிறப்புப்பட்டத்தை 05.05.2018 இல் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தில் பெற்றமையையிட்டும் எமது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் அவர்கள் மேலும் பல சிறப்புக்களை பெற ஆசி கூறுகின்றோம்.

வாழ்த்துவோர்:-
வில்சன் சனசமூக நிலையத்தினர்
மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.
(4782)

மரண அறிவித்தல்

தம்பாப்பிள்ளை ஆறுமுகம்

(ஓய்வுநிலை பொலிஸ் உத்தியோகத்தர்)



செங்குந்தர் வீதி கரவெட்டி கிழக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பாப்பிள்ளை ஆறுமுகம் அவர்கள் 02/07/2018 திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை-சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் வேலுப்பிள்ளை-சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பவளம் அவர்களின் பாசமிகு கணவரும், இரத்தினம் (கனடா), காலஞ்சென்றவர்களான செல்லையா, நடேசு, மாணிக்கம், பொன்னம்மா, கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, தெய்வானை, இலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பவளமலர், பவளராணி, பவளேஸ்வரன் (ஓய்வுபெற்ற மருந்தாளர்), பவளவிக்னேஸ்வரன் (நெதர்லாந்து), பவளரதி (ஆசிரியை-யா/ஞானாசாரியார்க் கல்லூரி), பவளபுஸ்பம் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலகௌரி (விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்) இன் அன்பு மாமனாரும், சுஜீந்திரன் (Civil Engineer), சுபாங்கிதன் (Quantity Surveyor) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2018) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வீரக்களி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செங்குந்தர் வீதி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. (3142)

தகவல்:-குடும்பத்தினர்
0212263386,0766008363

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கில் சட்டத்தை அமுல்படுத்த கூட்டமைப்பே தடையாகவுள்ளது

சரத் வீரசேகர குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கில் சட்ட ஒழுங்கினை முழுமையாக நடைமுறைப்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் வடமாகாண சபை உறுப்பினர்களுமே தடையாகவுள்ளனர் என மகிந்த அணி முன்னாள் படை அதிகாரி அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்கில் விடுதலை புலிகளின் ஆதிக்கம் மீண்டும் தழைத்தோங்க வேண்டும். அப்போதே தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ முடியும் என்று சிறுவர் பாதுகாப்பு மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் குறிப்பிட்டுள்ளமையானது வன்மையாக கண்டிக்கத்தக்க விடயம்.

வடக்கில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக சிறுவர் துஷ்பிரயோகங்களும் வன்கொடுமைகளும் நாளாந்தம் இடம்பெற்றதாகவே காணப்படுகின்றது. மகளிர் விவகாரம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் இப் பிரதேசங்களில் முழுமையாக நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தால் இவ்வாறான நிலைமைகள் ஒருபோதும் தோற்றம் பெற்றிருக்காது.

தெற்கில் நடைமுறையிலுள்ள சட்ட ஒழுங்கு வடக்கில் அமுல்படுத்த முடியாமைக்கு பிரதான காரணம் என்னவெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் வடமாகாண சபை உறுப்பினர்களுமே.

இவ்வாறான அரசியல்வாதிகள் என்ன நோக்கத்துடன் செயற்படுகின்றார்கள் என்பது குறித்து எவரும் யூகிக்க முடியாத நிலைப்பாடே காணப்படுகின்றது. தமிழ் மக்களுக்கு அவர்களது உரிமைகளை தருவதாக குறிப்பிட்டு அவர்களை தொடர்ந்து பாதிப்புக்குள்ளாக்கியே வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

கைதடிப் பாலம் மக்கள் பாவனைக்காக திறப்பு

(படங்கள்:-பொ. சோபிகா)

ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட கைதடி கொங்கிறீட் பாலம் மக்கள் பாவனைக்காக நேற்றுத் திறக்கப்பட்டது. வீதி அபிவிருத்தி அதிகார சபை, ஒப்பந்த நிறுவனத்தினரும் இணைந்து பாலத்தில் பொங்கல் மற்றும் பூஜை வழிபாடுகளை நடத்திய பின்னர் மக்களின் பாவனைக்காக பாலத்தை திறந்து வைத்துள்ளனர். விசேடமாக இப் பாலத்துடன் அமைக்கப்பட்ட வீதியில் (Bicycle Lane) துவிச்சக்கரவண்டி பாதைக்கான சமிக்ஞை குறியீடுகள் வரையப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

மகிந்த கைகாட்டும் நபரை வெற்றிபெறச் செய்வோம்

ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த கைகாட்டும் நபரை வெற்றிபெறச் செய்வோம் என, மகிந்த ஆதரவு கூட்டணியின் முக்கியஸ்தரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளார் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் பொதுஜன பெரமுனவுக்குள் பிளவு ஏற்படும் என்று அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். ஆனால், இந்த விடயத்தில் எமக்கு எந்தவொரு குழப்பமும் இல்லை.

நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வினை முன்வைக்க வேண்டுமெனில் மகிந்தவால் தான் முடியும் என்பது மக்களுக்கு நன்கு தெரியும். இதனை உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலேயே நாம் தெரிந்துகொண்டோம். எனவே, இந்த விடயத்தில் சந்தேகமே இல்லை.

19ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக மகிந்தவுக்கு நேரடியாக போட்டியிட முடியாது என்பதை மக்களும் அறிவார்கள். இதனால் தான் உரிய நேரத்தில் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் அறிவிப்போம் என்று மகிந்த கூறியுள்ளார்.

மகிந்த யாரை வேட்பாளராக நியமிக்கிறாரோ அவரை வெல்ல வைப்போம் என்பதில் மக்களும் உறுதியுடன் தான் இருக்கிறார்கள். இந்த நிலைப்பாட்டில் நாமும் உறுதியாகவே இருக்கிறோம்" எனப் பீரிஸ் மேலும் தெரிவித்தார். (இ-7)

இந்த ஆண்டில் இதுவரை 42 பேர் இலஞ்சம் பெற்ற குற்றவாளிகள்

விசாரணை ஆணைக்குழு தகவல்

(கொழும்பு)

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இலஞ்சம் பெற்றுக் கொண்ட சம்பவங்கள் தொடர்பில் 42 பேர் நீதிமன்றத்தால் குற்றவாளிகளாக அறியப்பட்டுள்ளதாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் மாத்திரம் இலஞ்சம் பெற்றுக் கொண்ட சம்பவத்தில் 57 பேர் நீதிமன்றத்தால் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்டதாக அந்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன தெரிவித்தார்.

இலஞ்சம் மற்றும் ஊழலை தடுக்கும் தேசிய செயற்பாட்டு திட்டத்திற்காக கருத்துக்களையும் யோசனைகளையும் பெற்றுக் கொள்வதற்காக நேற்று முன்தினம் மாலை கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் இலஞ்ச ஊழல் சம்பங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

கல்வித்துறையைப் பழிவாங்குவது கண்டிக்கப்பட வேண்டிய விடயம்

கல்வியமைச்சர் காரியவசம் காட்டம்

(கொழும்பு)

தனிப்பட்ட அரசியல் காரணங்களுக்காக கல்வித்துறையைப் பழிவாங்குவது கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும் என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கல்வியமைச்சில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

"அரசியல் பழிவாங்கல்களால் இன்று கல்வித்துறையும் பாதிக்கப்பட்டுள்ளது. ஒருசிலரின் தனிப்பட்ட அரசியல் பழிவாங்கல்களுக்காக கல்வித்துறையைப் பயன்படுத்துவது ஆரோக்கியமான விடயமல்ல.

அண்மையில் நான் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ஹிட்லரின் சில புகைப்படங்களைப் பிரதிபலிக்கின்றார் என ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தேன்.

இதற்குப் பதிலடியாக பத்திரிகையொன்று இன்று 4 ஆம் திகதி சகல பாடசாலைகளும் மூடப்படும் என்பதை தனது பிரதான செய்தியாக வெளியிட்டிருந்தனர். இதனை அரசியல் பழிவாங்கலாக கருதவேண்டும்.

ஊடக ஜனநாயகத்தை மீறும் வகையிலேயே இந்த செய்தியினை குறித்த ஊடகம் வெளியிட்டுள்ளது. 42 இலட்சம் பாடசாலை மாணவர்களினதும் கல்வி நடவடிக்கைகளை பாதிக்கும் வகை

லின் கல்வியைப் பாதிக்கும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிக் கோலடித்த பெல்ஜியத்தின் சால்டி

52

கடந்த 1966க்குப் பின் நடந்த உலகக்கிண்ண 'நொக் அவுட்' போட்டிகளில் 2 கோல் பின் தங்கி இருந்து, 90 நிமிட நேரத்துக்குள் மீண்டு வந்து வென்ற முதல் அணியானது பெல்ஜியம். 52 ஆண்டுக்கு முன் போர்த்துக்கல் அணி, வட கொரியாவுக்கு எதிரான காலிறுதியில் முதல் பாதியில் 0-3 என பின் தங்கி இருந்து, 5-3 என வென்றது.

பொங்கி எழுந்தது பெல்ஜியம்

• ஜப்பானை உதைத்தது • காலிறுதிக்கு நுழைந்தது

உலக கிண்ணத் தொடரின் காலிறுதிக்கு முன்னேறியது பெல்ஜியம். 'ரவுண்ட் 16' போட்டியில் கடைசி நிமிடத்தில் வீழ்ந்தது ஜப்பான்.

ரஷ்யாவில் நடக்கும் உலகக் கிண்ணத் தொடரின் 'ரவுண்ட் 16' போட்டியில் ஜப்பான், பெல்ஜியம் அணிகள் மோதின.

போட்டியின் 25ஆவது நிமிடம் ஜப்பான் கோல் லைனுக்கு அருகில் பந்தை (3.7 மீ.,) பெற்ற லூகாகு சற்று தடுமாற, சுதாகரித்த யோசிதா, பந்தை வெளியே அனுப்பினார். முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை.

அடுத்தடுத்து இரண்டு

இரண்டாவது பாதியில் மைதானத்தின் மையப்பகுதியில் சக வீரரிடம் இருந்து பந்தை வாங்கிய ஜப்பானின் ஹராகுசி (48ஆவது) முதல் கோல் அடித்தார். அடுத்த 4ஆவது நிமிடம் ஜப்பானின் ககவா பந்தை டகாஷி இனுயிடம் (52வது) கொடுத்தார். 23 மீ., தூரத்தில் இருந்து அப்படியே கோல் போஸ்ட் நோக்கி அடிக்க, பந்து வலைக்குள் சென்றது. ஜப்பான் அணி 2-0 என முன்னிலை பெற்றது.

இதன் பின் ஜப்பான் வீரர்கள் தற்காப்பு பகுதியில் கவனம் செலுத்தினர். இதனால் பதில் கோல் அடிக்க முடியாமல் திணறியது பெல்ஜியம்.

இந்நிலையில் பெல்ஜியம் வீரர் வெர்டாங்கென் (69ஆவது) கோல் பொக்சிற்கு வெளியே இருந்து தலையால் முட்டிய பந்து கோலாக மாறியது.

மனம் தளராமல் போராடிய பெல்ஜியம் அணிக்கு அணித் தலைவர் ஹசார்ட் உதவினார். இவர் இடது காலால் அடித்த பந்தை, தலையால் முட்டி கோல் அடித்தார் மாற்று வீரராக களமிறங்கிய பெல் லைய்னி (74ஆவது நிமிடம்).

இதனால் ஸ்கோர் 2-2 என சமன் ஆனது. எப்படியும் வென்று விடலாம் என திட்டமிட்ட ஜப்பான் அணிக்கு இது பெரும் 'ஷாக்' ஆனது. இரண்டாவது பாதியின் 'ஸ்ரொப்பேஜ்' நேரத்தின் கடைசி நிமிடம். மியுனியர் ஜப்பான் கோல் ஏரியாவுக்குள் பந்தை அனுப்பினார். இதைக் கவனித்த லுகாகு (பெல்ஜியம்) பந்தை அப்படியே விட்டுவிட, இது சக வீரர் சால்டிக்கு சென்றது. இதை கோலாக மாற்றினார் சால்டி (90+4ஆவது).

போட்டி முடிய 14 வினாடிகள் இருந்தபோது அசத்திய பெல்ஜியம் அணி 3-2 என 'திரில்' வெற்றி பெற்று, தொடர்ந்து இரண்டாவது முறையாக காலிறுதிக்கு முன்னேறியது. இதில் பிரேசில், பெல்ஜியம் அணிகள் ஜூலை 6இல் பலப்பரீட்சை நடத்துகின்றன.

1970க்குப் பின்

உலகக் கிண்ண வரலாற்றில் 1970க்குப் பின் 'நொக் அவுட்' போட்டிகளில் இரண்டாவது பாதியில் 2 கோல் பின் தங்கிய பின், மீண்டு வந்து வென்ற முதல் அணியானது பெல்ஜியம்.

48 ஆண்டுகளுக்கு முன் காலிறுதியில் மேற்கு ஜேர்மனி, இங்கிலாந்தை இதுபோல வீழ்த்தியது.

நெய்மர்; நீ நடிகன்டா!

வறுத்தெடுக்கும் சமூகவலைத்தளங்கள்

களத்தில் காயம் பட்டதாக கீழே விழுந்து அடிக்கடி நடிக்கும் நெய்மருக்கு 'ஒஸ்கர்' விருது தரலாம் என ரசிகர்கள் சமூகவலைதளங்களில் வறுத்தெடுத்து வருகின்றனர்.

பிரேசில் நட்சத்திர வீரர் நெய்மர் (வயது-26), சமீபத்தில் வலது கணுக்கால் மற்றும் கால் விரல் காயத்தில் இருந்து மீண்டார். உலக கிண்ணத் தொடரில் கொஸ்டாரிகாவுக்கு எதிரான போட்டியின் போது மட்டும் இவரை 10 முறை 'பவுல்' செய்தனர்.

ஒருமுறை எதிரணி வீரர் கையை வைத்து தள்ளியதாக கீழே விழுந்தார். உடனடியாக நடுவர் பிரேசில் அணிக்கு 'பெனால்டி' கொடுத்தார். ஆனால் 'வார்' குழு 'ரீப்ளே' செய்து பார்த்ததில் நெய்மர், தானாக விழுந்து நடித்தது தெரிந்தது. அடுத்து செர்பிய அணிக்கு எதிரான போட்டியில் இவரை 'பவுல்' செய்த போது காலை பிடித்துக் கொண்டு மைதானத்தில் படுத்து பலமுறை உருண்டார்.

'ரவுண்ட் 16' போட்டியில் மெக்சிகோ வீரர் மிக்குயல் கணுக்காலில் இடித்த போது கீழே விழுந்து உட்கார்ந்தார் நெய்மர். அப்போது இவரது கால்களுக்கு இடையே இருந்த பந்தை எதிரணி வீரர் எடுத்தார். திடீரென வலது கணுக்காலை பிடித்து உருளத் தொடங்கினார்.

மருத்துவ குழு வந்து சிகிச்சை செய்த பிறகு தான் மீண்டும் விளையாடினார். இதனால் நெய்மரை ரசிகர்கள் இணையதளத்தில் வறுத்தெடுத்து வருகின்றனர். பலர், இவர் அதிகமாக நடிக்கிறார் என்றும், இதற்கு ஒஸ்கர் விருது தர வேண்டும் என பேசி வருகின்றனர்.

இதுகுறித்து மெக்சிகோ அணி பயிற்சியாளர் மிக்குயல் லாயுன் கூறுகையில், "கால்பந்து போட்டிகளில் இப்படிச் செய்வது நல்ல முன்னுதாரணம் அல்ல. இவரால் எங்களுக்கு அதிகமான நேரம் வீணானது. இது கால்பந்துக்கு கிடைத்த அவமானம். ஏராளமான சிறுவர்கள், மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போது இப்படி நடிக்கக் கூடாது. இதனால் எங்களது வேகம் மற்றும் விளையாடும் 'ஸ்டைல்' பாதிக்கப்பட்டது," என்றார்.

ஒரே கோல்: ஓஹோ சுவீடன்

உலகக் கிண்ணத் தொடரின் காலிறுதிக்கு முன்னேறியது சுவீடன்.

நேற்று நடந்த 'ரவுண்ட் 16' போட்டியில் சுவிட்சர்லாந்தை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

ரஷ்யாவில் 21ஆவது உலகக் கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது.

இதன் 'ரவுண்ட் 16' போட்டியில் உலகத் தரவரிசையில் 6ஆவது இடத்தில் இருக்கும் சுவிட்சர்லாந்து, 24ஆவது இடத்தில் உள்ள சுவீடனை எதிர்கொண்டது.

போட்டியின் 8ஆவது நிமிடம் சுவீடன் அணி கோல் அடிக்க வாய்ப்பு கிடைத்தது.

தனிநபராக பந்தை கொண்டு சென்ற பெர்க், கோல் போஸ்டுக்கு அருகே சென்று பந்தை வெளியே அடித்து வீணடித்தார். அடுத்த நிமிடம் சுவீடன் வீரர் ஏக்தல், தன் பங்கிற்கு பந்தை கோல் போஸ்ட் மேலாக அடித்து ஏமாற்றினார்.

எல்லாம் 'வேஸ்ட்'

ஆட்டத்தின் 28ஆவது நிமிடம் சுவீடனின் போர்ஸ்பெர்க்கிடம் இருந்து வாங்கிய பந்தை கோலாக மாற்ற முயன்றார் ஏக்தல். இந்த பந்தை கோல்காப்பாளர் சோம்மர் (சுவிட்சர்லாந்து) எளிதாக தடுக்க மீண்டும் சுவீடன் கோல் வாய்ப்பு நழுவியது.

சுவிட்சர்லாந்து தரப்பில் 36 மீ., தூரத்தில் இருந்து கிராண்ட் ஜக்கா அடித்தது, 38ஆவது நிமிடம் அகன்ஜி அடித்தது, சுவீடன் கோல் போஸ்ட் மேலாக சென்றன. இந்நிலையில், சுவீடனின் லஸ்டிக் கொடுத்த 'பாசை' பெற்ற ஏக்தல், மறுபடியும் போஸ்டுக்கு வெளியே அனுப்பி ரசிகர்களை வெறுப்பேற்றினார். முதல் பாதி கோல் எதுவுமில்லாமல் முடிந்தது.

வெற்றி நம்பிக்கை

கடந்த 3 போட்டிகளில் முதல் பாதி சமமாக இருந்த போட்டிகளில் சுவீடன் வென்றதால் வீரர்கள் நம்பிக்கையுடன் போராடினர். இதற்கு 66ஆவது நிமிடம் நல்ல பலன் கிடைத்தது. சுவீடனின் போர்ஸ்பெர்க் அடித்த பந்து, சுவிட்சர்லாந்தின் மானுயல் அகன்ஜி வலது காலில் பட்டு விலகி கோலாக மாறியது. இரண்டாவது பாதியின் 'ஸ்ரொப்பேஜ்' நேரத்தில் (90+3வது) லாங், சுவீடன் ஆல்ஸ்சனை 'பவுல்' செய்து 'ரெட் கார்ட்' பெற்றார்.

அதன்போது நடுவர் கொடுத்த 'பெனால்டி', 'வார்' முறையில் 'ரீப்ளே' பார்க்கப்பட்டு 'பிரீ கிக்' ஆக மாற்றப்பட்டது.

முடிவில் சுவீடன் அணி 1-0 என வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

கடந்த 1954க்குப் பின் உலக கிண்ணத் தொடரின் 'நொக் அவுட்' சுற்றில் ஒரு கோல் கூட அடிக்காத சுவிட்சர்லாந்து, நேற்றும் ஏமாற்ற சோகத்துடன் வெளியேறியது.

கோலடித்த சுவீடனின் போர்ஸ்பெர்க்

மாறிய வரலாறு

உலகக் கிண்ணத் தொடரில் 1958, காலிறுதியில் சுவீடன் அணி, ரஷ்யாவை 2-0 என வென்றது. அரையிறுதியில் மேற்கு ஜேர்மனியிடம் 1-3 என தோற்றது. அன்று முதல் உலக கிண்ணத் தொடரில் சுவீடன் அணி அடுத்தடுத்த போட்டிகளில் வென்றது இல்லை.

இம்முறை லீக் சுற்றில் மெக்சிகோவை 3-0 என வென்றது சுவீடன், நேற்று சுவிட்சர்லாந்தை வீழ்த்தி சாதித்தது.

6

உலக கிண்ணத் தொடரில் ஆறாவது முறையாக (1934, 1938, 1950, 1958, 1994, 2018) காலிறுதிக்கு முன்னேறியது சுவீடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப் புலிகளை மீள உருவாக்க வேண்டும்

அமைச்சர் விஜயகலாவின் கருத்தால் நாடாளுமன்றத்தில் கூச்சல் குழப்பம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்த கருத்தினால் நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்த கருத்து தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

இதன்போது சபாநாயகர், குறித்த விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதாக தம்மிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியதாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அவரது இராஜாங்க அமைச்சு பதவியை நீக்கக் கோரி கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோஷமிட்டமையால் நாடாளுமன்றம் சிறிது நேரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

தமிழர்கள் அனுபவித்து வரும் கொடுமைகளைப் பார்க்கும் போது மீண்டும் நாம் தமிழீழ விடுதலைப் புலிகளை உருவாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் எஸ்.இந்திரகுமார் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினர், பொறியியலாளர் ஏ.திருமூலன், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தராஜா, கௌரவ விருந்தினராக மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் எஸ்.கோடீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிறுவுநர் நினைவுரையினை ஓய்வுபெற்ற நீதிபதி ஆ.வசந்தசேனன் நிகழ்த்துவார். (இ-8)

தென்மராட்சி பிரிவில் ஒருவருட கால இலவச தையல் மனைப்பொருளியல் பயிற்சி முகாம்

இடம்: மிருசுவில் படித்த மகளிர் திட்டம்

தென்மராட்சி பிரிவில் படித்த மகளிர் திட்டத்தில் மகளிருக்கான ஒரு வருட கால தையல் மனைப் பொருளியல் பயிற்சிகள் நடைபெறும். பயிற்சி நிறைவடையும் காலப் பகுதியில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

20.07.2018 இற்கு முன் விண்ணப்பிக்கவும். விண்ணப்படிவங்களை தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்திப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக தொடர்புக்கு:

077 977 3165

(3135)

சிங்கள ராவய பொலிஸில் முறைப்பாடு

(கொழும்பு)

விடுதலை புலிகள் அமைப்பு தொடர்பில் இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் நேற்று முன்தினம் யாழில் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில் சிங்கள ராவய அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

அமைச்சருக்கு எதிராக பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விடுதலை புலிகள் மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும். விடுதலை புலிகள் இருந்த காலத்தில் அதிக சுதந்திரமாக வாழ முடிந்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சரின் இந்த கருத்து தொடர்பில் மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளதாக சிங்கள ராவய அமைப்பின் செயலாளர் மாகல்கந்த சுகந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விஜயகலா கருத்து வெளியிட்ட நிகழ்வில் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவும் கலந்து கொண்டுள்ளார். இந்த கருத்து தொடர்பில் அமைச்சர் வஜிரவிடம் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

"விஜயகலா சிறுவர் விவகாரங்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சராக செயற்படுகின்றார். இதனால் யாழில் சிறுமி கொல்லப்பட்ட விடயத்தில் அவர் மிகவும் வருத்தமாக இருந்தார். விடுதலை புலிகள் இருந்த காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு கொலையாளி கொல்லப்படுவார். எனவே அவ்வாறான சூழ்நிலை பொறிமுறை ஒன்று அவசியம் என்று கூறவில்லை. இவ்வாறான சம்பவங்களுக்கு சட்டத்தை செயற்படுத்த வேண்டும் என கூறவே அவர் முயற்சித்தார்" என அமைச்சர் வஜிர அபேவர்த்தன விளக்கமளித்தார். (இ-7)

வடக்கு பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டி ஆரம்ப நாள் விழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வித் திணைக்களம் நடத்தும் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகளின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் க.சர்வேஸ்வரன் கலந்து கொள்வார்.

இறுதி நாள் விழா எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிறப்பகல் 4 மணியளவில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வடக்கு மாகாண இளைஞர் விவகார கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். (இ-8)

அந்தியேஷ்டி சபிண்டீகரண அழைப்பு

சின்னத்துரை அருந்தவராசா

(தவம்)

கடந்த 2018.06.07 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர். சின்னத்துரை அருந்தவராசா (தவம்) அவர்களின் அந்தியேஷ்டி சபிண்டீகரண கிரியைகள் 05.07.2018 வியாழக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில்

எமது இல்லத்தில் நடைபெற்று அஸ்தியானது கீரிமலை புனித தீர்த்தத்தில் கலக்கப்படும். அந் நிகழ்விலும் 07.07.2018 சனிக்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். (சி-3137)

வீரபத்திரர் கோவிலடி,
உடுப்பிட்டி தெற்கு, உடுப்பிட்டி

-குடும்பத்தினர்-

இராசி பலன்

கிரகநிலை

சந்திராஷ்டமம்
ஆயிலியம்
இரவு 8.20 மணிக்கு
மீன-சந்

சூரி
சந்
சுக், ராகு, புத
கேது, செவ்
சனி
குரு

04.07.2018

ஆனி 20, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு

சஷ்டி முன்னிரவு 8.33 மணிவரை

பூரட்டாதி பின்னிரவு 2.28 மணிவரை

சுபநேரம் 4.27-5.57 மணிவரை

இராகுகாலம் 11.57-1.27 மணிவரை

சுவாமி விவேகானந்தர் நினைவு தினம்

வளவன்

மீனம்

மனதில் இனம் புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களை நிறைவேற்றுவதில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

மேடம்

பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

இடபம்

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

மிதுனம்

உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பூர்வீகச் சொத்துக்களில் ஆதாயமுண்டு, வழிபாடு மகத்துவம் தரும்.

கும்பம்

சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, உறவினர்கள் சந்திப்பு இடம் பெறலாம், போசன சுக முண்டு, முயற்சியில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

கடகம்

குடும்பத்தினரிடையே சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், கற்பனை மிகுதியான நாள்.

மகரம்

பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய தகவல்கள் உங்களைத் தேடி வரலாம்.

சிம்மம்

புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கனவு பலிதமுண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை நிறைவேற்றுவீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சிதரும்.

தனுசு

மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

விருச்சிகம்

புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், முன்னேற்ற பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

துலாம்

பிள்ளைகளால் மகிழ்ச்சி கூடும், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், நிதானமான சுபாவமுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

கன்னி

எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறலாம், உடல்நலன் சீராகும், கூட்டு முயற்சி வெற்றி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org aavanaham.org

பேதங்களை மறந்து எதிர்காலச் சந்ததியினருக்கான நல்லதோர் சமுதாயத்தை உருவாக்க வாரீர்!

றெஜினா சிவனேஸ்வரன் எனும் ஆறு வயதுப் பச்சிளம் பாலகி பாதகச் செயலால் அநியாயமாகப் பலியானது அனைவரது நெஞ்சங்களையும் பதை பதைக்க வைத்துள்ளது. காட்டுப்புலம் எனும் இக் கிராமத்திலே குறிப்பிட்ட காலத்துள் நடந்தேறியுள்ள மூன்றாவது கொலை இதுவாகும்.

அண்மைக்காலமாக இக்கிராமத் தில் மட்டுமல்லாது வடபுலம் முழுவ துமே மனித குலத்தை அச்சங்கொள்ள வைக்கும் செயல்கள் நடந்தேறிய வண்ணம் உள்ளன.

இத்தகைய செயல்களுக்கான பிர தான காரணம் அரசல் புரசலாக அறி யப்பட்டாலும், எமது சக்திக்குப்பட்ட வகை யில் இவற்றைத் தடுப்பதற்காக நாம் ஏதா வது செய்தே ஆக வேண்டும் என சில சமூக ஆர்வலர்கள் முற்பட்டனர்.

தவறான செயல்களுக்குத் தண் டனை வழங்கப்பட்டே தீர வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமே இல்லை. அதேவேளை இத்தகைய பாதகச் செயல்கள் இனி மேலும் நட வாது தடுக்கப்பட வேண்டும்.

அதன் முதற்கட்டமாக, காட்டுப்புலம் கிராமத்திலே பல்வேறு தரப்பினரு டனும் கலந்துரையாடப்பட்டது. அக் கிராம மக்கள் பல்வேறு பிரச்சினை களுக்கு முகம் கொடுப்பது அவதானி க்கக் கூடியதாகவிருந்தது. குறிப்பாக, இளவயதினர் பாடசாலையிலிருந்து இடைவிலகி எவ்வித குறிக்கோளு மின்றி அநியாயமாகிப் போவதே இக்கிராமத்தில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரண மாகும் என அறியப்பட்டது.

பாடசாலைகளுக்குச் செல்வதற் கான வீதி மிகவும் பழுதடைந்த நிலை யில் காணப்படுவதால் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வது தாமதமாவ தும் பெற்றோரின் வறுமை நிலை காரண மாக மாணவர் இடைவிலக நேர்வதும் பிரதான காரணிகளாகும்.

இத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற் கான குறுகியகால மற்றும் நீண்டகால செயற்றிட்டங்கள் பற்றிச் சிந்திக்கப்பட்டது. அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான வளங்கள் பற்றி ஆராயப்பட்டது. அந்தவகை யிலே, உடனடியாக, இடை விலகிய சுமார் இருபத்தைந்து இளவயதினருடைய பொழுது பயனுள்ளதாகக் கழிய வேண் டும். அவர்கள் ஆற்றுப்படுத்தப்பட வேண் டும். அவர்களது வேலைவாய்ப்புகளுக் கான வசதி வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக் கப்பட வேண்டும். அக்கிராம மக்களது வாழ்வாதாரம் உயர்த்தப்பட வேண்டும்.

நீண்டகால நோக்கில், அனைத்து மாணவர்களும் பாடசாலைக்குச் செல்லு தல் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

மனித விழுமியங்கள் அவர்களின் மனதிலே விதைக்கப்படவேண்டும். இதற்கான பரீட்சார்த்தமான பரிசோதனை முயற்சி ஒன்று மேற்கொள்ளத் தீர்மா னிக்கப்பட்டது.

அந்தவகையிலே, அரசு மற்றும் அரசி யல்வாதிகளை விட எமக்குள்ள மிகப் பெரிய பலம் யாது என்ற கேள்விக்கு" தெய்வமே", அதாவது ஆலயங்களே, என்ற விடை கிடை த்தது.தெய்வம்உறைந்து அருள் பாலிக்கும் இட மாக, சமய மனித விழுமியங்களை வளர்க்கும் இடமாக, ஆற்றுப்படுத்தும் இடமாக மற்றும் கலை, கலாசாரம் பேணப்படும் இடமாக ஆலயங்கள் விளங்குகின்றன.

அதேவேளை, சில ஆலயங்கள் தவிர, பெரும்பாலானவை சமூக அக்கறையின்றி மிகப்பெரும் பணத்தினைக் கட்டடங்க ளுள் தேவையின்றி முடக்குவதாக வாதிடு வோரும் உளர். இத்தகையோரின், கடவுள் நம்பிக்கை யுடன் கூடிய சமூக அக்கறையை இப்பரீட் சார்த்த முயற்சியில் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்தின் செயன் முறை வடிவமாக, எமது பிரதேசத் திலுள்ள ஆலயங்களில் அறக்கட்டளை களை ஆர ம்பிக்குமாறு பரிபாலன சபையி னரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இச்சம்பவம் நடைபெறுவதற்கு சிறிது காலத்திற்கு முன்பே வழக்கம்பரை அம்

மன் ஆலயத்தில் கலந்துரையாடப்பட்டு ஏற் பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம், பறாளாய் முருகன் ஆலயம், கம்பனை அம்மன் ஆலயம், சுழிபுரம் பெரியதம்பிரான் ஆலயம் மற்றும் சுழிபுரம் பத்திரகாளி கோவில் ஆகிய ஆலயங்களின் பரிபாலன சபையினருடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

வேலைத்திட்டத்தின் அவசர அவசியம் கருதி, வழக்கம்பரை அம்மன் ஆலய அறக் கட்டளை உத்தியோகபூர்வமாக அறிவிக் கப்பட்டதும் வழங்கப்பட இருந்த நிதியில் இரு ந்து அன்பரின் அனுமதியுடன் நிதியானது இத்திட்டத்திற்குப் பயன்படுகிறது.

கடந்த ஞாயிறன்று அந்த இளைஞர்க ளுடனான கலந்துரையாடல் ஒன்று மேற் கொள்ளப்பட்டது. அவர்களது ஆதங்கங்கள் விளங்கிக் கொள்ளப்பட்டன. அவர்களா கவே தங்களது வாழ்வை வளம்படுத்து வதற்கு சிந்திக்கவும் செயற்படவும் தூண்டப் பட்டது. அவர்களது வேண்டுகோளிற்க மைய இந்நிதியத்திலிருந்து ஒரு தொகை விளை யாட்டு உபகரணங்கள் உடனடியாகவே அன்பளிப்புச் செய்யப்பட்டன.

மேலும், அவர்களுக்கான தொழிற் பயிற் சிகள் வழங்குவதற்கான தொடர்புகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

முக்கியமாக, பாடசாலை மாணவர்கள் இடை விலகுவதற்கு பிரதான காரணியான போக்குவரத்துத் தடையை நீக்கும் முக மாக காலையும் மதியமும் வாகன ஒழு ங்கு செய்யப்பட்டுள்ளது. இதற்கும் இந்நிதியே பயன்படுகிறது. இச்சேவையினைப் பயன் படுத்தத் தொடங்கியுள்ள மாணவர்களின் எண்ணிக்கை எழுபத்து ஒன்பது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தகைய செயற்றிட்டங்கள் எமது வடமாகா ணத்திலே ஆங்காங்கே நடைபெற்று வருவ தனை இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். ஆனா லும், இத்தகைய நடவடிக்கைகள் மேலும் வலுப் படுத்தப்பட வேண்டும். முக்கியமாக ஒருங் கிணைக்கப்பட வேண்டும்.

சமூக ஆர்வலர்கள், புத்திஜீவிகள், ஆன்மீக வாதிகள், அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர் கள் என அனைவரும் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அனைத்து பேதங் களையும் மறந்து எமது எதிர்கால சந்ததியின ருக்கான நல்லதோர் சமுதாயத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டிய தார்மீகக் கடப்பாடு எமக்குரி யது. வழி தெரியாது தடுமாறும் இளைய சமுதாயத் தினருக்கு அவர்களின் முக்கியத்துவத்தை உணர்த்துவோம், வழிகாட்டுவோம், நாமும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டுவோம்.

நிறைவாக, நாம் மற்றவர்களைக் குறை கூறுவதனை விடுத்து, மற்றவர்களில் தங்கியி ருப்பதனை விடுத்து அனைத்து வளங்களையும் ஒருங்கிணைத்து எம்மாலான சமூகப்பணி தனை ஆற்ற முன் வருவோமாக.

கலாநிதி செல்வம் கண்ணதாசன்
யாழ். மருத்துவபீடம்

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தின் சர்வதேச விஞ்ஞான ஆராய்ச்சி மாநாடு

(யாழ்ப்பாணம்)

வளமான எதிர்காலத் திற்காய் விஞ்ஞானத்தினூ டான ஓர் தேடலில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக விஞ் ஞானபீடத்தின் முதலாவது சர்வதேச விஞ்ஞான ஆராய் ச்சி மாநாடு **"Vingnanam International Research Conference 2018"** (VIRC-2018), இன்று புதன்கிழமை, பேரா சிரியர் திருமதி. சி.குகநாதன் தலைமையில் நடைபெறவு ள்ளது.

இம்மாநாட்டில் விஞ் ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி, திறன்கள் அபி விருத்தி மற்றும் வாழ்க் கைத் தொழில்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமை ச்சர் கலாநிதி சரத் அமுனுகம பிரதம விருந்தினராகவும் யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ஆர். விக்னேஸ்வரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இன்றுபுதன்கிழமைகாலை 8 மணிக்கு ஆரம்பமாகும் இந்த மாநாட்டில் கலாநிதி. எல். வீரகுமாரி **(Pach aiyappa's college, India)**, பேரா சிரியர். எல். சோதீஸ்வரன் **(The University of the South Pacific, Fiji)**, கலாநிதி.கே. பர்வதம் **(Sri Sairam Engineering College, India)**, மற்றும் பி.சயந்தன் **(Director of Operations at Apptizer. Inc, CBDO at hSenid Mobile and Founding member of Yarl IT Hub)** ஆகியோர் ஆதாரச் சுருதி உரை யாற்றவுள்ளதுடன் பன்னாட்டு ஆய்வாளர்கள் தமது ஆரா ய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப் பிக்கவுள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது. (இ-7)

நாவலர் சனசமூக நிலைய விளையாட்டுப்போட்டி

திருநாவலூர் சனசமூக நிலையத்தின் நாவலர் இல வச பாலர் கல்வி நிலைய வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் சனிக்கி ழமை பிற்பகல் 2 மணிய ளவில் மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலய மைதானத்தில் நாவலர் சன சமூக நிலையத் தலைவரும் ஆரம்பப் பிள்ளைப்பருவ முகாமைத்துவக் குழுத் தலை வருமான வ.ச.செல்வராசா தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விரு ந்தினராக வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநா தன், சிறப்பு விருந்தினர்க ளாக பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.சா.அரி யகுமார், யாழ்.மேலைப்பு லோலி சைவப்பிரகாச வித்தி யாலய அதிபர் பொ.பொன் னம்பலம், புலோலி மேற்கு கிராம உத்தியோகத்தர் செல்வி சி.சிவாஜினி, புலோலி மேற்கு பொருளாதார அபி விருத்தி உத்தியோகத்தர் ச.தீபராசா, குடும்பநல சுகா தார சேவை உத்தியோகத்தர் திருமதி பிரியா அஜந்தன் ஆகியோர் கலந்து கொள் வர். (இ-8)

2017 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டுவிழா அல்லையூர் இணையத்தின் அனுசரணையில் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பண்டிதர் செல்லையா திருநாவுக்கரசு, சிறப்பு விருந்தினர்களாக அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய அதிபர் கோ.பத்மநாதன், அல்லையூர் இணையத்தின் அறப்பணிக் குழும்பத்தின் இயக்குநர் செ.ஆனந்தக்கரசு கௌரவ விருந்தினர்களாக கடற்றொழில் சங்கத்தலைவர் ப.றொபேட் பெலிக்ஸ், விவசாய சம்மேளனத் தலைவர் சுபர விநாயகமூர்த்தி, சமூகநலன் விரும்பி த.கேதாரநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் மக்கள் மீளக்குடியமர முடியாது

முதலமைச்சர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டாலும் மக்களுக்குரிய தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் அங்கு அவர்கள் மீள குடியமர முடியாது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மற்றும் அரச அதிகாரிகளுக்கிடையிலான கலந்துரையாடல்நேற்று முன்தினம்யாழ்மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில், வடமாகாணத்தில் காணிகள் திருப்பிக் கொடுப்பது ஆமை வேகத்தில் செல்வதாகவும் விடுவிக்கப்பட்ட காணிகளில்கூட பல மக்கள் திரும்பப் போய்க் குடியிருக்கவில்லை என தான் அறிந்ததாகவும்அதுதொடர்பானஉண்மை நிலையை தெரிவிக்குமாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கோரியிருந்தார்.

விடுவித்த காணிகளில் எல்லாம் பல்வேறு காரணங்களால் மக்கள் மீள் குடியேறவில்லை என்பதை தெரிவித்த முதலமைச்சர், காணிகள் கிடைத்தும் வீட்டுத்திட்டம் தமக்குக் கிடைக்காததால் வீடு கட்ட முடியாமல் காணியில் குடியேறாமை, காணிகளுக்கு அருகில் இராணுவம் குடிகொண்டிருப்பதால் தமது காணிகளில் மீள்குடியேற முடியாத நிலை, விடுவித்தும் சில காணிகளை இராணுவம் விட்டு அகலாத படியால் குடியேற முடியாமை போன்ற காரணங்களை சுட்டிக்காட்டியிருந்தார்.

மேலும்சுமார்50வீத காணிகளே திரும்பக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் மேலும் 50 வீத காணிகள் திரும்பக் கையளிக்க வேண்டும் எனவும், தெரிவித்த முதலமைச்சர் தம்வசம் உள்ள காணி பற்றிய ஆவணமொன்றை அமைச்சருக்கு அனுப்புவதாக தெரிவித்தார். (இ-9)

மாசேரி மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டது

(வரணி)

கடந்த சனிக்கிழமையன்று (30.06.2018) மாசேரி கிராம அபிவிருத்திச் சங்கத்தில் இடம்பெற்ற கிராம அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில் மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக் கைகளில் ஒன்றான குடிநீர் வழங்கப்படுதல் வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளரால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை குடிநீர்த் தாங்கி ஒன்று பொது இடத்தில் வைக்கப்பட்டு பௌசர் மூலம் குடிநீரும் நிரப்பப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக மக்களுக்கு நீர் வழங்கப்படும் என்றும் தவிசாளர் தெரிவித்துள்ளதுடன் இன்னொரு குடிநீர்த்தாங்கியும் கலைமகள் சனசமூக நிலையத்தில் வைத்து மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை போக்குவதாக தவிசாளர் உறுதியளித்துள்ளார். எனவே தான் வழங்கிய உறுதிமொழியை நடை முறைப்படுத்திய சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளருக்கு கிராம மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர். (இ-103)

நியூயோர்க் ரைம்ஸிற்கு தகவல் வழங்கிய பத்திரிகையாளர்கள் மிரட்டப்படுகின்றனர்

மகிந்த ஆதரவாளர்கள் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகம் குறித்த செய்திகளுக்காக தகவல்களை வழங்கிய பத்திரிகையாளர்களை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு நெருக்கமான அரசியல்வாதிகள் அச்சுறுத்தி வருவதாக நியூயோர்க் ரைம்ஸ் தெரிவித்துள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான துல்லியமான புலனாய்வு செய்திக்கான தகவல்களை வழங்கிய இரு பத்திரிகையாளர்களை முன்னாள் ஜனாதிபதிக்கு நெருக்கமான அரசியல்வாதிகள் பகிரங்கமாக விமர்சித்துள்ளனர் என நியூயோர்க் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

பத்திரிகையாளர்கள் இவ்வாறான விதத்தில் அச்சுறுத்தப்படுவதை ஏற்க முடியாது என நியூயோர்க் ரைம்ஸின் சர்வதேச பதிப்பிற்கான ஆசிரியர் மைக்கல் ஸ்லக்மன் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்ரைம்சிற்கும் ஏனைய பத்திரிகைகளிற்கும் பணியாற்றும் பத்திரிகையாளர்களின் பாதுகாப்பை இலங்கை அதிகாரிகள் உறுதி செய்யவேண்டும் என நியூயோர்க் ரைம்ஸ் எதிர் பார்க்கின்றது எனத் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ நியூயோர்க் ரைம்ஸ் கட்டுரை தொடர்பாக எங்களுடன் தொடர்பு கொள்ள விரும்பினால் அவர் பத்திரிகையாளர்களை அச்சுறுத்துவதை விடுத்துவிட்டு எங்களுடைய மூத்த பத்திரிகையாளர்களை அவர் தொடர்புகொள்ளவேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

பரு.நகரிலுள்ள மதுபானசாலையை வேறு இடத்திற்கு மாற்றக்கோரிக்கை

(சாவகச்சேரி)

பருத்தித்துறை நகரில் சட்டத்திற்கு முரணான வகையில் இயங்கி வரும் மதுபானசாலையை வேறு இடத்திற்கு மாற்ற உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் பருத்தித்துறை நகரசபை உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து பொது மக்கள் மேலும் தெரிவிக்கையில், இந்த மதுபானசாலையால் பருத்தித்துறை நகரத்திற்கே கலாசார சீரழிவு ஏற்படுவதுடன் பாடசாலைக்கு அருகாமையில் அமைத்துள்ளதால் பல மாணவர்கள் மதுப் பாவனைக்கு அடிமையாகி வருகின்றனர். இந்த மதுபானசாலையை மூடக் கோரி பல போராட்டங்களை நடத்தியும் அரசியல் செல்வாக்கு காரணமாக தொடர்ச்சியாக இயங்கி வருகிறது. அத்துடன் இது தொடர்பாக நீதிமன்றில் வழக்கு தாக்கலும் செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக மதுபான சாலை உரிமையாளர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் தனிப்பட்ட முறையில் தகராறில் ஈடுபட்டுள்ளார். இது தொடர்பாகவும் மக்கள் பிரதிநிதிகளின் உதவியுடன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். உரிய அமைப்புகள் மற்றும் அதிகாரிகள் உரிய கவனம் செலுத்தி குறித்த மாதுபான சாலையை பொருத்தமான ஒதுக்குப்புறமான இடத்திற்கு மாற்றுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-30)

துரையப்பா வித்தியாலய பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் பரிசளிப்பு தினம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் நடேசு தயாளன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் கலந்து கொள்வார். (இ-8)

கடற்கரை வீதி புனரமைக்கப்படும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட உதய சூரியன், மகிழங்கேணி மற்றும் லிகோரியார் மக்கள் பயன்படுத்துகின்ற சுமார் 2கிலோ மீற்றர் தூரம் உள்ள கடற்கரை வீதி புனரமைத்து கொடுக்கப்படும் என சாவகச்சேரி நகரசபை தவிசாளர் சிவமங்கை இராமநாதன் தெரிவித்துள்ளார். இந்த கிராம மக்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், சாவகச்சேரி -மகிழங்கேணி பிரதேசத்தில் மாரி காலத்தில் வெள்ளப் பிரச்சினை தலை தூக்குகிறது. இராணுவ உதவியுடன் பழைய இடிபாடுகள் கொண்டு ஓரளவிற்கு போக்கு வரத்தினை சீர்செய்துள்ளனர்.மகிழங்கேணி-தனங்கிளப்பு வீதியினை தற்போது உடனடியாக திருத்த முடியாத நிலை காணப்படுகிறது. வீதி அபிவிருத்தி அதிகார சபையினருடன் கலந்துரையாடி எதிர் காலத்தில் இந்த கடற்கரை வீதி அமைக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். தென்மராட்சி பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட தரவை காணிகளில் கடலை மிக அண்டி 60 க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எந்த வொரு அடிப்படை வசதிகளும் இன்றி வாழ்ந்து வருகின்றனர் என்பதுகுறிப்பிடத்தக்கது. (இ-30)

நியூயோர்க் ரைம்ஸ் செய்தி குறித்து சட்ட ரீதியாக ஆராயப்பட வேண்டும்

ஐ.தே.க. எம்.பி.வலியுறுத்து

(கொழும்பு)

நியூயோர்க் ரைம்ஸ் ஊடகம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறித்து வெளியிட்டுள்ள செய்தி தொடர்பிலான உண்மைத்தன்மை சட்ட ரீதியாக ஆராயப்பட வேண்டும். அது குறித்து பாராளுமன்றத்திலும் விவாதிக்கப்பட வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இந்துநில் துஷார அமரசேன தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட தீர்மானம் தொடர்பில் விளக்க மளிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

பிரபல்யமான வெளிநாட்டு ஊடகமொன்றில் இலங்கை செய்தி வெளியாகியுள்ளமை ஆராயந்து பார்க்க வேண்டிய ஒரு விடயமாகும். எமது நாட்டிலிருந்து தகவல்கள் வழங்கப்படாமல் அவர்களால் செய்தியை வெளியிட்டிருக்கமுடியாது. எனவேஇதனை சாதாரண விடய மாக கருத முடியாது.

மகிந்த தரப்பினர் இந்த விடயம் தொடர்பில் பல்வேறு கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். இந்த செய்தி உண்மைக்கு புறம்பானது எனவும் குறிப்பிடுகின்றனர். அப்படியென்றால் அவர்கள் அதனை நிரூபிக்க வேண்டும். இல்லையெனில் அந்த ஊடகத்திற்கு எதிராக சட்ட நடவ டிக்கை களை மேற்கொள்ள வேண்டும் ஆனால் அவர்கள் வெறும் வார்த்தைகளிலேயே உண்மையை மறைக்க முயற்சிக்கின்றனர்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேரணை விடயத்தில் மகிந்த தரப்பினரால் அரசாங்கத்திற்கு பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. எனினும் அதனை அவர்களால் வெற்றி கொள்ள முடியாமல் போனது. தற்போது அவர்களால் மேற் கொள்ளப்பட்ட மோசடிகள் வெளிவரும் போது அதனை பொய்யாக்க முயற்சிக்கின்றனர்.

எனினும் இது எளிதில் விடக் கூடிய சாதாரண விடய மல்ல. இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டியது அவசிய மாகும். அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

துப்பாக்கி வைத்திருப்போருக்கு பொலிஸாரின் அறிவுறுத்தல்

(கொழும்பு)

துப்பாக்கி வைத்திருப்பவர்கள் அதற்கான அனுமதிப் பத்திரத்தினை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் துப்பாக்கிக்கான அனுமதியை கொண்டிருப்பவர்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பித்து உறுதிப் படுத்திக் கொள்ளுமாறு பொலிஸ்தலைமையகம் அறிவுறுத்தியுள்ளது.

நாட்டில் அண்மைக்காலமாக இடம்பெறுகின்ற வன்முறைச் சம்பவங்களுக்கு துப்பாக்கிகள் பயன்படுத்தப் படுகின்றமை அதிகரித்துள்ளதுடன் அனுமதிப்பத்திரமின்றி பலர் துப்பாக்கி வைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த மாதம் 35 டெங்கு நோயாளர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் அடையாளம்

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மாதம் மட்டும் 35 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டு 35 பேரின் இரத்த மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பட்டுள்ளதாகவும் மாவட்ட சுகாதாரப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒவ்வொரு வருடமும் ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிப்பது வழமையாகும். (முன்னைய ஆண்டுத் தரவுகளின் அடிப்படையில்).

ஆனால் இவ்வாண்டில் ஜூன் மாதத்திலேயே இது வரை 35 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். இது வழமைக்கு மாறானது என சுகாதாரத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னைய வருடங்களில் சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப்பிரிவின் இணையத்தளத்திலுள்ள தரவுகளின் படி கடந்த 2017 ஆம் ஆண்டின் ஜூன் மாதத்தில் ஆகக் கூடியது 21 டெங்கு நோயாளர்களே இனங்காணப்பட்டிருந்தனர்.

அத்துடன் இவ்வாண்டின் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 170 டெங்கு நோயாளர்கள் கிளிநொச்சியில் இனங்காணப் பட்டுள்ளனர்.

இது குறித்து சமுதாய மருத்துவ நிபுணர்களைத் தொடர்புகொண்டு வினவிய போது, 'கடந்த வருடம் ஜூன் மாதத் தரவுகளுடன் ஒப்பிடுகையில் ஜூன் மாதம் முடிவதற்கு முன்னரே மிக அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இது ஆபத்தான அறிகுறியாகும் எனத் தெரிவித்தனர்.

எனவே பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகள் உடனடியாக உணர்ந்து தத்தமது பிரதேசங்களில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிடின் இவ்வருட இறுதிக்குள் பாரிய டெங்குப் பரவலைக் கிளிநொச்சி மாவட்ட மக்கள் எதிர்கொள்ளவேண்டி வரலாம் என்றும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (2-312)

வருடாந்த ஒன்றுகூடல்

கிளி/ பூநகரி மத்திய கல்லூரி உயர்தர மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் கல்லூரி பிரதான மண்டபத்தில் உயர் வகுப்பு மாணவர் மன்றத்தலைவர் எல்.சதீஸ் தலைமையில் நடைபெறும் எனக் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவியும் பொறியியலாளருமான பிரான்சிஸ் ஜஸ்மின் ஜீவமலர், சிறப்பு விருந்தினராக பூநகரிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். தருமரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளனர். (2-84)

பூநகரி முக்கொம்பன் சந்தை திறப்பு விழா

(பூநகரி)

பூநகரி முக்கொம்பனில் புதிதாக அமைக்கப்பட்ட சந்தை எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வர்த்தக நடவடிக்கைகளுக்காக திறந்து வைக்கப்பட்டவுள்ளதாக பூநகரி பிரதேச சபை தவிசாளர் அருணாசலம் ஐயம்பிள்ளை தெரிவித்துள்ளார். பல கிராமங்களை உள்ளடக்கியதாக சுமார் 450 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழும் இப் பிரதேசத்தில் சந்தை அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையில் இச்சந்தையை திறந்து வைப்பதன் மூலம் தீர்க்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நீர் வளமும் நிலவளமும் உள்ள இப் பிரதேசத்தில் பெருந் தொகையான மரக்கறி வகைகள் செய்கை பண்ணப்படுவது குறிப்பிடத்தக்கது. (2-84)

மூக்குக் கண்ணாடிகள் வழங்கி வைப்பு

(பூநகரி)

பொலிஸ்மா அதிபரின் பணிப்பிற்கமைவாக பூநகரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பூநகரி அரசினர் வைத்திய சாலையில் இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

பூநகரி பொலிஸ் நிலைய அதிபர் கே.எம்.கபில பண்டார தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பூநகரி அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரியும் கலந்து கொண்டிருந்தார்.

(BISHOP ISHI MISSION வன்னி மாவட்ட அனுசரணையோடு நடைபெற்ற இச் சேவையில், பயன்படக் கூடிய மூக்குக் கண்ணாடிகளை சுமார் 100 இற்கு மேற்பட்டோர் கண் பரிசோதனைகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-84)

இந்திய அரசின் நிதியுதவியில் புதிய வகுப்பறைக்கட்டடம் திறப்பு

(பரந்தன்)

இந்திய அரசின் நிதியுதவியுடன் கிளிநொச்சி செல்வாநகர் அ.த.க. பாடசாலையில் புதிய வகுப்பறைக் கட்டடம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

9.5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இப்புதிய வகுப்பறைக் கட்டடத்தை யாழ்.இந்திய துணைத் தூதுவர் எஸ்.பாலச்சந்திரன் மற்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்துள்ளனர்.

நீண்டகாலமாக போதிய வகுப்பறைக் கட்டட வசதிகள் இன்றி காணப்பட்ட குறித்த பாடசாலைக்கு இதுவொரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் குயின்ரஸ், மற்றும் கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன், அயற் பாடசாலைகளின் அதிபர்கள் பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர். (2-312-315)

'மடு சித்த மத்திய மருந்தகம்' மடு பிரதேசத்தில் திறந்து வைப்பு

(மன்னார்)

மாகாண சுதேச வைத்திய திணைக்களத்தின் ஏற்பாட்டில் மடு பிரதேசத்தில் அமைக்கப்பட்ட "மடு சித்த மத்திய மருந்தகம்" நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த சித்த மத்திய மருந்தகத்தை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் திறந்து வைத்தார்.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் சுமார் 11 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டில் குறித்த சித்த மத்திய மருந்தகம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.இந் நிகழ்வில் மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை எஸ்.எமிலியான்ஸ்பிள்ளை, மடு பிரதேச செயலாளர், மாகாண சுதேச வைத்திய திணைக்கள உதவி ஆணையாளர் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-15)

சிறப்பு அதிரடிப்படை அதிகாரி யானை தாக்கி படுகாயம்

(பனிக்கன்குளம்)

ஒட்டுசுட்டான் பகுதியில் சிறப்பு அதிரடிப்படை அதிகாரி ஒருவர் யானை தாக்கி படுகாயம் அடைந்துள்ளார்.

ஒட்டுசுட்டான் மேழிவனம் பகுதியில் கடந்த முதலாம் திகதி இரவு கள்ள மணல் பிடிப்பதற்காக காட்டுக்குள் பதுங்கியிருந்த நிலையிலேயே அவரை யானை தாக்கியுள்ளது.

இதன்போது காயமடைந்த சிறப்பு அதிரடிப்படையின் அதிகாரி மேலதிக சிகிச்சைக்காக மாங்குளம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

ஒட்டுசுட்டான் மேழிவனம் பகுதியில் அண்மைய நாட்களாக சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிலையில் காட்டுப் பகுதிக்குச் சென்று கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட போதே யானை தாக்கியுள்ளது.

இதேவேளை குறித்த காட்டுப்பகுதியில் யானைத் தாக்கம் அதிகரித்துள்ளதாகவும் மக்கள் பல தடவை முறையிட்டும் யானை பாதுகாப்பு வேலி அமைக்கக் கோரியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2-281)

வீசிய கடும் காற்றினால்

மீன் சந்தைக் கட்டடக் கூரை தூக்கி வீசப்பட்டு பலத்த சேதம்

(பூநகரி)

பூநகரிப் பிரதேசத்தில் கடந்த வாரம் இரு நாட்கள் வீசிய கடுமையான காற்றினால் பல அனர்த்தங்கள் இடம்பெற்றுள்ளதாக கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பூநகரி செட்டிய குறிச்சிப் பகுதியில் இரு வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டதாகவும் இதனால் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே நாளில் வீசிய கடுங் காற்றினால் பூநகரிப் பிரதேச சபை மீன் சந்தைக் கட்டடக் கூரையும் தூக்கி வீசப்பட்டு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சந்தைக் கூரையை மீள அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதேச சபை செயலாளர் தெரிவித்துள்ளார். (2-84)

சிறுத்தை படுகொலை; சந்தேக நபர்கள் பத்து பேருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி - அம்பாள்குளம் பகுதியில் சிறுத்தையொன்றின் மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட கிளிநொச்சி மாவட்ட பதில் நீதவான் மயில்வாகனம் கிரேசியன் சந்தேக நபர்கள் 10 பேரையும் எதிர்வரும் 5.7.2018 வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். கிளிநொச்சி மாவட்டத்தின் - அம்பாள்குளம் கிராமத்தில் கடந்த 21 ஆம் திகதி காலை 7 மணி முதல் பிற்ப கல் 12.30 மணி வரையான காலப் பகுதியில், வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் உட்பட பத்துப் பேரை சிறுத்தை தாக்கிக் காயப்படுத்தியதையடுத்து மேற்படி கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில் சிறுத்தையொன்றை கொலை செய்த சம்பவம் தொடர்பில் நேற்றையதினமே முற்படுத் தப்பட்ட பத்து சந்தேக நபர் களையும் எதிர்வரும் 5 ஆம் திகதி வரையும் விளக்க மறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. (2-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் மடுத்திருத்தலத்தின் ஆடிமாத திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கொழும்பு துணை ஆயர் மெக்ஸ்வெல்ட் சில்வா ஆண்டகை இணைந்து அன்றைய தினம் காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். திருவிழா திருப்பலியினைத் தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப பவனியும் அதன் பின்னர் அன்னையின் ஆசிர்வாதமும் இடம்பெற்றது. நாட்டின் பல பாகங்களில் இருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு மடு அன்னையின் ஆசியை பெற்றனர்.

புதிய பேருந்து நிலையங்களை நிர்மாணிக்க இடங்கள் அடையாளம்

புதுக்குடியிருப்பு பிரதேசசபை செயலாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு,மாங்குளம் மற்றும்திருமுறிகண்டி ஆகிய பகுதிகளில் புதிய பேருந்து நிலையங்களை நிர்மாணிப் பதற்கு இடங்கள் அடையாளப் படுத்தப்பட்டிருப்பதாக புதுக் குடியிருப்பு பிரதேச சபை யின் செயலாளரால் தெரிவிக் கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பிரதேச சபைக்குட்பட்ட ஒட்டுசுட்டான், மாங்குளம்,திருமுறிகண்டி ஆகிய பகுதிகளில் பேருந்து நிலையங்கள் நிர்மாணிக்கப் படாமையினால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்க ளுக்கு உள்ளாகி வருகின் றனர்.

இந்நிலையில் மேற்படி மூன்று இடங்களிலும் பேரு ந்து நிலையங்களை அமைப் பதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டிருப்பதாக புதுக்குடி யிருப்பு பிரதேச சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை யின் செயலாளரைத் தொடர்பு கொண்டு வினவிய போது, திருமுறிகண்டி,மாங்குளம் ஆகிய பகுதிகளில் பேருந்து நிலையங்களை அமைப் பதற்கு காணிகள் அடையா ளப்படுத்தப்பட்டு அவற்றுக் கான நடவடிக்கைகள் முன் னெடுக்கப்படுகின்றன.

ஒட்டுசுட்டான் பிரதேசத் தில்பேருந்துநிலையம்அமைப் பதற்குரிய காணியை அடை யாளப்படுத்துவதில் தாமதங் கள் காணப்படுகின்றன. அத ற்கான நடவடிக்கைகள் தொட ர்ந்து முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்துள்ளார் (2-315)

கிளிநொச்சியில் காணிகள் தொடர்பில் ஆராய்ந்தனர் அமைச்சர்கள்

(கிளிநொச்சி)

உள்நாட்டு அமைச்சர்க ளான திலக் மாரப்பன மற் றும் வஜிர அபேவர்த்தன ஆகியோர் கிளிநொச்சிக்கு விஜயமொன்றை மேற்கொ ண்டு காணி தொடர்பில் கலந் துரையாடல் ஒன்றை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்தியிருந் தனர். பிற்பகல் 3.45 மணிய ளவில் ஆரம்பமான குறித்த கலந்துரையாடல் 15 நிமிடங் கள் இடம்பெற்றது.

இதன் போது இராணுவத் தினரிடமிருந்து விடுவிக்கப் பட்ட மற்றும் விடுவிக்கப்பட வேண்டிய காணிகள் தொடர் பில் அமைச்சர்கள் கேட்டறி ந்து கொண்டனர்.

இதன் போது கிளிநொச்சி மகா வித்தியாலய காணி, இரணைமடு பொது சந்தைக் குரிய காணி, கரைச்சி பிரதேச சபையின் நூலகக் காணி, முக் கொம்பன் தென்னந் தோப்பு காணி, இரணைமடுவில்பொது மக்களின் காணி, பூநகரி கயூ கூட்டுத்தாபன காணி, வட்டக் கச்சி விவசாயத் திணைக்கள காணிகள் ஆகியவை இராணு வத்தினர் வசம் உள்ளமை தொடர்பில் அமைச்சர்களிடம் குறிப்பிடப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும். (2)

பச்சைப் புல்மோட்டை பாலம் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத் தின் புதுமாத்தளன், இரணைப் பாலை ஆகிய கிராமங்களை இணைக்கின்ற பச்சைப் புல் மோட்டை பகுதியில் சேதம டைந்து காணப்பட்ட பாலம் புனரமைக்கப்பட்டுள்ளது.

புதுமாத்தளன் பகுதியை யும் இரணைப்பாலையையும் இணைக்கின்ற பச்சைப் புல் மோட்டை வீதி கடந்த இறுதி யுத்தத்தின் போது ஏராள மான மக்கள் பயன்படுத்திய ஒரு வீதியாக காணப்படுகின்றது.

குறித்த வீதி மிக மோச மாக சேதமடைந்து காணப் படுவதுடன், இந்த வீதியில காணப்பட்ட பச்சைப் புல்மோட் டைப்பாலம் சேதமடைந்த நிலையில் காணப்பட்டது.

குறித்த பாலத்தையும் வீதியையும் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதனையடுத்து ஆயிரம் கிராமியப்பாலங்களை அபி விருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் பச்சைப் புல்மோட்டைப் பாலம் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப் பட்டுள்ளது. (2-315)

ஆரம்ப சுகாதார நிலையத்தின் புனரமைப்புப்பணிகள் ஆரம்பம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு புதுக்கு டியிருப்பு வேணாவில் பகு தியில் சேதமடைந்த நிலை யில் காணப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின் புனர மைப்புப்பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வேணாவில் கிராமத்தில்சுமார் 450 இற்கும் மேற்பட்ட குடு ம்பங்கள் வாழ்ந்துவரும் நிலையில் இங்கே யுத்தத் தினால் சேதமடைந்து

காணப்படுகின்ற ஆரம்ப சுகா தார நிலையத்தை புனர மைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் தொடர்ச்சியாக கோரியுள்ளனர்.

கடந்தாண்டில் குறித்த ஆரம்பசுகாதார நிலையத்தை புனரமைப்பதற்கான நிதி யொதுக்கீடு செய்யப்பட்ட போதும், அதற்கான புனர மைப்புப் பணிகள் மேற்கொள் ளப்படாது அந்த நிதி வேறு அபி விருத்தி வேலைக்கு பயன் படுத்தப்பட்டது.

இந்நிலையில் அண்மை யில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட் டத்தின் போது, இதனைப் புனரமைத்துத்தருமாறு கிராம மட்ட அமைப்புக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது. இந்நிலையில் தற்போது இதன் புனரமைப்புப் பணி கள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன. (2-315)

பாடசாலையில் குளவிக்கூடுகள்

முறைப்பாடு தெரிவித்தும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை அதிகாரிகள்

-பெற்றோர் விசனம்-

(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மன்/விடத்தல்தீவு தூய ஜோசப் வாஸ் ம.வித்தியில் கடந்த சில மாதங்களாக குளவிகளின் தாக்கம் அதிகரித்து காணப் பட்ட நிலையில் நேற்று முன் தினம் பாடசாலைக்குச் சென்ற மாணவர்களை மீண்டும் வீடுகளுக்கு பெற்றோர் அழை த்துச் சென்றுள்ள சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர் பாக மேலும் தெரிய வருவதா வது.

விடத்தல் தீவு தூய ஜோசப் வாஸ் ம.வித்தியில் கடந்த சில மாதங்களாக குளவிகளின் தாக்கம் மற்றும் பெருக்கம் அதிகரித்து காணப்பட்ட நிலை யில் தற்போது பாடசாலை கட்டடங்களில் சுமார் 26 குளவிக் கூடுகள் காணப்ப டுகின்றன.

இதனால்பாடசாலைமாண வர்கள் தொடர்ச்சியாக குளவி களின் தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளனர். தற் போது வரை 8 மாணவர்கள் குளவிகளின் தாக்குதல்களு க்கு உள்ளாகியுள்ளதோடு,

ஒரு மாணவனுக்கு 95 குள விகள் கொட்டிய நிலையும் காணப்பட்டுள்ளது.

குறித்த பிரச்சினை தொடர் பாக பாடசாலை நிர்வாகம் மடு கல்விப்பணிப்பாளர் மற் றும் மன்னார் மாவட்ட அனா ர்த்த முகாமைத்துவப் பிரிவு ஆகியவற்றிற்கு முறைப்பாடு தெரிவித்தும் உரிய நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட வில்லை.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை பாடசா லைக்குச் சென்ற மாணவன் ஒருவர் குளவிகளின் தாக் குதல்களுக்கு உள்ளாகியு ள்ளார்.

குறித்த சம்பவம் பெற் றோர்களுக்கு தெரிய வந்த நிலையில் அன்றைய தினம் பாடசாலைக்குச் சென்ற மாண வர்களை பெற்றோர் பாடசா லைக்குச் சென்று மீளவும் வீடுகளுக்கு அழைத்துச் சென் றுள்ளனர்.

குறித்த பாடசாலையில் 284 மாணவர்கள் கல்வி கற்று வருகின்ற நிலையில் மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் காணப் பட்ட குறித்த குளவிக்கூடு களை அகற்ற அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எவ்விதநடவடிக்கைகளும்மேற் கொள்ளப்படவில்லை என பெற்றோர் விசனம் தெரிவித் துள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதைப்பொருளுக்கு எதிராக விழிப்புணர்வுப் பேரணி

போதைப்பொருள் தடுப்பு தேசிய வாரத்தை முன்னிட்டு காரைநகர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நேற்றுக்காலை விழிப்புணர்வுப் பேரணி இடம்பெற்றது. காரைநகர் பிரதேச செயலகத்தில் இருந்து, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வீ.சிவகுமார் தலைமையில் ஆரம்பமான இப்பேரணி காரைநகர் கதிர்வேலாயுதசுவாமி ஆலயம் வரை சென்றது. இப்பேரணியில், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், காரைநகர் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். இதில் கலந்து கொண்டவர்கள் போதைப் பொருட்களுக்கு எதிரான சுலோகங்களைத் தாங்கிய வண்ணம் பேரணியாக சென்றனர். பேரணி முடிவில், கதிர் வேலாயுதசுவாமி ஆலய வளாகத்தில் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. இதில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வீ.சிவகுமார், போதைப் பொருள் தடுப்புக் குழுவின் வளவாளரான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.பாஸ்கரகுரு, ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் உபாலி, சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் திருமதி ச. கருணாநிதி ஆகியோர் உரையாற்றினர். (இ-9)

படங்கள்:-பொ.சோபிகா

உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட

சூழலுக்கு குறைந்த மாசை ஏற்படுத்தக்கூடிய Euro 4 எரிபொருள்

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் அறிமுகம்

(கொழும்பு)

ஐரோப்பிய சூழல் மாசு தரங்களுக்கமைவான Euro 4 எரிபொருளை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நேற்று முன்தினம் 2ஆம் திகதி இலங்கையில் அறிமுகம் செய்துள்ளது. ஐரோப்பிய சூழல் மாசுதரங்களுக்கமைவாக தனது பிரதான வலுத் தயாரிப்புகளை மாற்றியமைக்கும் இலங்கை அரசாங்கத்தின் நோக்கத்தை நிவர்த்தி செய்யும் வகையில் Euro 4 எரிபொருள் அறிமுகம் அமைந்துள்ளது.

இது குறித்து பெற்றோலிய வளத்துறை அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது, "அரசாங்கத்தின் உரிமையாண்மையின் கீழ் இயங்கும் அமைப்பு எனும் வகையில், இலங்கை அரசாங்கத்தின் வலுத்துறையை சூழலுக்கு நட்பானதாக மாற்றியமைக்கும் நடவடிக்கைகளுக்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தனது பங்களிப்பை வழங்க முன்வந்துள்ளது.

காபன் வெளியீடு குறைந்த தயாரிப்புகளான Euro 4 போன்றன காபன் வெளியீட்டை குறைப்பதுடன், நுகர்வோர் மற்றும் தொழில் துறைகளுக்கு அனுகூலங்களை பெற்றுக்கொள்ள உதவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் பங்களிப்பு வழங்கும் என்றார்.

உயர் வினைத்திறன் வாய்ந்த Euro 4 எரிபொருள் சந்தையில் ஏற்கனவே காணப்பட்ட 95 ஒக்டேன் பெற்றோல் மற்றும் சுப்பர் டீசல் 4

ஸ்டார் ஆகியவற்றை பிரதியீடு செய்துள்ளது.

இதனூடாக பாவனையாளர்களுக்கு குறைந்த காபன் வெளியீட்டை கொண்டுள்ளதுடன், உயர் எரிபொருள் சிக்கனத்தையும் வழங்குகிறது.

இந்நிகழ்வில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் தம்மிக ரணதுங்க கருத்துத் தெரிவிக்கையில், "உலக போக்குகளின் பிரகாரம், நாம் ஒரு தேசமாக முன்னேற வேண்டியுள்ளது. இதுபோன்ற உலக தரங்களை பேணுவது சூழலுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அரசாங்க அமைப்பு எனும் வகையில், தேசத்தின் வலுத் துறையை சூழலுக்கு நட்பானதாக மாற்றியமைக்கும் நடவடிக்கைகளின் முன்னோடிகளாக அமைந்துள்ளோம். நாட்டின் வலு விநியோகத்தை மேம்படுத்துவது தொடர்பில் தொடர்ச்சியாக எமக்கு விளக்கங்களை பெற்றுக் கொடுக்கும் எமது பங்காளர்களுக்கு நாம் நன்றி தெரிவிக்கிறோம்" என்றார்.

பெற்றோலிய வளத்துறை அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் ஏ.கார்ட்னர் மாவத்தையில் அமைந்துள்ள சி.எவ்.டி.மெல் அன்ட் சன்ஸ் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள முதலாவது Euro Spec எரிபொருள் நிரப்பும் பம்பியிலிருந்து Euro 4 எரிபொருளை வைபவ ரீதியாக விநியோகித்து குறித்த் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (இ-7)

றம்புட்டான் விதை சிக்கி 6வயதுச் சிறுவன் மரணம்

(கொழும்பு)

கற்பிட்டி ஆலங்குடா பிரதேசத்தில் வசித்து வந்த விஷேட தேவையுடைய ஆறு வயதுச் சிறுவன் ஒருவன் தொண்டையில் றம்புட்டான் விதை சிக்கியதில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார் என்று புத்தளம் மற்றும் கற்பிட்டி பிரிவின் திடீர் மரண விசாரணை அதிகாரி பீ. எம். ஹிசாம் தெரிவித்தார். நுரைச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலங்குடா பிரதேசத்தைச் சேர்ந்த முஹம்மது நிஜாம் றிகாஸ்தீன் (வயது-06) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவராவார். (இ-7)

புகையிரதத்தில் சிவில் உடையில் பாதுகாப்பு ஊழியர்கள் கண்காணிப்பு

துறைசார் அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

புகையிரதத்தில் பயணம் செய்பவர்கள் பெட்டிகள் மற்றும் ஆசனங்களுக்குச் சேதம் ஏற்படுத்துவதைத் தடுக்கும் வகையில் சிவில் உடையில் பாதுகாப்பு ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என சிவில் விமான Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அமைச்சின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துகளுக்கு சேதம் விளைவிப்பவர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு எதிராக பொது சொத்தினை சேதப்படுத்தியமை, தொடர்பிலான சட்டத்தின் கீழ் சிறைத்தண்டனை விதிக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும்புகையிரத சேவையினை நடத்துவதற்காக அரசாங்கம் பில்லியன் கணக்கில் பணத்தினைச் செலவிடுவதாக தெரிவித்துள்ள அமைச்சர், சேவையின் பயனை அனுபவிக்கும்பொது மக்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டுமென வும் அமைச்சர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ)

வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

முசுமுசுக்கை

Botanical Name:-Melethria Maderospatana
Family:- Cucurbitaceae
Engl:- Rough bryony
Sinh:- Hin -kekiri

இது அதிகமாக கிளை கொடிகளுடன் நீண்டதூரம் கொடியோடி குறுங் காட்டிலுள்ள மரஞ்செடிகளின் மேல் நன்கு படர்ந்திருக்கும் பெரிய ஈரடுக்கு பருமனுள்ள கொடி மெல்லியதாகவும்நாருள்ளதாகவும்இருக்கும். இலைக்காம்பு கொடி ஆகியவற்றில் நல்ல அழுத் தமான சுணைகளுண்டு அதனால் இலைகள் அதிகம் சொரசொரப்பாக இருக்கும். சுமார் 2.4 அங்குல இடை வெளி தூரத்தில் காணப்படும் கணுக்கள் ஒவ்வொன்றிலும் ஓர் இலையும் ஓர்கிளைக்கொடியும் ஒரு பற்றுக் கம்பியும் இருப்பதைக் காணலாம்.

நீண்ட காம்புடைய இலை நல்ல பசுமை நிறத்துடனும் அடிப்புறம் அகண்டும் மேல் புறம் நீண்டும் குறுகியும் கலக்கவே காணப்படுகின்றது. அதாவது இலையின் இருபக்கங்களிலும் அடியில் இரண்டும் சிறிய பிதுக்கங்களையும் உச்சியில் சிறிது பெரிய பிதுக்கத்தையும் காணலாம். இலையில் அழுத்தமான சுணைகளும். மெல்லிய சுணைகளும் அதிகம் நிரம்பியுள்ளன.

ஆனால் கொடியை விட இலையில் சொரசொரப்பு குறைவேயாகும். இலையின் ஓரம் சிறிது இரம்பவாய் அமைப்புடையது. எளிதில் வாடக்கூடியது.

சிறிய மஞ்சள் நிறப்பூக்கள் கணுக்களில் பூத்திருக்கும். காய்கள் வட்ட வடிவ மானவை. சிவந்த பழத்தினுள் நிறைய விதைகள் பொதிந்து காணப்படும். இது ஓராண்டுப் பயிராகும்.

இன விருத்தியும் பரம்பலும்

விதைகள் மூலம் இன விருத்தியடையும் பந்தல் போட்டு வளர்க்கலாம். பொதுவான எல்லா வகை மண்களிலும் வளரக்கூடியது.

மருத்துவப் பயன்கள்

முளைக்கீரையுடன் சேர்த்து சமைத்துண்ண சுவரோரைய நோய்கள் வராமல் தடுக்கும். முசுமுசுக்கை இலைச் சாற்றுடன் தேன் கலந்து அருந்த சளி, இருமல் தணியும்.

முசுமுசுக்கை இலையை அரித்து போட்டு வெங்காயம் சேர்த்து நெய்யில் வதக்கி நண்பகல் உணவில் சேர்த்து சாப்பிட்டு வர ஆஸ்மா சளி இருமல் குணமாகும்.

முசுமுசுக்கை இலைத் தூள் 300 கிராம், தூதுவளைத்தூள் 200 கிராம் சேர்த்து அரைத்து வைக்கவும். இச்சூரணத்தில் 2 கிராம் அளவு வெற்றிலையில் வைத்து மென்று காலை மாலை சாப்பிட்டு வர (3 மாதம்) நாட்பட்ட சலரோகம், ஆஸ்மா, நாட்பட்ட இருமல் தீரும்.

முசுமுசுக்கை வேர் 50 கிராம் ஆடாதோடை வேர் 50 கிராம் சேர்த்து உலர்த்திய சூரணத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி ஒவ்வொன்றும் 5 கிராம் தூள் சேர்த்து வைத்து வெற்றிலையில் மடித்து மென்று சாப்பிட்டு வர சளி இருமல் குணமாகும்.

முசுமுசுக்கை இடித்து பிழிந்த சாறு ஒரு லீற்றர் எள் நெய் ஒரு லீற்றர் சந்தனக் கட்டைத்தூள் 100 கிராம் போட்டுக் காய்ச்சி வடித்து வைக்கவும். சாறு முழுவதும் சுண்ட எரித்து வடிக்க வேண்டும். இந்த தைலத்தை வாரம் ஒரு முறை தலைக்குத் தேய்த்து ஒரு மணி நேரம் கடந்து குளித்துவர வேண்டும். வெப்பம் தணியும், கண் எரிச்சல் குறையும், குளிர்ச்சி தரும். நாளும் தலைக்குத் தேய்த்து வர இள நரை மாறும். முடிவளரும். வழுக்கையிலும் முடி வளரும்.

500 கிராம் அரிசிமாவிற்கு 50 கிராம் முசுமுசுக்கை இலை சேர்த்து ஆட்டி மாகரைக்கவும். இந்த மாவில் தேசை சுட்டு சாப்பிட சளி, இருமல், ஆஸ்மா குணமாகும்.

நான்கு பிடியளவு முசுமுசுக்கை இலையைக் கொண்டு வந்து அம்மியில் வைத்து சொரசொரப்பாக அரைத்து அதை ஒரு பெரிய அடை போலதட்டிதலையில்வைத்து மணலை வறுத்து ஒரு துணியில் கொட்டி மூட்டையாகக் கட்டி இந்த அடையின் மேல் வைத்து சுடேற்றி தாங்கக் கூடிய சூட்டில் ஒத்தடம் கொடுக்கவேண்டும். இவ்விதாமாக 5 நாட்கள் செய்து வந்தால் பித்த கிறுகிறுப்பு மாறி விடும்.

இலை

இருமலுட னீளை யிரைப்பு புகைச்சல்

மருவுகின்ற நீர்த்தோடம் மாறுந்-திருவுடைய

மானே! முசுமுசுக்கை மாமூலி யவ்விலையைத் தானே யருந்துவர்க்குத் தான்

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

இதனால் இருமல், கோழை, இரைப்பு, நெஞ்சிற் புகைக்கம்மல், மூக்கில் நீர்ப்பாய்தல் இலை நீங்கும்.

வேர்

கந்தம் பரவு களிச்சளியும் புன்விடமு

மந்தம் பெருவிடமும் வாந்திகளும்-அந்தம்

பெருகுரங்குக் கிச்சூடும் பித்தமுமிருக்கா

திரு குரங்குக் கைவேருக்கே.

இது தீ நாற்றத்துடன் இறுகிய சளி, மந்தம், வாந்தி, மார்பு நோய், குன்மம், அழல் இவற்றை நீக்கும். வேரை உலர்த்தி பொடியாக்கி 1-2 கிராம் அல்லது குடிநீர் இட்டு 30-60 மில்லி அருந்தலாம்.

உன் கண்ணில் நீர் வழிந்தால்!

உலக மகாகவி பாரதியின் குரல் இப்போது மீண்டும் காதில் அவை மோதுகிறது. குழந்தையான கண்ணம்மாவை முன்னே நிறுத்தி அவன் பாடிய பாடல் வரிகளை இப்போது எல்லோரும் ஒரு முறை கேட்க வேண்டும். "உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி!" என்று பாரதி அன்று பாடினான். பேசும் பொற்சித்திரமாகப் பிள்ளைக்கனியமுதாக எம்மை மகிழ்விக்கும் சின்னப் பெண் குழந்தையை நாம் பேணிக் காக்க வேண்டும் என்ற மானிடக்கடமை அவனுடைய பாடல் வரிகளிலே பதிவு செய்யப்பட்டுள்ளது.

பாரதி சுட்டிக்காட்டிய அரும் பணியைச் செய்த அன்பின் வடிவம் நடமாடும் தெய்வம் ஒன்று நம் நாட்டிலும் வாழ்ந்ததை நாம் உணரவேண்டும்.

இந்துபோட் இராசரத்தினம் எனத் தன் பெயருக்கு முன்னால் ஒரு நிறுவனத்தின் பெயரை அடைமொழியாகக் கொண்டு வாழ்ந்த ஒரு பெரியவர். அவர் நம்மிடையே வாழ்ந்து நல்லதொரு பணி செய்துள்ளார். சைவ வித்தியா விருத்திச் சங்கம் என்ற நிறு வனத்தின் தலை சிறந்த பணியான சைவச் சிறுவர் இல்லத்தை முழுமையாகப் பொறுப்பேற்று நடத்தியவர். அவர் வாழ்ந்த காலத்தில் அந்த இல்லத்தின் பெயர் முத்துத்தம்பி அநாதை இல்லம். அக்கால கட்டத்தில் இப்பெயர் எல்லோருடைய மனத்திலும் எம்மிடையே ஆதரவற்ற சிறுவர் பலர் உள்ளனர் என்ற ஒரு எண்ணத்தை விதைத் திருந்தது.

ஆனால்அச்சிறுவர்எமக்கும்பிள்ளைகளுக்கும் தான் என்ற நினைப்பு அப்போது எல்லோருக்கும் ஏற்படவில்லை. அவருடைய அயராத சிறந்த உழைப்பு, விடா முயற்சி தனித்துச் செயலாற்றும் திறன் என்பன அக்குழந்தைகளை வாழவைத்தன.

சிறுவர் வாழ்வின் அடிப்படையான தேவைகளான உணவு உடைக்கு அப்பால் கல்விச் செல்வத்தையும் அவர் வழங்கினார். கலக்கமில்லா உள்ளத்தோடு கூட்டாக வாழும் ஒரு வாழ்வியலை அவர்களுக்கு வழங்கினார். பண்பான

ஒரு வீட்டு வாழ்வுச் சூழலை ஏற்படுத்திக் கொடுத்தார். கல்வியை மட்டும் வாழ்வின் நோக்காகக் கொள்ளாது மனதைப் பண்படுத்தத் தோட்டப் பணியிலும் அவர்களைப் பயிற்றினார். எமது பண்ணையில் நாம் பயிரிட்ட காய்களையும் பழங்களையும் உண்கிறோம் என்ற மகிழ்வோடு சிறுவர் உணவு உண்டனர். குறிப்பாகப் பெண் குழந்தைகள் உணவை ஆக்கும் பணியில் தம்மால் இயன்றவற்றை தனிமைத் துயரின் நிழல் படியாமல் ஒரு தாய்ப்பறவை போலக் காத்தார்.

மிக எளிமையான தோற்றம், தூய்மையான வாழ்விடம், பகிர்ந்தும் பண்ணும் பக்குவம், கூடிவிளையாடும் மகிழ்ச்சி என்பன இல்லத்தில் நிலைத்திருந்தன.

குறிப்பாகப் பெண் குழந்தைகள் எதிர்காலத்தில் சிறந்த தாய்மைப் பணியைச் செய்ய சிறப்பான பயிற்சியைப் பெற்றிருந்திருந்தார்கள். சிறுமியாக இல்லத்தில் வந்து அடைக்கலம் பெற்றவர் நல்லாசிரியராக வளர்ந்து வெளியே வந்து சமூகத்தில் இணைந்து கொண்டனர். இந்தப் பயிற்றலால் சமூகம் நற்பயன் பெற்றது. எமது பணி எல்லோரையும் பேணிக் காத்து வாழ்வதே என்ற இலக்கோடு அவர்கள் வாழ்ந்தார்கள்.

எனவே இன்று இத்தகைய ஒரு பண்பான வாழ்வியற் பயிற்சியை நாம் மீளக் கட்டமைக்க வேண்டியுள்ளது. காலச்சூழலாலும் போர்ச் சூழலாலும் இயற்கை இடராலும் தனித்து விடப்பட்ட பிஞ்சுகளின் எதிர்கால வாழ்வியலை எல்லோரும் இணைந்து கட்டமைக்க வேண்டும். குறிப்பாகப் பெண்கள் இப்பணியில் உடனடியாகச் செயற்பட வேண்டும்.

இன்று பெண்ணுக்கு இழைக்கப்படுகின்ற அவலம் இனிமேல் ஏற்படாதிருக்கும்படி பெரியார் இந்துபோட் இராசரத்தினம் காட்டிய நெறியில் செயற்பட வேண்டும். இன்றையநாகரிகப் போக்கை விடுத்து இயல்பான மானிட வாழ்க்கையை எல்லோரும் வாழ வழி செய்ய வேண்டும்.

பெரியார் பணியாற்றிய நிறுவனத்தில் 14 ஆண்டுகள் பணி செய்யக்கிடைத்த வாய்ப்பு இதை எழுத வைக்கிறது. அப்போது நான் பயிற்றிய எளிமையான வாழ்வியல் என்னையும் அப்பெண் குழந்தைகளையும் நல்லவர்களாக வல்லவர்களாக வையகமெங்கும் வாழ வைத்துள்ளது.

எனவே அந்தப் பட்டறிவைப் பயன்படுத்திப் பணி செய்யப் பெண்கள் சிறப்பாக இணைய வேண்டிய காலம் இதுவே. இப் பணியை நாம் செய்ய எமைத் தூண்டும் செயல்வீராக சு.இராசரத் தினம் என்றும் எம் உள்ளத்தில் இருப்பார்.

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்

பழுதடைந்த மீன்கள் விற்பனை பொதுமக்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பல சந்தைகளில் குறைந்த விலையில் மீன் விற்பதாக கூறி பழுதடைந்த மீன்களையும் டைனமைட் வைத்து பிடிக்கப்பட்ட மீன்களையும் கலப்படம் செய்து விற்பனையில் ஈடுபடுவதாக பொது மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

குறித்த பழுதடைந்த மீன்கள் பண்ணை, நாவாந்துறை, குருநகர், பாசையூர், திருநெல்வேலி, குளப்பிட்டி சுன்னாகம், காக்கைதீவு, அச்சுவேலி, கல்வியங்காடு உள்ளிட்ட சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டு வருவதுடன், வார நாட்களில் தொடர்ச்சியாக பழுதடைந்த மனித உடலுக்குத் தீங்கு விளை விக்கும் மீன் விற்பனையும் நடைபெற்று வருகிறது என வும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் விற்பனை செய்யப்படாத மீன்களை புதிதாக இறக்குமதி செய்யும் மீன்களுடன் கலப்படம் வியாபாரிகள் செய்து விற்பனை செய்வதனால் வேலைப்பளுவுடன் சந்தைக்கு வரும் நுகர்வோர் பல்வேறு அசௌகரியங்களுக்கும் பாதிப்புக்களுக்கும் உள்ளாகுகின்றனர்.

இது குறித்து மாநகர சபை, பிரதேச சபை சுகாதார பரிசோதகர்களுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போதிலும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

எனவே இந்த விடயம் தொடர்பாக அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

-11 பேரின் சடலங்கள் மீட்பு-

முக்திப் பேறு பெற உயிர் துறப்பா? சிக்கிய கடிதத்தில் அதிர்ச்சி கட்டளைகள்

(டில்லி)

டில்லியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 பேர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சோக சம்பவத்தில், 11 பேருக்கும் உத்தரவு பிறப்பித்தது போலுள்ள மர்ம கடிதம் பொலிஸாரிடம் சிக்கியுள்ளது.

தலைநகர் டில்லியின் வடக்குப் பகுதியிலுள்ள புராரி பகுதியிலுள்ள ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சுப்பர் மார்க்கெட் நடத்தி வருகின்றனர். இந்நிலையில், நேற்று முன்தினம் காலை அந்த குடும்பத்திலுள்ள 7 பெண்கள் மற்றும் 4 ஆண்கள் பூட்டிய வீட்டிலிருந்து சடலமாகக் கண்டெடுக்கப்பட்டனர்.

10 பேர் கண்களை கட்டிய நிலையில் தூக்கில் தொங்கிய நிலையிலும், 77 வயதான மூதாட்டி மட்டும் கட்டிலில் கிடந்தபடியும் சடலமாக மீட்கப்பட்டனர். சடலங்களை கைப்பற்றிய



Below are exact content of notes. They detail step by step acts which were to be performed to achieve salvatio
Corroborates with scene of crime.

1. Pattiyan achchhe se baandhni hai.. Shoonya ke alaawa kuch nahi dikhna chahiye.. Rassi ke saath sooti chunni ya sari ka prayog karna hai..

2. "Saat din Bad pooja lagataar karni hai.. thoda lagan aur shraddha se.. Koi ghar me aa jaaye to agle din..

3. Guruvaar ya Ravivaar ko chunein..

4. "Bebbe khadi nahi ho sakti to alag kamre me late sakti hain."

5. "Sabki soch ek jaisi honi chahiye.. Pehle se jyada dhridhta se.. Ye karte hi tumhare aage ke kaam dhridhta se shuru honge

6. Madhdham roshni ka prayog karna hai

7. Haathon ki pattiyan bach jaaye to usey aankhon pe double kar lena..

8. Muh ki patti ko bhi rumaal se double kar lena.

9. Jitni dhridhta aur shraddha dikhaoge utna hi uchit phal milega.

10. Raatri ke 12-1 ke beech kriya karna hai. Usko pehle hawan karna hai.

பொலிஸார், பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். பரிசோதனையில் அவர்கள் தற்கொலை செய்து கொண்டதாகவே தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், இந்த சோக சம்பவத்துக்கு உத்தரவு பிறப்பித்ததுபோல், காணப்படும் மர்ம கடிதங்கள் அவர்களது வீட்டில் கிடைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முக்திப்பேறு பெறுவதற்காக சில சடங்குகள் செய்ய வேண்டும் என்ற குறிப்புடன் காணப்படும் அந்த கடிதங்களில், 'இந்த சடங்கை (தற்கொலை) செவ்வாய், வியாழன் அல்லது சனிக்கிழமையில் தான் செய்ய வேண்டும்' என வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அந்தச் சடங்கை செய்யும் நாளில் வீட்டில் யாரும் சமைக்கக்கூடாது. கைபேசிகளை ஆறு மணி நேரத்துக்கு 'சைலண்ட் மோட்' இல் வைத்துவிட வேண்டும். அனைவரும் தூக்கிட்டு கொண்டார்களா? என்பதை கண்காணிக்க ஒருவர் காவலுக்கு நிற்க வேண்டும் எனவும் கட்டளையிடப்பட்டுள்ளது.

இதை வைத்துப் பார்க்கும்போது அந்த குடும்பத்திலுள்ள பத்து பேரும் தூக்கில் பிணமாக தொங்கியதை உறுதிப்படுத்திய பின்னர் தரையில் இறந்துகிடந்த 75 வயது மூதாட்டி தனது முடிவை தேடி கொண்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

இந்தச் சடங்குகளைச் செய்வதால் ஒருவர் இறந்து போவதில்லை. கடவுளால் காப்பாற்றப்பட்டு உயர்வான ஸ்தானத்தை பெறுவார்கள் எனவும் அந்தக் கடிதம் குறிப்பிடுகின்றது.

இந்த கடிதத்தை வைத்து இது 'பக்தி முற்றினால் பித்து' என்ற கோணத்தில் நடைபெற்ற அசம்பாவிதம் என கருதும் டில்லி பொலிஸார், அந்த வீட்டில் கைப்பற்றப்பட்ட கைபேசிகளை வைத்து தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். (7)

ஆப்கானில் குண்

5 பேர் உடல் சி

(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டில் நடத்தப்பட்ட கார் வெடிகுண்டு தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட 5 பேர் உடல் சிதறி பலியாகினர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் லாகர் மாகாணத்தில் நேற்று முன்தினம் கார் வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட 5 பேர் உடல் சிதறி உயிரி

ழந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

நாசாவை மிஞ்சும் அதிசக்தி வாய்ந்த தயாரித்து வருகி



(பீஜிங்)

நாசாவை மிஞ்சும் வகையில் 140 டொன் எடையை சுமந்து செல்லும் வகையில் அதிநவீன தொ

தூத்துக்குடிக் கலவரம்

277 ஊழியர்களை மீட்கவே ஆர்ப்பாட்டக்காரர் மீது துப்பாக்கிச் சூடு

—டி.ஜி.பி.விளக்கம்—

(சென்னை)

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்த 277 ஊழியர்களை பத்திரமாக மீட்க துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது என்று சென்னை உயர் நீதிமன்ற டி.ஜி.பி. விளக்கம் அளித்துள்ளார்.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக போராட்டம் நடத்தியவர்கள் மீது கடந்த மே 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் 13 பேர் பரிதாபமாக பலியானார்கள்.

இதுதொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை உயர் நீதிமன்ற, ஜிம்ராஜ் மில்டன், பார்வேந்தன், பாவேந்தன், நடிகர் சீமான், சட்டத்தரணி சூர்யபிரகாசம், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் உட்பட பலர் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

இந்த வழக்குகள் எல்லாம் உயர் நீதிபதி இந்திரா பானர்ஜி தலைமையிலான அமர்வில், கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது, 'இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு ஏன் உத்தரவிடக்கூடாது?' என்று தலைமை நீதிபதி கேள்வி எழுப்பினார்.

இந்த நிலையில், இந்த வழக்குகள் எல்லாம் தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி, நீதிபதி பி.டி.ஆஷா ஆகி யோர் முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

வழக்கை விசாரணைக்கு எடுத்தவுடன், 'துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு ஏன் உத்தரவிடக்கூடாது? என்று நீதிபதிகள் மீண்டும் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த அரசு பிளடர் டி.என்.ராஜகோபாலன், 'இதுதொடர்பாக விரிவான பதில் மனுவையும், வீடியோ ஆதாரங்களையும் தாக்கல் செய்கிறேன்.

தற்போது சி.பி.சி.ஐ.டி., விசாரணை சரியான கோணத்தில் நடந்து வருகிறது. அதனால் சி.பி.ஐ. விசாரணை தேவையில்லை' என்று வாதிட்டார்.

இதையடுத்து, 'துப்பாக்கிச் சூடு தொடர்பான அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்ய வேண்டும்' என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சங்கர சுப்பு, 'தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக உயர் நீதிமன்றுக்கு மதுரை கிளையில் ஏற்கனவே 12 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அந்த வழக்குகளை எல்லாம் சென்னை உயர் நீதிமன்றுக்கு மாற்றி, ஒரே இடத்தில் மொத்தமாக விசாரிக்க வேண்டும். அல்லது சென்னை உயர் நீதிமன்றில் உள்ள வழக்குகளை மதுரை கிளைக்கு மாற்ற வேண்டும்' என்று கோரிக்கை விடுத்தார்.

முன்னதாக, நாம் தமிழர் இயக்கத்தின் தலைவர் சீமான் தொடர்ந்த வழக்கு, தமிழக டி.ஜி.பி. சார்பில் மாவட்ட பொலிஸ் அதிகாரி பதில் மனு தாக்கல் செய்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது.

மே 22ஆம் திகதி பனிமயமாதா கோவில் முன்பு திரண்ட 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் கலவரத்தில் ஈடுபட்டனர். இந்த கூட்டத்தை கலைக்க எடுத்த அனைத்து முயற் சிகளும் தோல்வியில் முடிந்தன.

ஸ்டெர்லைட் ஆலையில் உள்ள குடியிருப்புக்கு சிலர் தீ வைத்தனர். இதனால் 150 குடும்பத்தினரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டது.

அதேபோல மாவட்ட க ஆட்சியர் அலுவலகத்தில் இருந்த 277 ஊழியர்களை பத்திரமாக உயிருடன் மீட்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஏராளமான தனியார் மற்றும் அரசு சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டது.

தூத்துக்குடி அப்போதைய பொலிஸ் அதிகாரி மகேந்திரனுக்கும் காயம் ஏற்பட்டது. இதனால் தான் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இது தொடர்பாக 5 வழக் குகள் பதிவு செய்யப்பட்டு சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் விசா ரித்து வருகின்றனர். எனவே இந்த சம்பவம் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட தேவையில்லை. (7)

காவிரியிலிருந்து தமிழகத்திற்கு நீர் வழங்க கர்நாடகத்திற்கு மேலாண்மை ஆணையம் உத்தரவு

(டில்லி)

காவிரியிலிருந்து 30 டி.எம்.சி. தண்ணீரை தமிழகத்திற்கு வழங்க கர்நாடகத்திற்கு மேலாண்மை வாரிய ஆணையகம் உத்தரவிட்டுள்ளது.

டில்லியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற, மேலாண்மை வாரிய ஆணையகத்தின் முதல் கூட்டத்தில் இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. காவிரி ஆணையத் தலைவர் மசுப் உஷைன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத் தில், இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதில் கலந்து கொண்ட மாநிலங்களவை அதிகாரிகள் தங்களுடைய கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில் அனைவரது கருத்துக்களையும் செவிமடுத்த பின்னர், தமது கருத்தை வழங்கிய மேலாண்மை ஆணையகம் மேற்படி உத்தரவை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-8)

காவிரி மேலாண்மை ஆணைய விவகாரத்தை மீண்டும் நாடாளுமன்றில் விவாதிக்கக்கூடாது

மு.க.ஸ்டாலின் தெரிவிப்பு

(டில்லி)

காவிரி மேலாண்மை ஆணைய விவகாரத்தை மீண்டும்நாடாளுமன்றில்விவாதிக்கக்கூடாது என தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களை சந்தித்த ஸ்டாலின் நிருபர்களின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே இதனை தெரிவித்தார்.

இதன்போது, "அதிகளவிலான அதிகாரம் இன்றிய ஒரு ஆணையத்தை உச்ச நீதிமன்றம் ஊடாக அமைத்திருந்தாலும் அதுவும் தவறு என்று கூறும் கர்நாடக முதலமைச்சர், அங்கிருக்கக்கூடிய அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டி நாடாளுமன்றில் விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். இதற்கு மத்திய அரசு அடி பணிந்து விடக்கூடாது. இது குறித்து நாடாளுமன்றில் எக்காரணம் கொண்டும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை" என்று கூறினார்.

மேலும், சேலம்-சென்னை பசுமை வழிச்சாலை தொடர்பாக கருத்து தெரிவித்த ஸ்டாலின், மத்திய அரசு எத்தகைய திட்டத்தை கொண்டு வந்தாலும், அதற்குரிய ஒப்புதலை ஆதரவை, பணியை நிறைவேற்றுவது மாநில அரசினுடைய கடமை என்றும், அதனால் மாநில அரசு அடிமையாக இல்லாமல் மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் உரிய முறையிலே குரல் கொடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (7-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெளிநாடு

...ண்டுத்தாக்குதல்
...தறி உயிரிழப்பு

விசாரணையில், நேட்டோ படைகள் சென்ற வாகனத்தை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல் இது என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானில் நன்கர்ஹர் மாகாணத்தின் தலைநகரான ஜலாலாபாத் என்னும் இடத்தில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலைப்படை தாக்குதலில் சீக்கியர்கள் உட்பட 19 பேர் பரிதாபமாக பலியானது குறிப்பிடத்தக்கது. (7-8)

...வகையில் ...ரொக்கெட் ...ன்ற சீனா

...நுட்பத்துடன் ரொக்கெட்டை சீனா தயாரித்து வருகிறது. விண்வெளி துறையில் சீனா முன்னேற்றம் அடைந்து வருகிறது. 'லாங் மார்ச்-9' என்ற அதிக சக்தி படைத்த ரொக்கெட் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இந்த ரொக்கெட் 10 மீற்றர் அகலம் கொண்டது. 4 சக்தி வாய்ந்த 'பூஸ்டர்'கள் பொருத்தப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் தலா 5 மீற்றர் அகலம் கொண்டவை. இது பூமியின் கீழ் மட்ட சுற்றுப்பாதையில் 140 தொன் எடையை சுமந்து செல்லும் திறன் ...டைத்தது. இந்த ரொக்கெட் வருகிற 2030ஆம் ஆண்டில் விண்ணில் செலுத்தப்பட உள்ளது. சீன தொழில் நுட்ப அகடமி இதை உருவாக்கி வருகிறது.

அமெரிக்காவின் 'நாசா' விண்வெளி ஆய்வு மையம் 13 தொன் எடையை சுமந்து செல்லும் திறன் படைத்த ரொக்கெட்டை தயாரித்து வருகிறது. அது 2020ஆம் ஆண்டில் விண்ணில் செலுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதை மிஞ்சும் வகையில் 140 தொன் எடையை சுமந்து செல்லும் வகையில் அதிநவீன தொழில் நுட்பத்துடன் இந்த ரொக்கெட்டை சீனா தயாரித்து வருகிறது. ஐரோப்பாவின் அரீனே 5 ரொக்கெட் 20தொன் எடையையும், எல்கான் முஸ்கின் பால்கான் ரொக்கெட் 64 தொன் எடையையும் சுமந்து செல்லும் திறன் கொண்டது. (7)

கலிபோர்னியாவில் காட்டுத்தீ!

மக்கள் பெருமளவில் பாதிப்பு

(கலிபோர்னியா)

வறட்சி காரணமாக வடக்கு கலிபோர்னியாவில் வேகமாக காட்டுத்தீ பரவி வருகின்றது. இதனால் பல மைல் தூரத்திற்கு புகை மண்டலமாக காணப்படுவதாக கலிபோர்னிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த காட்டுத்தீ காரணமாக 12000 இற்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 32,500 ஏக்கர் நிலப்பரப்பும் இதனால் அழிவடைந்துள்ளது.

இதேவேளை காட்டுத் தீ ஏற்பட்ட பிரதேசத்திலும் அதனை அண்மித்த பிரதேசங்களில் வாழும் மக்கள் அவர்களின் இருப்பிடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாக அந்நாட்டின் வனவள பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்துடன் தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் பணிகளில் தீயணைப்புப் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர். (7)

சீனாவில் புயலுடன் கூடிய மழையால் வெள்ளம் மற்றும் மண்சரிவுத் தாக்கம்

(பீஜிங்)

வடமேற்கு சீனாவில் கடும் புயலுடன் கூடிய மழையினால் வெள்ளம் மற்றும் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் புயல் காரணமாக ஏற்பட்ட மண்சரிவினால் இருவர் காயமடைந்துள்ளதாகவும் சீன அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை வடமேற்கு சீனாவின் பஹோஜி நகரின் பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதனால் அப்பகுதியில் வாகனப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. (7)

குகைக்குள் சிக்கிய கால்பந்து வீரர்கள் 9 நாட்களுக்குப் பின்னர் கண்டுபிடிப்பு

(பாங்கொக்)

தாய்லாந்தில் மலைக் குகைக்குள் சிக்கிய இளம் கால்பந்து வீரர்கள் மற்றும் பயிற்சியாளர் அனைவரும் 9 நாட்களுக்கு பிறகு உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

தாய்லாந்தின் வடக்கு பகுதியில் உள்ள தாம் லுவாங் மலைப்பகுதியில் கடந்த மாதம் 23ஆம் திகதி 12 கால்பந்து விளையாட்டு வீரர்கள் மற்றும் ஒரு பயிற்சியாளர் மலையேற்ற பயிற்சி மேற்கொண்டனர். அப்போது, மலைப்பகுதியில் கனமழை பெய்ததன் காரணமாக 13 பேரும் அங்குள்ள குகை ஒன்றில் ஒதுங்கியுள்ளனர்.

அதன் பின்னர், அவர்கள் அங்கிருந்து திரும்பவில்லை. வெள்ளம் காரணமாக அவர்கள் குகைக்குள் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்று கூறப்பட்ட நிலையில், அவர்களை மீட்கும் பணியில் தாய்லாந்து இராணுவம் தீவிரமாக களமிறங்கியது.

குகைக்குள் உடனடியாக செல்ல முடியாததால், குகையில் 25இற்கும் மேற்பட்ட பகுதியில் துளையிடப்பட்டு அதன் வழியாக ஒட்சிசன் வாயு செலுத்தப்பட்டது. பின்னர் குகையில் தேங்கியுள்ள தண்ணீர் வெளியேற்றப்பட்டது. சுமார் 1000 இராணுவ வீரர்களுடன், வெளிநாடுகளில் இருந்து குகை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு தேடும் பணி நடந்தது.

9 நாட்களுக்குப் பிறகு குகைக்குள் கால்பந்து குழுவினர் சிக்கியிருக்கும் பகுதியை நேற்று முன்தினம் நெருங்கினர்.

அதன் பின்னர் பிரிட்டனைச் சேர்ந்த இரண்டு நீர்மூழ்கி வீரர்கள் தண்ணீருக்குள் மூழ்கிச் சென்று மற்றொரு முனைக்கு கரை யேறிய போது அங்கு கால் பந்து குழுவினர் இருந்தது தெரியவந்தது.

இருட்டாக இருந்ததால் டோர்ச்லைட் அடித்து, அவர்களிடம் நீர்மூழ்கி வீரர்கள் பேசியுள்ளனர். அப்போது, எடுக்கப்பட்ட வீடியோ பேஸ்புக்கில் வெளியிடப்பட்டுள்ளது. அதில், குகைக்குள் இருக்கும் நபர்களிடம் எத்தனை பேர் இருக்கிறீர்கள் என்று நீர்மூழ்கி வீரர்கள் கேட்க, 13 பேர் இருப்பதாக பதில் வருகிறது. இதனால் மகிழ்ச்சி அடைந்த நீர்மூழ்கி வீரர்கள், நீங்கள் மிகவும் தைரியசாலிகள் என்று கூறி அவர்களை தேற்றினர். (7)

ரோஹிஞ்யா அகதிகளுக்கு நீதி கிடைக்க வேண்டும்

ஐ.நா. பொதுச் செயலாளர் வலியுறுத்து

(டாக்கா)

ஐ.நா. சபை பொதுச்செயலாளர் அந்தோனியோ குட்ரேரஸ் பங்களாதேஷத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள ரோஹிஞ்யா அகதிகளை சந்தித்தார்.

மியன்மார் நாட்டில் சிறுபான்மையினராக வசிக்கும் ரோஹிஞ்யா இனத்தவர்கள் பங்களாதேஷத்தில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர். இதுவரை சுமார் 7 இலட்சம் பேர் அகதிகளாக பல்வேறு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என ஐ.நா. சபை வலியுறுத்தி வந்துள்ளது.

இந்நிலையில், பங்களாதேஷத்தில் பல்வேறு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள ரோஹிஞ்யா அகதிகளை ஐ.நா. சபை பொதுச் செயலாளர் அந்தோனியோ குட்ரேரஸ் சந்தித்தார்.

அவருடன் உலக வங்கி தலைவர் ஜிம் யாங் கிம், பங்களாதேஷ் வெளியுறவுத் துறை அமைச்சர் மகமுது அலி, ஐ.நா. சபை உயர் அதிகாரி பிலிப்போ கிராண்டி உட்பட பலர் உடனிருந்தனர்.

இதுதொடர்பாக குட்ரேரஸ் டுவிட்டரில் கூறுகையில், ரோஹிஞ்யா அகதிகளுக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும் எனப் பதிவிட்டுள்ளார்.

மேலும், வரும் மழைக் காலத்துக்குள் ரோஹிஞ்யா அகதிகள் தங்குவதற்கு தேவையான அடிப்படை வசதிகள் அமைத்து தருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்துள்ளார். (7-8)

மலேசிய முன்னாள் பிரதமர் ரசாக் ஊழல் தடுப்புப்பிரிவினரால் கைது

(கோலாலம்பூர்)

மலேசியாவின் முன்னாள் பிரதமர் நஜீப் ரசாக் ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்த மலேசிய முன்னாள் பிரதமர் நஜீப் ரசாக் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த இரு மாதங்களில் ஊழல் குற்றச்சாட்டுக்கு இலக்காகியிருந்த நஜீப் ரசாக்கின் வீடு மற்றும் அலுவலகங்களில் பணமோசடி தடுப்பு பிரிவு அதிகாரிகள் தொடர் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது, பெருந் தொகையான பணம், நகை உள்ளிட்ட ஆடம்பரப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்த பெறுமதி, 27.5 கோடி டொலர்கள் என அறிவிக்கப்பட்டது: அவற்றில் 12000 நகைகள், 567 ஆடம்பர கைப்பைகள், 234 ஆடம்பர கண்ணாடிகள் மற்றும் 423 விலையுயர்ந்த கைக் கடிகாரங்களும் உள்ளடங்குகின்றன.

இந்த குற்றச்சாட்டுகளை நஜீப் ரசாக் தரப்பு மறுத்து வந்த போதிலும், அவர் எப்போது வேண்டுமானாலும் கைதாகலாம் என்ற நிலையில், நேற்று பண மோசடி தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் உட்பட 11 பேரிடம் கொழும்பில் தீவிர விசாரணை

(கொழும்பு)

புலிக்கொடி, சீருடைகள் மற்றும் ஆயுதங்கள் என்ப வற்றுடன் கைது செய்யப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் உட்பட 11 பேர் கொழும்பில் வைத்து தீவிர விசாரணைக்கு உட்ப டுத்தப்பட்டுள்ளனர்.

இந்த விடயத்தை சுட்டிக் காட்டி நேற்று முன்தினம் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை 11 சந்தேக நபர்களும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப் படைக்கப்பட்டுள்ள நிலை யில் விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன், சம்பவத்தின் பின் ஒட்டுசுட்டான் பகுதி யில் கண்காணிப்பு மற்றும் சோதனை நடவடிக்கைக ளும் தீவிரப்படுத்தப்பட்டுள் ளன.

ஆயுதங்கள் மற்றும் புலிக் கொடி, சீருடைகள் மீட்கப்பட்ட விடயத்தை சாதாரணமாக கருதாது படையினர் குறித்த நடவடிக்கைகளை முன்னெ டுத்து வருவதாக வட பகுதிக் கான பிரதி பொலிஸ்மா அதிபர் ரொசான் பெர்னா ண்டோ குறிப்பிட்டுள்ளார் என அந்தச் செய்தியில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 22ஆம் திகதி அதிகாலை பொலிஸார், மேற்கொண்ட சோதனை யின் போது ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதியில் வைத்து ஆட்டோவொன்றி லிருந்து வெடிபொருட்கள், விடுதலைப்புலிகளின் சீரு டைகள் மற்றும் புலிக்கொடி கள் என்பன மீட்கப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக் கது. (இ-7)

மோடி-மைத்திரி அடுத்த மாதம் நேபாளத்தில் முக்கிய பேச்சு

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந் திர மோடியும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அடுத்த மாதம் சந்தித்துப் பேச்சு நடத்தும் வாய்ப்புகள் இருப்பதாக டில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிம்ஸ்ரெக் எனப்படும் பலதுறை தொழில்நுட்ப மற் றும் பொருளாதார ஒத்து ழைப்புக்கான, வங்காள விரிகுடா அமைப்பு நாடு களின், தலைவர்களின் உச்சி மாநாடு எதிர்வரும் ஓகஸ்ட் 30 ஆம், 31ஆம் திகதிகளில் நேபாளத்தில் நடைபெறவுள்ளது.

பங்களாதேஷ், இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்லாந்து, பூட்டான், நேபா ளம் ஆகிய ஏழு நாடுகள் அங்கம் வகிக்கும் இந்த பிம்ஸ்ரெக் அமைப்பின் தலைவர்களின் உச்சி மாநாடு கடந்த மார்ச் மாதம் நடைபெறவிருந்தது.

எனினும், நேபாளத்தில் உள்நாட்டு அரசியல் கார ணங்களால் இந்த மாநாடு ஓகஸ்ட் 30 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டது.

இந்த மாநாட்டில், ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட தலை வர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

ஜனாதிபதியும் இந்தியப் பிரதமரும் இந்த மாநாட்டில் பங்கேற்றால் இருதரப்பு முக்கி யத்துவம் வாய்ந்த விவகா ரங்கள் குறித்துப் பேச்சுக் களை நடத்தும் வாய்ப்புகள் இருப்பதாக தெரிவிக்கப்படு கிறது.

இந்தியாவிலும் இலங் கையிலும் அடுத்த ஆண்டு ஆட்சியைத் தீர்மானிக்கும் முக்கியமான தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் இந்தச் சந்திப்பில் முக்கிய விவகாரங்கள் குறித்து பேச் சுக்கள் நடத்தப்படலாம் என் றும் எதிர்பார்க்கப்படுகி றது. (இ-7)

சு.கவின் ஊடகப் பேச்சாளராக அமைச்சர் சமரசிங்க நியமனம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சா ளராக அமைச்சர் மகிந்த சமரசிங்க நியமிக்கப்பட் டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற சுதந்திரக் கட்சியின் அதிகாரிகள் சபை கூட்டத்தின் போதே மேற் கண்ட தீர்மானம் எட்டப் பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளராக, முன்னாள் அமைச்சர் டிலான் பெரேராவே நிய மிக்கப்பட்டிருந்தார். அவர் அரசாங்கத்திலிருந்து வெளி யேறி ஒன்றிணைந்த எதிர ணியுடன் இணைந்து கொண் டார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அமைச்சரவை இணைப் பேச் சாளராக முன்னாள் அமை ச்சர் தயாசிறி ஜெயசேகர நிய மிக்கப்பட்டிருந்தார்.

அரசாங்கத்திலிருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 16 பேரில் தயாசிறி ஜெயசேகரவும் அடங்குகின்றார்.

இந் நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளராக அமைச்சர் சமர சிங்க நியமிக்கப்பட்டுள் ளார். (இ-7)

ஸ்கொட்லாந்து பொலிஸாரை விட இலங்.இளைஞர்கள் சிறப்பானவர்கள்

சுவிஸ் யுவதிகள் பாராட்டு

(கொழும்பு)

ஸ்கொட்லாந்து பொலி ஸாரைவிட இலங்கை இளைஞர்கள் சிறப்பானவர் கள் என சுவிஸ் யுவதிகள் இருவர் பாராட்டியுள்ளனர்.

ஜெனிபர் ஹெமில்டன் மற்றும் லின்ஸி ஹெமில்டன் என்ற இரண்டு யுவதிகளே இவ்வாறு பாராட்டியுள்ளனர்.

குறித்த யுவதிகள் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் இலங்கைக்கு சுற் றுலா பயணம் மேற்கொள்ள வந்துள்ளனர். அவர்கள் எல்லப் பகுதியை சுற்றி பார் ப்பதற்காக சென்றுள்ள னர்.

இந் நிலையில் வீதியில் பயணித்துக் கொண்டிருக் கும் போது 5 இளைஞர்கள் இந்த யுவதிகளிடம் பேச முற்பட்டுள்ளனர். எனினும் அவர்கள் அங்கிருந்து செல்ல முயற்சித்த போது, அவர்களின் பையை கொள் ளையடித்துக் கொண்டு அந்த இளைஞர்கள் அவ்விட த்தை விட்டு ஓடியுள்ளனர்.

யுவதிகள் பொலிஸாரி டம் சம்பவத்தைக்கூற முயற் சித்துள்ளனர். எனினும் மொழிப் பிரச்சினை கார ணமாக இதனை அவர்க ளால் கூற முடியவில்லை. பொலிஸாரும் பெரிதாக கண்டு கொள்ளவில்லை.

எனினும் சம்பவம் இடம் பெற்ற சந்தர்ப்பத்தில் 12 இளைஞர்கள் அந்தப் பகுதி யில் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்துள்ளனர். அந்த இளைஞர்கள் ஓரள விற்கு சம்பவத்தை புரிந்து கொண்டதுடன், யுவதிக ளுக்கு உதவி இலங்கை யின் பெயரைக் காப்பாற்ற முயற்சித்துள்ளனர்.

பையை கொள்ளைய டித்தவர்கள் தப்பியோடும் போதும் இந்த யுவதிகள் அவர்களைப் புகைப்படம் எடுத்துள்ளனர். அதற்கமைய உடனடியாகச் செயற்பட்ட இளைஞர்கள் திருடர்களை தேட ஆரம்பித்தனர். அங்கு ள்ள ஆட்டோ சாரதிகளின் உதவியைப் பெற்றுக் கொண்ட இளைஞர்கள் திருடர்கள் ஓடிய திசையில் கிடைத்த தடயப்பொருட்களை வைத்து ஒன்றரை மணித்தியாலத் திற்குப்பின் திருடனை பிடித் துள்ளனர்.

அதற்கமைய திருடர்களி னால் திருடப்பட்ட பணப்பை மீளவும் வெளிநாட்டு யுவதி களிடம் ஒப்படைக்கப்பட்டு ள்ளது.

இலங்கையில் இன்ன மும் நல்லவர்கள் இருக்கின் றார்கள் எனவும், ஸ்கொட் லாந்து பொலிஸாரை விட இலங்கை இளைஞர்கள் சிறப்பானவர்கள் எனவும் வெளிநாட்டு யுவதிகள் கூறி யுள்ளனர்.

இந்த உதவியை ஒரு போதும் மறக்க மாட்டோம் என்று கூறி கண்ணீருடன் அவர்கள் நன்றி தெரிவித் துள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஒரு தகவல்

நயமாக அறிவுறுத்துவது எப்படி?

சிலரிடம் ஒன்றைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை; இதே நேரத்தில் சொல்லவும் முடியவில்லை. தயக்கம்.

பக்கத்து வீட்டுக்காரர் தாம் தூம் என்று றேடியோவைக் கத்தவிட்டுத் தூள் கிளப்புகிறார். நமக்கோ மண்டையிடி யாக இருக்கிறது. அவரோ தெரிந்தவர். வேண்டியவரும் கூட.

எப்படிச் சொல்வது? சொன்னால் தவ றாக எடுத்துக் கொள்வாரா? அப்புறம் நட்பு முறிந்து விடுமே? நமக்கு ஏன் பொல்லாப்பு? இப்படியெல்லாம் சிந்த னைகள்.

நல்ல குடித்தனக்காரர். ஆனால் தாம தமாகத்தான் வாடகை தருவார். இப்படி இன்னும் பல உதாரணங்களைச் சொல்ல வேண்டுமா என்ன? தேவை யில்லை. எவருக்கு எது பொருந்துகி றதோ, அதை மனக்கண்முன் கொண்டு வாருங்கள்.

இத்தகைய பிரச்சினைகளை எதிர் நோக்குகிறவர்களுக்குச் சில தீர்வுகள் காத்திருக்கின்றன.

இவர்களை வழிக்குக் கொண்டுவர நல்ல சந்தர்ப்பங்கள் வாய்க்கும். அவற் றுக்காகக் காத்திருக்க வேண்டும். அவ சரப்படக் கூடாது. ஆற அமர பேசும் வாய் ப்பை உருவாக்கிக்கொள்ள வேண்டும். இவர்களுடைய எல்லாச் சிறப்புகளை யும் சொல்லி அந்தச் சில குறைகள் மட்டும் இல்லாதிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்கிற தொனி முக்கியம்.

அவர்களது செயலைத்தான் (மென் மையாகக்) கண்டிக்க வேண்டுமே தவிர, அவர்களைக் கண்டிக்கக்கூடாது.

என்ன உளறுகிறீர்கள் என்கிறீர் களா? தெளிவாக்கி விடுகின்றேன். உங் களைக் கண்டாலே எரிச்சலாக இருக் கிறது என்பதற்கும் உங்கள் செயல் எரிச் சலை உண்டு பண்ணுகிறது என்பதற் குமிடையே எவ்வளவு வேறுபாடு இருக் கிறது என்று கவனியுங்கள்.

மறந்தும் கடுமையான வார்த்தை களையோ, கோபமான குரலிலோ, கடு மையான தொனியிலோ பேசிவிடக் கூடாது.

உங்களுடனான நட்பும் நல்லுறவும் தொடர்ந்து வேண்டும் என்பதை நன்கு உணர்த்தி விடயத்தை முடியுங்கள். நாம் விரும்புகிற விடயங்களையெல்லாம் மற்றவர்களிடத்தில் தெரியப்படுத்தி விட லாம். எவ்வளவு கடுமையான கசப்பை யும் தேன் கலந்து கொடுத்துவிடலாம். எனவே எதைச் சொல்லவும் யோசிக்கா தீர்கள். ஆனால் சொல்லுகிற முறை, உணர்த்தும் விதம் ஆகியவற்றைப் பற்றி மட்டும் திரும்பத் திரும்ப யோசியுங்கள். பிறகு தெளிந்து சொல்லி விடுங்கள்.

லேனா தமிழ்வாணன்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

செல்வி தா.குணரஞ்சினி
(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
ஒய்வு பெற்ற ஆசிரியர்)

தமிழ்மொழி
நேரம் : ஒரு மணித்தியாலம்

22. ரவி பிற்பகல் 2.30க்கு நூலகத்திற்குச் சென்று பி.ப. 5.00 மணிக்கு நூல கத்தைவிட்டு வெளியேறினான்.

1. ரவி நூலகத்திற்கு புறப்பட்ட நேரத்தை நியம நேரத்தில் தருக?
2. அவன் நூலகத்தில் எவ்வளவு நேரம் தங்கியிருந்தான்?

23. 21 kg விசுக்கோத்திலிருந்து 375 g எடுக்கப்பட்டால் மிகுதி எத்தனை?

..... kg ..... g

24. 1 லீற்றர் 500 மில்லிலீற்றர் குளிர்பானம் 6 பிள்ளைகளுக்கு சமனாக பகிர்ந் தளிக்கப்பட்டது. அவர்களில் மூவர் பெறும் குளிர்பானத்தின் மொத்த அளவு யாது?

25. 

இவ்வுருவின் சுற்றளவு யாது?

26.

விலைப்பட்டியல்		
பால்மா பைக்கற் 01	ரூபாய்	275.00
சீனி 1kg	ரூபாய்	90.00
சவர்க்காரக்கட்டி 01	ரூபாய்	40.00

1. விமல் 2kg சீனியும் ஒரு பால்மா பைக்கற்றும் வாங்கினான். அவன் செலுத்திய பணம் எவ்வளவு?
2. விமல் இரண்டு பால்மா பைக்கற் வாங்கிக்கொண்டு 1000/= செலுத் தினால் அவனுக்குக் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?

27. 
இவ்வுருவில் உள்ளே உள்ள செங்கோணங்கள் எத்தனை?

28. பூந்தோட்டம் ஒன்றில் பறிக்கப்பட்ட பூக்களை எண்ணி மாணவன் ஒருவனால் தயாரிக்கப்பட்ட வரைவு கீழே காட்டப்பட்டுள்ளது?

நிறம்	பூக்களின் எண்ணிக்கை
சிவப்பு	60
மஞ்சள்	40
வெள்ளை	90
ஊதா	70
செம்மஞ்சள்	.....



1. அட்டவணையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக?
2. ஊதா நிறப்பூக்களை விட எத்தனை சிவப்பு பூ கூடுதலாக உள்ளன?

29. நான்முகி ஒன்றின்

முகப்பு .....
உச்சி .....
விளிம்பு .....

● 30 தொடக்கம் 60 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்த மான விடையை தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

30. வெள்ளை நிற பூக்களை உருவாக்கும் தாவரம் எது?

1. பூசணி 2. பாகல்
3. வெண்டி 4. மிளகாய்

31. மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டின் 3 ஆவது படிமுறை?

1. உடலைத் தளர்த்தல் 2. மனதைத்தளர்த்தல்
3. மலர்வு 4. மனவுறுதி

32. வித்துக்களைப் பயன்படுத்தி செய்யும் ஆக்கம்?

1. கொலாஜ் 2. ஓரிகாய்
3. அல்பனா 4. ஒட்டுச்சித்திரம்

33. பூனை விரும்பி உண்ணும் தாவரம் எது?

1. அறுகம்புல் 2. குப்பைமேனி
3. வெண்டி 4. நாணல்புல்

34. வீட்டுத் தோட்டத்தில் பயிரிட முடியாதது எது?

1. கீரை 2. கத்தரி
3. பாகல் 4. குரக்கன்

35. சமுதாயமாக வாழும் பிராணி அல்லாதது எது?

1. தேனீ 2. எறும்பு
3. குளவி 4. வண்டு

36. இலங்கைக்கு முதன்முதலில் வந்த வெளிநாட்டவர் யார்?

1. ஒல்லாந்தர் 2. போர்த்துக்கேயர்
3. ஆங்கிலேயர் 4. பிரித்தானியர்

37. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?

1. கரப்பந்தாட்டம் 2. எல்லே
3. கிரிக்கெட் 4. கால்பந்தாட்டம்

38. இலங்கையில் முதலில் அமைக்கப்பட்ட குளம் எது?

1. கந்தளாய்க்குளம் 2. அபயவாவி
3. கலாவாவி 4. மின்னேரியாக்குளம்

39. எம் மதத்தவர்கள் தோசங்கள் நீக்கிக் கொள்வதற்கு பிரித் ஓதிய நீரைத் தெளிக் கின்றனர்?

1. இந்துக்கள் 2. முஸ்லிம்கள்
3. பௌத்தர்கள் 4. கிறிஸ்தவர்கள்

40. மகாவலி கங்கை கடலுடன் கலக்கும் இடம்?

1. யாழ்ப்பாணம் 2. திருகோணமலை
3. கண்டி 4. களுகங்கை

41. தெற்குத்திசையில் காணப்படும் உடுத்தொகுதி?

1. பெருங்கரடி 2. விருச்சிகம்
3. தென்சிலுவை 4. கார்த்திகை

42. பயிர்ச்செய்கைக்கு உகந்த ம்ண்?

1. மணல் மண் 2. களிமண்
3. இருவாட்டி மண் 4. ஈரக்களி மண்

43. கழிச்சல் நோயை ஏற்படுத்தும் பிராணி எது?

1. நுளம்பு 2. எலி
3. ஆந்தை 4. ஈ

44. பின்வருவனவற்றுள் அனைத்துமுண்ணி எது?

1. நாய் 2. நரி
3. கிளி 4. கழுகு

45. சக்தியைத் தரும் போசணைச் சத்து?

1. புரதம் 2. விற்றமின்
3. காபோவைதரேற்று 4. கொழுப்பு

46. இயற்கை அனர்த்தங்களில் ஒன்று?

1. மின்தாக்குதல் 2. மின்னல்
3. தீ விபத்து 4. சறுக்கிவிழுதல்

47. சிகிரியா அமைந்துள்ள மாவட்டம்?

1. கண்டி 2. மாத்தறை
3. அம்பாறை 4. அநுராதபுரம்

48. ஒலிம்பிக் விளையாட்டின் பிறப்பிடம்?

1. அமெரிக்கா 2. சீனா
3. கிரேக்கம் 4. இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. மாட்டிறைச்சி உண்பதைத் தவிர்ப்பதற்காக அரும்பாடுபட்ட பெரியவர் யார்?
1. வண.எஸ்.மகிந்த 2. ரி.பி.ஜயா
3. டி.பி.ஜயதிலக்க 4. C.W.W.கன்னங்கரா

50. தேசப்படங்களில் பிரதான வீதியைக் குறிக்கப் பயன்படும் நிறம்?
1. கறுப்பு 2. நீலம்
3. சிவப்பு 4. மஞ்சள்

51. இலங்கையின் தேசியக்கொடியில் செம்மஞ்சள் நிறம் குறிக்கும் மதம்?
1. சிங்களவர் 2. முஸ்லிம்கள்
3. பறங்கியர் 4. தமிழர்

52. புவியின் துணைக்கோள் எது?
1. செவ்வாய் 2. சந்திரன்
3. சனி 4. புதன்

53. நீரில் மாத்திரம் வாழும் விலங்கு?
1. தவளை 2. பாம்பு
3. கணவாய் 4. ஆமை

54. இலங்கையின் அரச இலச்சினையில் நெற்கதிர் குறிப்பது?
1. தன்னிறைவு 2. சௌபாக்கியம்
3. தூய்மை 4. நிலைத்திருப்பு

55. மஞ்சள் நிறத்தையும் நீல நிறத்தையும் கலக்கும் போது உண்டாகும் நிறம்?
1. கபிலம் 2. நீலம்
3. பச்சை 4. செம்மஞ்சள்

56. இலங்கைக்கு எத்திசையில் ஆபிரிக்க நாடுகள் உள்ளன?
1. வடக்கு 2. தெற்கு
3. கிழக்கு 4. மேற்கு

57. மின்னேரியாவின் தெய்வம் எனப் போற்றப்படும் அரசன் யார்?
1. காசியப்பன் 2. மகாசேனன்
3. தாதுசேனன் 4. தேவநம்பியதீசன்

58. கூடைப்பந்தாட்ட விளையாட்டில் ஒரு குழுவில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை?
1) 6 2) 5 3) 11 4) 7

59. மின்விளக்கை கண்டுபிடித்த விஞ்ஞானி?
1. தோமஸ் அல்வா எடிசன் 2. மார்க்கோணி
3. அலெக்சாண்டர் கிரஹம்பல் 4. ஆக்கிமிடிஸ்

60. இலங்கை குடியரசு ஆகிய ஆண்டு எது?
1. 1948 2. 1981 3. 1972 4. 1974

61. காந்தம் கவரும் பொருள் அல்லாதது?
1. பஞ்சு 2. சவரகம்
3. ஆணி 4. உருக்கு

கோப்பாய் சபாபதி நாவலர்

ஈழமணித்திருநாட்டின் வடபுலத்தே யாழ்ப்பாணத்தின் இதய பூமியாய் விளங்கும் கோப்பாய் என்னும் புண்ணிய பூமியின் வடபால் (சங்கிலி மன்னனின் கோட்டை) அமைந்துள்ள கோப்பாய் வடக்குப் பிரதேசத்தில் சுயம்பு நாதபிள்ளை தெய்வானை அம்மையார் தம்பதிகளுக்கு 1844 ஆம் ஆண்டு தெய்வீக அம்சம் பொருந்திய மகனாக சபாபதி என்னும் புலமையாளன் அவதரித்தார். இவர் இளமையிலேயே கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினார். இவர் ஆரம்பக் கல்வியை கோப்பாய் ஜெகந்நாதையரிடமும் தென்கோவை குமாரசூரியரிடமும் கற்றுத் தேர்ந்து இலக்கியம், இலக்கணம், வடமொழி என்பவற்றை நீர்வேலி சிவசங்கர பண்டிதரிடமும் கற்றுத் தேர்ந்து வடமொழி, தென் மொழி இரண்டிலும் சிறந்து விளங்கினார். இவர் சைவத்தின் மீதும் தமிழின் மீதும் அளவிறந்த பற்றுறுதியுடன் காணப்பட்டார்.

இதனால் கிறிஸ்தவமத பாடசாலை ஒன்றில் சேர்ந்து கல்வி கற்க விரும்பாத இவர் தனிப்பட்ட ஆசிரியர் ஒருவரிடமே ஆங்கிலக் கல்வியையும் கற்றுத் தேர்ந்து மும் மொழிப் புலமையாளனாகத் திகழ்ந்தார்.

சபாபதி நாவலரின் ஞானத்தினாற் கவரப்பட்டு ஆறுமுகநாவலர் அவர்கள் தம் மால் சிதம்பரத்தில் அமைக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையில் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்குமாறு வேண்டியதற்கிணங்க சிலகாலம் அப்பொறுப்பிலிருந்து தமிழ்ப் பணிபுரிந்தார். ஆறுமுக நாவலரவர்கள் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையைமேற்பார்வைசெய்த பின் தனது குறிப்பில் கோப்பாய் சபாபதிப்பிள்ளை கற்பிக்குந் திறமையில் நன்கு மதிக் கற்பாலர் எனக் குறிப்பிடப்பட்டிருப்பது சபாபதி நாவலரின் திறமைமீது ஆறுமுக நாவலர் கொண்டிருந்த நன்மதிப்பைக் காட்டுகின்றது. பின்னர் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு வந்து பதினாறாவது மாபெரும் தம்பிரான் சுப்பிரமணிய தேசிகரிடம் அருளுபதேசம் பெற்றார்.

அவர் முன்னிலையில் பன்னிரண்டு ஆண்டுகள் ஞான நூல்களை ஐயந் திரிபறக் கற்றுணர்ந்தார். வடமொழி, தென்மொழி, இலக்கியம், இலக்கணம், தருக்கம், சித்தாந்தம், வேதாந்தம் இவற்றில்சபாபதிநாவலருக்கு இணையாருமில்லை.

இவர்மதுரை ஆதீனத்தால் மகா வித்துவான் என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டார். கற்று வல்லராய் சொற்போர் புரியும் நாவன்மையையும் அவையோரை வியக்க வைக்கும் சொற்பொழிவாற்றும் வல்லமையையும் கண்ட திருவாவடுதுறை ஆதீன சுப்பிரமணிய தேசிக சுவாமிகளால் நாவலர் என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். திருவாவடுதுறை ஆதீனத்து சிவஞான யோகிகளால் சிவஞானபோதத்திற்குச் சிற்றுரையும் பேருரையும் செய்யப்பட்டது. இது திராவிட மாபாடியம் எனப்பட்டது.

இதனை அக் காலத்தில் சைவசமயத்தில் அதி தீவிர பக்குவமுடையவர்களுக்கு மாத்திரமே வாசிக்கக் கொடுப்பது ஆதீன மரபு நாவலர் அங்கு சேர்ந்த சில நாளிலேயே ஆதீனத்துச் சுவாமிகள் அவரிடம் அதனை வாசித்து வரும்படி கொடுத்தார். இச் செயல் ஆதீனத்தார் நாவலர் மீது கொண்டிருந்த நன்மதிப்பின் எடுத்துக் காட்டாக அமைகின்றது.

நாவலரவர்கள் இந்தியாவில் வாழ்ந்த காலத்தில் நாட்டுப்பெருமை, சமயப் பெருமை, மொழிப்பெருமை என்பவற்றை வலியுறுத்தி இந்தியாவின் பல பகுதிகளுக்குச் சென்று சொற்பொழிவாற்றினார். இராமநாதபுரம் மன்னராகிய பாஸ்கரசேதுபதி அவர்கள் நாவலரைத் தனது அரண்மனைக்கு அழைத்து சொற்பொழிவாற்றச் செய்தார். அத்துடன் சேதுபதி மன்னர் இவரைப் பாராட்டி ''சைவசிகாமணியாயும் பரசமய கோளரியாயும் விளங்கா நிற்கும் கனம் நாவலர் அவர்களுக்கு'' என விழித்துள்ளமையையும் கவனிக்கத் தவறவில்லை.

நாவலர் அவர்களுக்கு ''வித்துவான்'' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். கற்று வல்லராய் சொற்போர் புரியும் நாவன்மையையும் அவையோரை வியக்க வைக்கும் சொற்பொழிவாற்றும் வல்லமையையும் கண்ட திருவாவடுதுறை ஆதீன சுப்பிரமணிய தேசிக சுவாமிகளால் நாவலர் என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். திருவாவடுதுறை ஆதீனத்து சிவஞான யோகிகளால் சிவஞானபோதத்திற்குச் சிற்றுரையும் பேருரையும் செய்யப்பட்டது. இது திராவிட மாபாடியம் எனப்பட்டது.

இதனை அக் காலத்தில் சைவசமயத்தில் அதி தீவிர பக்குவமுடையவர்களுக்கு மாத்திரமே வாசிக்கக் கொடுப்பது ஆதீன மரபு நாவலர் அங்கு சேர்ந்த சில நாளிலேயே ஆதீனத்துச் சுவாமிகள் அவரிடம் அதனை வாசித்து வரும்படி கொடுத்தார். இச் செயல் ஆதீனத்தார் நாவலர் மீது கொண்டிருந்த நன்மதிப்பின் எடுத்துக் காட்டாக அமைகின்றது.

நாவலரவர்கள் இந்தியாவில் வாழ்ந்த காலத்தில் நாட்டுப்பெருமை, சமயப் பெருமை, மொழிப்பெருமை என்பவற்றை வலியுறுத்தி இந்தியாவின் பல பகுதிகளுக்குச் சென்று சொற்பொழிவாற்றினார். இராமநாதபுரம் மன்னராகிய பாஸ்கரசேதுபதி அவர்கள் நாவலரைத் தனது அரண்மனைக்கு அழைத்து சொற்பொழிவாற்றச் செய்தார். அத்துடன் சேதுபதி மன்னர் இவரைப் பாராட்டி ''சைவசிகாமணியாயும் பரசமய கோளரியாயும் விளங்கா நிற்கும் கனம் நாவலர் அவர்களுக்கு'' என விழித்துள்ளமையையும் கவனிக்கத் தவறவில்லை.

நாவலர் அவர்களுக்கு எனவும் விழித்து தங்களை யாம் அழைத்து வந்த காரணம் தங்கள் பிரசங்க அமிர்தத்தினை நுகருமாறும் நம் சமஸ்தானத்திலுள்ள சகல பிரஜைகளும் சைவ உண்மைகள் தேறுமாறும் திராவிட சைவசித்தாந்த வித்தியா போதஞ் செய்து போதரும் கடப்பாட்டினைத் தாங்கள் மேவுதல் வேண்டும் என்பதே என மன்னர் சேதுபதி குறிப்பிட்டிருப்பது மன்னர் பெருமான் நாவலர்கள் மீது வைத்திருந்த அன்பையும் நன்மதிப்பையும் காட்டுகின்றது.

சபாபதி நாவலர் யாழ்ப்பாணத்தில் இருக்கும் காலத்தில் குன்மநோயால் அவஸ்தைப்பட்டு நல்லைக்கந்தன் கதியென்று அங்கு தங்கி முருகன் பாமாலைகளையே பாடிக்கொண்டிருந்தார். காலகதியில் குன்ம நோய்குணமாகியது. இதனால் நல்லூர்க்கந்தனின்மீது அளவு கடந்த பக்தி கொண்டிருந்த துடன் நல்லை சுப்பிரமணியக் கடவுள் பதிகத்தைப் பாடினார். சபாபதி நாவலர் பற்றி இந்தியப் பல்கலைக்கழகங்கள் பலவற்றில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சபாபதி நாவலரது சிறப்புக்கள் இந்தியா முழுவதும் இன்னும் நிலைத்திருப்பதுடன் ஆய்வுப் பொருளாகவும் விளங்குகின்றார்.

பேராசிரியர் கைலாசபதி போன்றோரும் சபாபதி நாவலரைப் பற்றிய கட்டுரைகளை எழுதியிருக்கின்றனர். காத்தி கேயசிவம் என்ற பிராமணோத்தமர் ஒருவர் இந்தியப் பல்கலைக்கழகமொன்றில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிப்பதற்காக இலங்கைக்கு வந்து இவரைப் பற்றிய தகவல்களை ஆராய்ந்து சென்றார்.

சபாபதி நாவலரவர்கள் நல்லொழுக்க நெறிநின்று சைவத்தையும் தமிழையும் வளர்க்கப்பாடுபட்டவர்களுள் முதன்மையானவராவார். அன்பும் பண்பும் வாய்ந்த அறிஞராய் வாழ்ந்தார். நாவலரவர்கள் 1903ஆம் ஆண்டு தனது ஐம்பத்தெட்டாவது வயதில் சிதம்பரத்தில் ஆசிரியர் சிவப்பிரகாச பண்டிதர், ச.பொன்னம்பலபிள்ளை, சுவாமிநாத பண்டிதர் முதலியோரைத் தம் அருகில் வர வழைத்து ''பவனமாய் சோடையாய்'' என்ற தேவாரத்திற்குப் பொருளுரைத்த படியே இறையடி சேர்ந்தார்.

சபாபதி நாவலரவர்கள் தனது முறை மாமனாகிய சுழிபுரம் க.சரவணமுத்து என்பார் நீண்டகாலமாகத் தவமிருந்து பெற்றெடுத்த புதல்வியைத்திருமணம்செய்தார். இவர் சுழிபுரம் பறாளை விநாயகர் ஆலயத்திற்கு வெள்ளிக்குடம் ஒன்றை வழங்கினார். இதுவே இந்த ஆலயத்தில் சிவபூசைக்கும் உருத்திர, நமின அபிஷேகங்களுக்கும் விசேட கும்பமாக இதனைப் பயன்படுத்துவதாக அறிகிறோம்.

''பிரதீபா பிரபா''
சைவப் புலவர்,
முருகேசு முரளிதரன்,
சைவசித்தாந்த
பண்டிதர்.

கும்பாபிஷேக விஞ்ஞானம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக் கட்டுவன் தெற்கு ஸ்ரீசிவபூதராயர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டாமஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல்காலை 9.30 மணி வரையில் இடம்பெறும்.

இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை எண் ணெய்க் காப்பு சாத்துதல் இடம் பெறும். (இ-8)

சர்வமதத் தலைவர்கள் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சர்வமத பேரவையின் விசேட ஒன்று கூடலும், தேசிய சமாதான பேரவையின் சர்வமத தலைவர்களுக்கான மாநாடு சார்ந்த கலந்துரை யாடலும் மற்றும் கண்டியில் அண்மையில் இடம்பெற்ற திகன தெல் தெனிய இன வன்முறை சம்பவத்தில் கண்டி சர்வமத குழுவினர் தலையிட்டு ஏற்படுத்திய மாற்றங்கள் சார்ந்த அனுபவப் பகிர்வும் அண்மையில் யாழ்ப பாணம் ரில்ஹோ சிற்றி ஹோட்டலில் யாழ்.மாவட்ட சர்வமத பேரவையின் தலைவர் சுபியான் மௌலவி தலைமையில் இடம் பெற்றது. இதில் சமயத் தலைவர்கள், மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். (இ-7)

கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தினருக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்தவ மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக வட மாகாண கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தினருக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் கோப்பாயில் அமைந்துள்ள இராணுவத்தின் 51 ஆவது படைப்பிரிவின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கிறிஸ்தவமதசமூகம்எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், பற்றியும், எதிர்கால திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இவ்வாறானகலந்துரையாடல்கள் எதிர்காலத்தில் மக்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் நல்ல புரிந்துணர்வையும் நல்லுறவையும் பேணிப் பாதுகாக்க இச்சந்தர்ப்பம் சாதகமாய் அமைந்துள்ளது என கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தினர் தெரிவித்தனர்.

இக் கலந்துரையாடலில் 51 ஆவது படைப்பிரிவு கட்டளை அதிகாரி வடமாகாண கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் வணபிதா கலாநிதி எஸ்.சந்திரகுமார், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (இ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறுமி றெஜினாவிற்கு நீதிகோரியும் சிறுவர் வன்கொடுமையை கண்டித்தும்

முருங்கனில் நேற்று அமைதிப்பேரணி

(பனிக்கன்குளம்)

யாழ்ப்பாணம் சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியைச் சேர்ந்த சிறுமி றெஜினாவின் படுகொலையை கண்டித்தும் நாடு முழுவதும் இடம்பெறும் பெண்கள் மற்றும் சிறுவர் மீதான வன்கொடுமைகளை கண்டித்தும் நேற்று முற்பகல் 10 மணியளவில் -மன்னார் முருங்கனில் அமைதிப் பேரணி முன்னெடுக்கப் பட்டது.

மன்னார் சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் முருங்கன் வைத்தியசாலை க்கு முன் குறித்த பேரணி ஆரம்பமானது.

குறித்த பேரணியில் அருட்தந்தையர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர் கள், பாடசாலை மாண வர்கள், பொது அமைப்பு க்கள், அப்பிரதேச வர்த்த கர்கள், பெண்கள் அமைப்பு க்கள், நானாட்டான் பிரதேச சபையின் தலைவர் திருச் செல்வம் பரஞ்சோதி,பிரதேச சபை உறுப்பினர்கள் மற் றும் பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

குறித்த பேரணிக்கு ஆத ரவு தெரிவித்து முருங்கன் வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை மூடி ஆத ரவு வழங்கியிருந்தனர்.

குறித்த பேரணி பிரதான வீதியூடாக நகர்ந்து முருங் கன் பேருந்து தரிப்பிடத்தை சென்றடைந்தது.

அதனைத் தொடர்ந்து அங்கு கண்டன உரைகள் இடம்பெற்றதோடு ஏற்பாட்டுக் குழுவினரினால் கோரி க்கை அடங்கிய மகஜர் உரிய தரப்பினருக்கு கைய ளிக்கும் வகையில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி பா.டெனிஸ் வரனிடம் கையளிக்கப்பட் டது. (2-281)

'றெஜினாவின் படுகொலைக்கு நீதி வழங்கு'

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவர்கள் நேற்று கவனயீர்ப்பு

(பனிக்கன்குளம்)

சிறுமி றெஜினாவின் கொலையைக் கண்டித்தும் போதைப்பொருள் பாவனை யைக் கட்டுப்படுத்தக் கோரியும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவர்கள் கவ னயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

மு/புதுக்குடியிருப்பு மத் திய கல்லூரியின் உயர்தர மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற கவனயீர்ப்புப் போராட்டம் புதுக்குடியிருப்பு சந்தியில் ஆரம்பமாகி பாட சாலையைச் சென்றடைந் துள்ளது.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள், பெண் என்பவள் போதைப் பொருள் அல்ல, தொட ருமா இந்த அவலம், கண் மூடியதா நல்லாட்சி என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு மாணவர்கள் ஈடுபட்டிருந்த னர். (2-281)

போராட்டமே வாழ்க்கை!

இக்கட்டான சூழ்நிலைக்குள் தமிழர்கள் தள்ளப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

தமது தேவைகளைப் போராடியே பெற்றுக் கொள்ள வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு தமிழ் மக்கள் தொடர்ச்சியாக தள்ளப்பட்டு வருவதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந் திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, வாழைச் சேனை பிரதேச செயலக த்திற்கு முன்பாக சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நபரின் போராட்டம் நாடா ளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரனின் தலை யீட்டையடுத்து நேற்று முன்தி னம் திங்கட்கிழமை மாலை யுடன் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதை தொட ர்ந்து அங்கு கருத்துத் தெரி விக்கையிலேயே நாடாளு மன்ற உறுப்பினர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க போராட வேண்டியவர்கள் மாலைகளை அணிந்து கொண்டு அமைச்சர்களுக்கு பின்னால் குடை பிடிக்கும் செயலில் ஈடுபட்டு வருவதாக வும் அவர் குற்றஞ்சாட்டினார்.

பல்வேறு கோரிக்கை களை முன்வைத்து வாழைச் சேனையைச் சேர்ந்த மு.ஸ்ரீ காந்த் என்பவர் சாகும்வரை உண்ணாவிரதப் போராட் டத்தை ஆரம்பித்தார்.

யுத்தத்தினால் பாதிக்கப் பட்ட மக்களின் பிரச்சினை களைத் தீர்க்கக் கோரியும் நுண்கடன்களினால் பாதிக் கப்பட்டவர்களின் கடன் களை அரசாங்கம் பொறுப் பேற்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.

குறிப்பாக வாழைச் சேனை பகுதியில் கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வீடு, குடிநீர், வீதி அபிவிருத்தி போன்ற அடிப் படைப் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கையெடுக்க வேண்டும் என்பதையும் இவர் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

மீண்டும் போராட்டத்தில் ஈடுபட தயாராகும் தபால் தொழிற்சங்கம்

தபால் ஊழியர்களுக்கு உரிய ஜூன் மாத சம்பளத்தை இன்று வழங்காவிட்டால் மீண்டும் தொழிற்சங்க நட வடிக்கையில் ஈடுபடப் போவ தாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கம் எச்சரித்துள் ளது.

அண்மையில் போராட் டத்தில் ஈடுபட்டிருந்த பணி யாளர்களின் 6 நாட்களுக் குரிய சம்பளத்தை வழங் காதிருக்க அரசாங்கம் தீர்மா னித்துள்ளதாக அந்த சங்கத் தின் ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித் தார்.

அத்துடன் ஜூன் மாதத் தில் 6 நாட்களுக்குரிய சம்ப ளத்தை வழங்காதிருக்க அமைச்சரவைப் பத்திரம் ஒன்றும் தாக்கல் செய்யப்பட வுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறு சம்பளம் வழங் கப்படாவிட்டால் தொழிற்சங் கப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அந்த சங்கம் எச் சரிக்கை விடுத்துள்ளது. (இ-7)

கொலை குற்றவாளிக்கு மரண தண்டனை!

(உப்புவெளி)

திருகோணமலை, உப்பு வெளி பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில் தனது தாயின் இரண்டாவது கணவரை கத்தியால் வெட்டிக் கொலை செய்தாரென குற்றஞ்சாட்டப் பட்டிருந்த நபரை குற்றவாளி யாக இனங்கண்ட திருகோ ணமலை மேல் நீதிமன்றம், அவருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

திருகோணமலை, ஆண்டாங்குளம் பகுதியைச் சேர்ந்த ஏ.எச்.சமீர லக்மால் (வயது-38) என்பவருக்கே இவ்வாறு நேற்று மரண தண்டனை விதித்து தீர்ப் பளிக்கப்பட்டது.

வழக்கின் தீர்ப்பு திருகோ ணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் இளஞ்செழியனால் வழங்கப் பட்டது.

திருகோணமலை, உப்பு வெளி பொலிஸ் பிரிவுக்குட் பட்ட ஆண்டாங்குளம் பகுதியில், கடந்த 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் திகதியே இந்தக் கொலைச் சம்பவம் இடம் பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர் பில், சட்டமா அதிபர் திணை க்களத்தினால் குற்றப் பத் திரிகை தாக்கல் செய்யப் பட்டு, திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு உட்படுத் தப்பட்டு வந்த நிலையிலேயே, நேற்று இவ்வாறு தீர்ப்பளிக் கப்பட்டது. (இ-7)

துமிந்த சேலை அணிய வேண்டும்

தேர்தல் காலத்தில் தன க்குக் கிடைத்ததாகக் கூறும் சேலைக்கு பொருத்தமான ரவிக்கை ஒன்றை தைத்துக் கொண்டு அதை அணிந்து, கடிகாரத்தை கட்டி ஸ்ரீல ங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க அநுராதபுரத்தை சுற்றி வர வேண்டும் என ஒன்றிணைந்த எதிரணி கேலி செய்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இலஞ்சம் பெற்றாரென்று நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை வெளி யிட்டுள்ள செய்தி உண்மை யாக இருக்கலாம் எனக்கூறி யுள்ள அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, தேர்தல் காலத் தில் தனக்கு கடிகாரங்கள், சேலைகள் என்பன தனக் கும் கிடைத்ததாக தெரிவித் திருந்தார்.

இந்நிலையில், அமை ச்சர் துமிந்த திஸாநாயக்க வின் கருத்துக்குப் பதலடி கொடுக்கும் வகையில் ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன இதனை தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் - 18

திருடர்கள் அரசியலுக்கு வருவதால் மக்களுக்குத் தான் இறுதியில் கஷ்டம்

மாகாணசபை உறுப்பினர் சமந்த கவலை



(கொழும்பு)

திருடர்களை அரசியலுக்கு கொண்டு வருவதால் மக்கள்தான் இறுதியில் கஷ்டப்படுகின்றனர் என மக்கள் விடுதலை முன்னணியின் ஊவா மாகாண சபை உறுப்பினர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் வாதிகளின் செயற்பாடுகளால் நாட்டிற்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகள் தொடர்பில் மக்கள் நன்கு அறிந்திருந்தாலும் அவர்கள் மீண்டும் அதே அரசியல் வாதிகளுக்கு வாக்களிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஊழல்வாதிகளுக்கும் திருடர்களுக்கும் தண்டனை வழங்குவதாகத் தெரிவித்து இந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் தற்போது ஊழல்வாதிகளும் திருடர்களும் சுதந்திரமாக வெளியில் இருப்பதாகவும் மக்கள் இதனை மாற்றும் வரையில் நாட்ட முன்னேற்ற முடியாது என வும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

இலங்கையிடம் 4 மில்லியன் தாமதக் கட்டணம் கோரிய ஜப்பானிய தைசே நிறுவனம்

(கொழும்பு)

விலைமனு கோரல் நடைமுறைக்குப் புறம்பாக மத்திய அதிவேக வீதியின் 3ஆம் கட்டட நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்ட ஜப்பானின் தைசே நிறுவனம், கொழும்பு வெளிப்புற சுற்று வட்ட வீதியின் நிர்மாண ஒப்பந்தம் தொடர்பில் அரசாங் கத்திடம் 4 மில்லியன் ரூபா தாமதக்கட்டணத்தைக்கோரியுள்ளது.

கொழும்பு வெளிப்புற சுற்று வட்ட வீதியின் கடுவளைக் கும் கடவத்தைக்கும் இடைப் பட்ட பகுதியை ஜப்பானின் தைசே நிறுவனம் நிர்மாணித்திருந்தது.

இந்த ஒப்பந்தத்தை நிறைவு செய்து செயற்றிட்டத்தைப் பொறுப்பேற்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை 190 நாட்கள் தாமதித்தது.

இந்த 190 நாட்கள் தாமதம் காரணமாக தமக்கு ஏற்பட்ட 4 பில்லியன் செலவை வீதி அபிவிருத்தி அதிகார சபை செலுத்த வேண்டும் என தைசே நிறுவனம் கடந்த ஜூன் மாதம் 4ஆம் திகதி பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப் பிட்டிருந்தது.

தைசே நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி கிரோக்கி ஹோரிக்காவா இந்தக் கடிதத்தில் கையொப்பமிட் டிருந்தார். பணத்தை செலுத்த செயற்றிட்டத்தின் பிரதித் தலைமை அதிகாரி மறுத்துள்ளதாகவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4 பில்லியன் ரூபா செலுத்தப்படாவிட்டால் ஒப்பந்த விதி முறைகளின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் என தைசே நிறுவனம் எச்ச ரிக்கை விடுத்துள்ளது.

கடந்த ஆட்சிக்காலத்தில் தெற்கு அதிவேக வீதியின் இறுதிக்கட்ட நிர்மாணப் பணி களை மேற்கொண்ட ஜப்பானின் குமகாயிக்குமி நிறுவனமும் தாமதக் கட்டணம் கோரியதையடுத்து இணக்கப்பாட்டிற்கு வந்ததால் 5 பில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையை இலங்கை செலுத்த நேரிட்டதாக தைசே நிறுவனம் நினைவுபடுத்தியுள்ளது. அத்தகைய செயற்பாட்டினால் பல்வேறு கட்டணங்கள் உள்ளடங்கலாக பெரும் செலவினை ஏற்பதற்கும் காலத்தை செலவிட நேரிடும் எனவும் அந்த நிறுவனம் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது.

ஆகவே, சுமுகமாக பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என அந்த நிறுவனம்யோசனை முன்வைத்துள்ளது.

பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் அறிவிக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பேச்சுவார்த்தைக்கு வருவதற்கு தமது பிரதி நிதி தயார் என அந்த நிறுவனத்தின் கடிதத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது.

இந்த 4 பில்லியன் ரூபா தாமதக் கட்டணம் தொடர்பில் உடனடி தீர்மானம் எடுக்கப்படாவிட்டால் ஜெய்க்கா கடன் வசதியின் இறுதித் தவணை மற்றும் மத்திய அதிவேக வீதியின் 3ஆம் கட்ட நிர்மாணப் பணிகளுக்கும் தாக்கம் ஏற்படலாம் என தைசே நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

அரச வங்கியில் கொள்ளை சி.ஐ.டி.தீவிர விசாரணை

(அநுராதபுரம்)

அநுராதபுரம், தலாவ நகரிலுள்ள அரச வங்கியில் மேற்கொள்ளப்பட்ட கொள்ளைச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் குற்றப் புலனாய்வு திணைக்களத் திடம் (சி.ஐ.டி) ஒப்படைக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

அந்த நகரத்திலுள்ள அரச வங்கியின் கிளையை, வங்கியின் பின்புறமாக உடைத்துக்கொண்டு நேற்று முன்தினம் காலை உள்நுழைந்த கொள்ளைக் கோஷ்டியினர், வங்கியின் பாதுகாப்பு பெட்டகத்தை வெட்டி, 9 கோடியே 60 இலட்சம் ரூபாய் பணத்தையும், தங்க ஆபரணங்களையும் கொள்ளையிட்டு, தப்பிச்சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

மீட்கப்பட்ட கொக்கெய்ன் மாத்திரைகளின் பெறுமதி நான்கு கோடிக்கும் அதிகமாம்

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் கைது செய்யப்பட்ட இரு பிரேசில் நாட்டவர்களிடமிருந்து மீட்கப்பட்ட கொக்கெய்னின் மாத்திரைகளின் எண்ணிக்கை 163 ஆக அதிகரித்துள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட மாத்திரைகளின் நிறை 960 கிராம் என தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றின் பெறுமதி சுமார் 4 கோடியே 85 இலட்சம் ரூபாவுக்கும் அதிகம் என்றும் பொலிஸ் போதைப் பொருள் பிரிவினரின் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

30 மற்றும் 24 வயது டைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் இவர்கள் இருவரில்ஒருவரிடமிருந்து 91 கொக்கெய்ன் மாத்திரைகளும் மற்றையவரிடமிருந்து 72 கொக்கெய்ன் மாத்திரைகளும் இதுவரையில் மீட்கப்பட்டுள்ளன. (இ-7)

எண் 2 (சந்திரன்)
(சமுதாயச் சிற்பிகள்)

பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

2ஆம் எண்காரர்களின் அதிர்ஷ்டக் கையெழுத்து

இவர்கள் தங்கள் பெயரை அதிர்ஷ்டமாக அமைத்த பிறகு தாங்கள் குறியிடும் கையெழுத்தையும் வசியமுள்ளதாக மாற்றிக் கொள்ள வேண்டும். முழு வட்ட நிலவைப் போன்ற குறியீட்டுடன் வலப்புறமாகச் சுழித்து ஆரம்பித்த கையெழுத்து உலகையே தன்வசமாக்கும் மாயசக்தி படைத்தது. ஏணிப்படி போன்ற தோற்றத்துடன் சிகரம் அமைத்து 20 டிகிரி வரையிலும் சாய்த்துக் குறியிட வேண்டும். 2 செ.மீ.நீளமுள்ள கையெழுத்து நீடித்த அதிர்ஷ்டம் தரும். பெயரில் இடம்பெறும் சந்திர ஆதிக்க எழுத்துக்களை தெளிவாகக் குறியிட்டுக் கையெழுத்திட வேண்டும். கையெழுத்தில் பிறைக் குறிகள், வலப் புறச் சுழிகள், ஓங்கிய முழு வட்டக் குறியீடுகள், வேல் போன்று கூர்மையான தோற் றங்கள், மலைச் சிகரங்கள் போன்ற தோற்றங்கள் வசீகர மாகி பெரும் தனத்தை திடீ ரென்று பெற்றுத் தரும். சாதனைகள் குவியும். அனை வரையும் கவரும் மாயசக்தி குடிகொள்ளும். கையெழுத்தை முடிக்கும் போது மூன் றாம் பிறை வடிவக் குறியுடன் முடிக்க வேண்டும். மேல் நோக்கிய வளைவுக் கையெழுத்து வளமிக்க வாழ்க்கையைத் தரும். சோம்பலை நீக்கும். சுறுசுறுப்புடன் இயங்கச் செய்யும். குடும்பப் பிரச்சினைகள், மனக் குழப்பங்கள் தீரும். முகத்தில் பொலிவும் அமைதியும், மேன்மையான எண்ணங்களும் தோன்றும். வீண் பயம் அறவே நீங்கும். தீய பழக்கத்திலிருந்து மீட்டுக் கொண்டு வரும். இந்த உலகத்தையே தன்னுடைய மாயசக்தியால் கவர்ந்திழுக்கும் வசிய சக்தி மிக்கது சந்திர ஆதிக்கக் கையெழுத்துகள்.

2ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

அளவுக்கு மீறிய கற்பனைச் சக்தியையும், ஆற்றலையும் பெற்றவர்கள். உயர்ந்த இலட்சியங்கள் கொண்டவர்கள். பயந்த குணமும், சாந்த சொரூபமும் கொண்டவர்கள். பெரிய ஆராய்ச்சியாளர் என்று பெயரெடுப்பார்கள். சமுதாயத்தைச் சீர் திருத்தும் புரட்சியாளர்கள், எழுத்தாற்றல் மிக்கவர்கள் என்றே கூறலாம். மிகவும் அமைதியே உருவானவர்கள். சூட்சுமமான இரகசிய அறிவு படைத்தவர்கள். முக்காலத்தையும் முன்கூட்டியே அறியும் வல்லமை படைத்தவர்கள். மனோபலமும், ஆன்மீகப் பலமும் மிக்கவர்கள். தீவிரமான கற்பனை வளமும், ஆராய்ச்சி மனமும் இவர்களிடம் காணப்படும். இவர்களின் எண்ணமும் செயலும் புதிய பாதையில் இருக்கும். இலட்சிய வாதிகள், தீவிரவாதத்தை விரும்பமாட்டார்கள்.

வன்முறைக்கு எதிர்ப்பு தெரிவிப்பார்கள். சமாதானத்தையும், அமைதியையும் தனியாக நிலை நாட்டப் பாடுபடுவார்கள். இவருடைய கற்பனைகளும் எழுத்துக்களும் சமுதாயத்தைச் சீர்திருத்தும். தனக்குத் துன்பம் செய்த வரையும் சகித்துப் பொறுமையாகவே வெற்றிகளைப் பெறுவார்கள். பேச்சில் வாதத் திறமை இருக்கும். பேச்சின் மூலம் சுமுகமான தீர்வுகள் காண்பார்கள். பேனா வீரர்கள். சிறு ஆயுதத்தால் பெரிய சாதனைகள் செய்வார்கள். ஏமாற்றம் இவர்களுக்கு கோபத்தை உண்டாக்காது. பிறர் மீது அன்பு காட்டுவார்கள். தர்மம் செய்வதில் ஈடுபாடு இருக்கும். சமுதாயச் சிற்பிகள் என்று தான் இவர்களை அழைக்கலாம். பல புதுமைகளைச் செய்து பலருடைய பாராட்டைப் பெறுவார்கள். உடல் பலத்தை விட புத்தி பலமே சிறந்தது என்று வாதாடுவார்கள். பேச்சாலும் எழுத்தாலும் வாதம் செய்து வெற்றி பெறுவார்கள். குறுக்குக் கேள்விகள் கேட்டு வாதம் செய்து வெற்றி பெறுவார்கள். கற்பனையில் கோட்டை கட்டுவார்கள். சிறந்த சிந்தானவாதிகள்.

11 ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்.

தெய்வ நம்பிக்கை, மதப் பற்று அதிகமுடையவர்கள். தெய்வீக அனுக்கிரகம் உடையவர்கள். எதிலும் நம்பிக்கையுடன் இறங்கிக் காரியத்தை சாதித்து விடுவார்கள். வேத, புராண இதிகாசங்களில் பற்று இருக்கும். தெய்வ பலத்தை அனைத்துக் காரியத்திலும் ஈடுபடுத்தி வெற்றி பெறுவார்கள். மனத்திடம் மிக்கவர்கள். திடமான உள்ளத்துடன் உயர்ந்த செல்வ நிலைக்குச் சென்று விடுவார்கள். குறிக்கோளும் விடாமுயற்சியும் கொண்டு செயற் பட்டு எக்காரியத்திலும் சாதித்து விடுவார்கள். நம்பிக்கை ஒன்றே இவர்களின் தாரக மந்திரம். சொல் பலமிக்கவர்கள். அனைத்துக் கலைகளிலும் பெரும் புகழ் பெறுவார்கள்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்பொருள் திணைக்களத்துக்கு காணி சுவீகரிப்பு; பொதுமக்கள் நில அளவீட்டை தடுத்து நிறுத்தினர்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட செம்மலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் நீராவி பகுதியில் தொல்பொருள் திணைக்களத்துக்கு காணி சுவீகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து பொது மக்கள், அரசியல் பிரமுகர்கள் திரண்டு நில அளவீட்டை தடுத்து நிறுத்தியுள்ளனர்:

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட செம்மலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் நீராவி பகுதியில் பழைமை வாய்ந்த பிள்ளையார் ஆலயம் ஒன்று காணப்பட்டது.

நாட்டில் நிலவிய யுத்தம் காரணமாக 1984 ஆம் ஆண்டு 24 மணித்தியாலத்துக்குள் தம்மை நாயாறு பாலத்துக்கு அப்பால் செல்லுமாறு இராணுவம் விரட்டியபோது குறித்த பகுதி உட்பட மணலாறு கொக்குளாய் கொக்குதொடுவாய் கருநாட்டுக்கேணி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறியதாக தெரிவிக்கின்றனர்.

இதன் பின்னர் 2010 ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியேறியபோது தமது பல்லாயிரக் கணக்கான ஏக்கர் காணிகள் அபகரிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதோடு இன்னும் மீதமிருக்கின்ற நிலங்களையும் பல்வேறு வழிகளில் அபகரிப்பதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்த வகையில் செம்மலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் நீராவி பகுதியில் யுத்தம் முடிந்து தாம் மீள் குடியேறிய போது எமது பழைமைவாய்ந்த பிள்ளையார் ஆலய வளாகத்தை அபகரித்து விகாரை அமைக்கப்பட்டிருந்தது. தற்போது இந்த பகுதியில் நிலை கொண்டுள்ள பௌத்த மததுறவி குறித்த பகுதியில் 2500 வருடங்களுக்கு முன் விகாரை இருந்ததாகவும் அது தொல்பொருள் பிரதேசமாக அடையாலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றார்.

தற்போது குறித்த பகுதியில் தொல்பொருள் திணைக்களத்திற்கு 300 ஏக்கர் காணி சுவீகரிக்க நேற்றைய தினம் நில அளவீடு மேற்கொள்ள அதிகாரிகள் வந்த போது தமது பூர்விக நிலங்களை அபகரிக்க அனுமதி வழங்க முடியாது என தெரிவித்து அரசியல் வாதிகளுடன் இணைந்து தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இந்த விடயம் பௌத்த மத துறவி விகாரை அமைக்க திட்டமிட்டு மேற்கொள்ளும் சதி எனவும் இவருடைய கருத்தின் அடிப்படையில் தொல்பொருள் திணைக்களத்துக்கு சுவீகரிக்கப்படுகிறது எனவும் பலரும் குற்றம் சாட்டுகின்றனர்.

இதேவேளை போராட்ட இடத்திற்கு வந்த கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பொது மக்கள், அரசியல் வாதிகள் ஆகியோரின் வேண்டுகோளை ஏற்று மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டம் வரை இந்த அளவீட்டு பணி நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்ததை அடுத்து அனைவரும் கலைந்து சென்றனர்.

இந்த விடயம் தொடர்பில் அடுத்த மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் கலந்துரையாடி இறுதி தீர்மானம் எட்டப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியில் நாளை மறுதினம் நடமாடும் சேவை

(பூநகரி)

பூநகரி ஞானிமடத்தில் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பாக ஆரம்பமாகி தொடர்ச்சியாக தினமும் நடைபெற்ற நடமாடும் சேவையின் இறுதி நாள் நிகழ்வு பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நாளை மறுதினம் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளதாக பொலிஸ் பிரிவினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எம் கபில பண்டார தலைமையில் நடைபெறவுள்ள இறுதி நாள் நிகழ்வுகளின் பூநகரி பிரதேச பாடசாலைகளின் மாணவர்களுக்கிடையேகூடைப்பந்தாட்ட திறனை வளர்க்கும் பொருட்டு பயிற்சி முகாம் ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படவுள்ளதாக பொலிஸ் நிலையத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-84)



போதைப்பொருள் ஒழிப்பு தேசிய வாரம் கடந்த மாதம் 26ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையில் இதன் இறுதி நாளான நேற்று முன்தினம் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் முகமாக வடக்கு மாகாண பாடசாலைகளில் விழிப்புணர்வு செயற்பாடுகள் நடைபெற்றன. அந்த வகையில், மு/வன்னி விளாங்குளம் அ.த.க. பாடசாலையில் கடந்த 29ஆம் திகதி நடைபெற்ற போதைப்பொருள் விழிப்புணர்வு செயற்பாட்டை படங்களில் காணலாம்.

புதுக்குடியிருப்பில் 300 வீதி விளக்குகள் பொருத்தும் நடவடிக்கை ஆரம்பம்

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் 300 வீதி விளக்குகள் பொருத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வீதி விளக்குகள் பொருத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் பிரதேச சபை உறுப்பினர்களினால் சபை கூட்டங்களில் முன்மொழியப்பட்ட நிலையில் பிரதேச செயலாளரின் ஏற்பாட்டில் தவிசாளரின் வழிநடத்தலில் பிரதேசத்தில் முக்கியமாக மின் விளக்குகள் பொருத்தப்படும் இடங்களை தெரிவு செய்து மின் விளக்குகள் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் 15 இலட்சம் ரூபா செலவில் 300 மின் விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டு அவற்றை பொருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இலங்கை மின்சார சபையின் உதவியுடன் முதற்கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் மின்விளக்கு பொருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பிரதேசசபை தவிசாளர் தெரிவித்துள்ளார். (2-281)

சிறுமியை துஷ்பிரயோகம் செய்ய முயன்ற இளைஞன் விளக்கமறியலில்

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு 2ஆம் வட்டாரம் கோம்பாவில் பகுதியில் வசித்துவரும் சிறுமி ஒருவரை பாலியல் துஷ் பிரயோகத்திற்கு முயன்ற குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

கடந்த முதலாம் திகதி கோம்பாவில் பகுதியில் வசித்துவரும் 15 வயது சிறுமியை 24 வயதுடைய இளைஞன் ஒருவர் பாலியல் துஷ் பிரயோகத்திற்கு முயற்சித்துள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

குறித்த இளைஞனை கைதுசெய்த புதுக்குடியிருப்பு பொலிஸார் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப் படுத்தியுள்ளார்கள். இதன் போது குறித்த இளைஞனை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட சிறுமி குறித்து மருத்துவ பரிசோதனை அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள். (2-281)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பண்பாட்டுத் தொட்டில்கள்

வடமாகாணத்துக்குச் சுற்றுலா நுழைவோராக வரும் நாதஸ்வர-தவில் கலைஞர்கள், ஈழத்துக் கோவில்களில் நாதஸ்வரம்,தவில் வாசித்து உழைக்கிறார்கள். சுற்றுலா நுழைவோர் விதிகளுக்குப் புறம்பாக நடக்கிறார்கள். வடமாகாண முதலமைச்சர் பொலிஸார் வழியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனைத் தடுப்பதன் மூலம் உள்ளூர்க் கலைஞர்கள் தொழில் வாய்ப்புப்பெற ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறான கோரிக்கை கொண்ட உரையை வடமாகாணசபை அமர்வு ஒன்றில் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா ஆற்றியதாகச் செய்தித்தாள்களில் படித்தேன்.

தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் இடையே பயணங்கள் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடர்கின்றன.1948இற்குப் பின்னரே நுழைவிசைவு பெற்று இருநாட்டவரும் ஒருவர் மற்றவர் நாட்டுக்குப் பயணிக்கின்றனர்.

இருந்தாலும் நுழைவிசைவு பெறாத பயணங்கள் இன்றுவரை தொடர்கின்றன.

இலங்கைக்கு வருவோர் நான்கு வகையான நுழைவிசைவுகள் பெறலாம்.

சுற்றுலா நுழைவிசைவு, தொழில் செய்யும் நுழைவிசைவு, அரசப் பணி/ கல்வி நுழைவிசைவு, சிறப்பு நுழைவிசைவு எதுவாயினும் ஆகக் கூடியது ஓராண்டுகால எல்லை கொண்டது.

தமிழகத்தில் இருந்து வருகின்ற 99% பயணிகள் சுற்றுலா நுழைவிசைவிலேயே வருகின்றனர். மிக மிகச் சிலரே ஏனைய நுழைவிசைவுகளைப் பெறுவர்.

2009இற்குப் பின்னர் தமிழகத்தின் நான்கு வானூர்தி முனையங்களான சென்னை, திருச்சி, மதுரை, கோவை முனையங்களில் இருந்து வருவோரில் சுற்றுலா நுழைவிசைவில் வருவோரில் குருவிகள் என அழைக்கின்ற வணிகப்பொருள் காவுநரே பெருமளவினர். இவர்களுக்காகவே வானூர்தி நிறுவனங்கள் பல சலுகைகளை வழங்கி ஊக்குவிக்கும். எந்தவொரு வானூர்தியிலும் 30-40% பயணிகள் குருவிகள்.

இந்திய-இலங்கை அரசு விதிகளுக்குள் இவர்கள் வணிகப்பொருள் காவுநராக வந்து போனாலும், சுங்க அலுவலர்களின் விதிகளுக்கு அப்பாலான ஒத்துழைப்பால் இலங்கை அரசின் அந்நியச் செலாவணி இழப்புகள் கணிசமானதாகும்.

தங்கக்கடத்தல், போதைப் பொருள் கடத்தலுக்குக் குருவிகளின் பங்களிப்புக் கணிசமானது. கறுப்புப்பண, வங்கி சாரா அந்நிய நாணயமாற்றலால், கடத்தலால் இலங்கையின் பொருளாதார இழப்புச் சொல்லும் தரமன்று.

இந்தப் பாரிய இழப்பின் அளவுடன் ஒப்பிடுகையில் தமிழகத்தில் இருந்து வரும் அறிவுசார், கலைசார், சமயம்சார் பயணிகள் சுற்றுலா நுழைவிசைவில் அங்குவந்து உழைத்துக் கொண்டுவரும் தொகை மிகச் சொற்பமே.

இலங்கை- இந்திய அரசுகளுக்குக் குருவிகளின் இந்தப் போக்குவரவு நன்கு தெரிந்தும் வாளாவிருப்பர். குருவிகளைக் கட்டுக்குள் கொண்டுவரவிரும்பாத அரசுகள், அறிவுசார், கலைசார், சமயம்சார் பயணிகளைக் கட்டுக்குள் கொண்டுவர விரும்பாதது வியப்பல்ல.

ஆனாலும் இந்திய-இலங்கை அரசுகளுக்குப் பெரும் தலையிடியாக இருப்பது தீவிரவாதிகளின் வன்முறை நோக்கிய பயணங்கள். பாகிஸ்தானிய தீவிரவாதிகள் இலங்கை வந்து, இலங்கையர் ஒத்துழைப்புடன் இலங்கைக் கடவுச்சீட்டுப் பெற்று இந்தியாவுக்குள் நுழைவதே அரசுகளுக்குப் பெரும் தலைவலி.

இந்திய வானூர்தி முனையங்கள் நான்கிலும் இத்தகையோரில் சிலர் கடந்த பத்துப்பதினைந்து ஆண்டுகளாகக் கைதாகி வருகின்றனர். பலர் கைதாகாமலே பயணித்து வருகின்றனர்.

தமிழரின் பண்பாட்டுத் தாயகங்கள் தமிழகமும் ஈழமுமே. வெற்றிகரமான பண்பாட்டுக் கொடுக்கல்- வாங்கலே இன்றைய தமிழ்ப்பண்பாட்டின் தொட்டிலும் தொடர்ச்சியும்.

தொட்டிலாகவோ, தொடர்ச்சியாகவோ இருக்கக்கூடாது என்ற அரசியல் பார்வையே 1948 முதலான நுழைவிசைவு நடைமுறை. 1950 முதலாகக் காரைநகரிலும் காங்கேசன் துறையிலும் கடற்படைத்தளங்கள், 1974 இன் எல்லைக்கோடு.

கள்ளத் தோணிகள், கடத்தல்காரர், போராளிகள் எனக் காலத்துக்கேற்ப நுழைவிசைவற்ற பயணங்களுக்குக் குறைவே இல்லை.எங்கோ ஒரு பயணி, எங்கோ ஒரு படகு, ஏதோ ஒருபொருள், எந்த நேரமும் விதிகளைக் கடந்து கரைகளைக் கடக்கின்றன.

2009இற்குப் பின் பாரிய நுழைவுகள் தமிழக மீன வருடையன. கடற் படைத்தளங்களை அகற்று என ஊர்வலமும் போராட்டமுமாக இருந்த காலம் மாறியது. தமிழக மீனவரைத் தடுங்கள் என்ற முழக்க ஊர்வலமும் போராட்டமும் தொடங்கின. அதற்காகக் கடற்படை வேண்டும் என்ற போராட்டமுமாய்

கடற்படை முகாம்களை வரவேற்கும் போராட்ட களமானதே.

பாரிய பொருளாதார இழப்புகளாகக் கருதும் குருவிகள் தொடர்கிறார்கள். கடத்தல்கள் தொடர்கின்றன. கறுப்புப் பணப்புழக்கம் பெருகுகிறது. வங்கியற்ற நாணயமாற்றுத் (அவாலா) தொடர்கிறது. இஸ்லாமியத் தீவிரவாதத்தின் தளமாக, பயிற்சிக்களமாக இலங்கை தொடர்கிறது. இலங்கை மீன்வளம் வினாவிற்குரியதாகின்றது.

இவற்றைக் கேட்பாரில்லை, தடுப்பாரில்லை, அத்தகைய அவாலா, போதைப் பொருள் கடத்தல் வரவுகளே, பணங்களே இலங்கை அரசியலின் போக்கையும் தீர்மானிக்கின்றன.

இவற்றுக்கு மேலாகத் தமிழரிடையேயான அறிவுசார், கலைசார், சமயம்சார் பயணிகள் பொருளாதார இழப்பைக் கொணர்கிறார்களா? உள்ளூர்க் கலை வளர்ப்பைக் கெடுக்கிறார்களா? தவராசாவின் கோரிக்கை பொருத்தமானதா?

இன்றைய தமிழகத்தின் முன்னணி இலக்கியப் பேச்சாளருள் ஒருவர் இலங்கையர். அடிக்கடி தமிழகம் பயணிப்பவர். அங்கு அவர் வாங்கும் கணிசமான தொகைகள் எந்தக்கணக்கில் இலங்கையுள் வருகின்றன? தமிழகப் பேச்சாளர் இவரது வருகையை ஒருபோதும் எதிர்த்ததில்லை. அவர் எத்தகைய இந்திய நுழைவிசைவு பெறுகிறார்?

துளிர் விடும் இலங்கைப் பேச்சாளர் சிலர் அண்மையில் மதுரை சென்றனரே? சுற்றுலா நுழைவிசைவில் சென்று வந்தனர். ஊதியம் பெற்று வந்தனர்.

வட்டுக்கோட்டைத் தவில் - நாதஸ்வரக் கலைஞர்கள் அண்மையில் பெங்களூரிலும் ஐதராபாத்திலும் பாராட்டுப் பெறும் இசை நிகழ்ச்சிகளை நடத்தினரே. எத்தகைய நுழைவிசைவில் இந்தியா சென்றனர்? இந்தியக் கலைஞரோ, அரசியல்வாதிகளோ எதிர்த்தனரா? அவர்களின் ஊதியம் எவ்வகையில் இலங்கைக்குள் வந்தது?

நேற்று வரை இந்திய நுழைவிசைவின்றி ஏதிலிக் தகுதி கேட்டு ஈழத்தமிழர் கடல் கடந்தனரே? எந்த இந்திய அரசியல்வாதி எதிர்த்தார்?

சுற்றுலா நுழைவிசைவில் வரும் நூற்றுக்கணக்கான தமிழக அரிவுவெட்டி இயந்திர இயக்கிகள் தை,மாசி,

பங்குனியில் ஈழமெங்கும் பணி புரியாவிடின் வயல்களில் அறுவடையாக நெல் குவிந்து அழியுமே?

குடமுழுக்குகள், சமயச் சடங்குகள், சமயப் பேருரைகள் நிகழ்த்தவரும் தமிழகச் சைவ ஆன்மீகத்தார் எந்தவகை நுழைவிசைவில் வருகிறார்கள்? உழைப்பை எவ்வாறு எடுத்துச் செல்கிறார்கள்.

நற்செய்திக் கூட்டங்களை நிகழ்த்தவரும் தமிழகக் கிறிஸ்தவப் பிரசாரகர்கள், சைவப் பண்பாட்டையே அழிக்கும் துடிப்புடன் எந்த நுழைவிசைவில் ஈழத்துள் வரு கிறார்கள்?

உழை ப்பை எவ்வாறு எடுத்துச் செல்கி றார்கள்.

இதையெல்லாம் கேட்க, விதிமீறல்களைச் சுட்டிக்காட்ட வலுவில்லையோ?

ஈழத்துத் தவில் மேதை தட்சணாமூர்த்தி பற்றி அம்சன் குமார் தயாரித்த ஆவணப் படத்துக்கும் 2016 இல் இந்திய தேசிய விருது கிடைத்த பொழுதுஎந்தநுழைவிசைவில் தயாரிப்பாளர் அங்கு சென்றார்.

திரைக்கலை மேதை பாலு மகேந்திரா தன் வாழ்நாளில் பெரும்பகுதியைப்பயண ஆவணமின்றியே கழித்தார்.

இந்தியா அவரை போற்றவில்லையா?

அகில இந்திய திரைப்படத் தேர்வுக் குழுவுக்கே தலைவராக்கி அழகு பார்த்ததே? அவர் மட்டக்களப்பாரல் லவா? அவருக்குப் பயண ஆவணம் பெறுவதில் என் முயற்சியும் தோல்வி கண்டதே?

கவிஞர் காசி ஆனந்தன் உள்ளிட்ட தோராயமாக 3 இலட்சத்து 50,000 ஈழத்தமிழர் தமிழகத்தில் வாழவில்லையா?உழைக்கவில்லையா? வேலை வாய்ப்புப் பெறவில்லையா? தத்தம் மக்களை உயர் நிலைக்குக்கொணரவில்லையா?

எந்தவகை நுழை விசைவில் இந்த ஏதிலிகள் தமிழகத்தில் வாழ்கிறார்கள்.

கா.பொ.இரத்தினம், கம்பவாரிதி இ.ஜெயராஜ், மறவன்புலவு க.சச்சிதானந்தன் ஆகியோரைத் தமிழகம் அழைத்து முதன்மை விரு துகள் வழங்கிய பொழுது நுழைவிசைவு வகையை யார் அறிவார்?

ஈழத்துத் தவில் நாதஸ்வரக் கலை வளர்ச்சிக்குத் தமிழகம் ஆற்றிய பங்களிப்பை யார் சொல்லுகிறார்கள்? தமிழ்நாட்டுச் சின்ன மேளங்கள் வராத கோயில் விழாக்காலம் ஈழத்தில் எப்பொழுது குறைந்தது? எந்த வகை நுழைவிசைவு பெற்று அவர்கள் வந்தார்கள்?

தமிழகத்து இசை வேளாளர் மரபினர் இலங்கையில் குடி அமர்ந்து வாழாத வரலாற்றுக்காலம் உண்டா? நாச்சிமார்கோயிலடியில் வாழ்ந்த தன் சொந்த பந்தங்களின் நிலையை என்னிடம் விசாரித்தறிபவர் கலைஞர் கருணாநிதி.

தமிழக ஈழ உறவுகளைக் குறைக்க, முடக்க, முறிக்க முயல்வோர் தமிழரின் அரசியல் எதிரிகளா னால் எதிர்கொள்ள வழிகள் உண்டு. தமிழரே இந்த உற வுகளை உடைத்தெறிய எதி ரிகளின் துணையை நாடுகின்றனர்.

1970களில் சிறிமாவின் ஆட்சிக்காலத்தில் ஒரு சில தமிழ்ப்பேராசிரியர்கள், ஒரு சில தமிழ் எழுத்தாளர்கள், அரசுசார் அரசியல்வாதிகள் இந்த முயற்சியில் ஈடுபட்டனர்.

அக்கால யாழ்.மாநகர் முதல்வர். அவரின் நெருங்கிய அலுவலர்கள் இம் முயற்சிகளுக்குத்துணை போயினர்.

ஈழத்தமிழ்த் தேசியத்தின் எதிர்காலத்தைக் கவனத்தில் கொள்வோர் தமிழ்ப்பண்பாட்டுத் தொட்டில்களின் கொடுக்கல்-வாங்கலைத் தடுக்கார். தமிழகக்கலை வரவுகளைத்தடுக்கார். தமிழகத்தைப் பகைக்கும் எந்த ஒன்றிலும் ஈடுபடார்.

இந்தக் கண்ணோட்டத்திலேயே வடமாகாண சபையினரின் அணுகுமுறைகள் அமையுமாயின் ஈழத்தமிழ்த் தேசியத்தின் வலிமையான எதிர்காலம் ஒளிமயமானதாகும்.

மறவன்புலவு க.சச்சிதானந்தன்

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	நெல்லியடி	கொடிகாமம்	சாவகச்சேரி	கிளிநொச்சி	மருதனார் மடம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	100	80	60	60	80	80
உருளைக்கிழங்கு	120	100	100	110	120	130
பச்சைமிளகாய்	400	500	440	400	500	250
தக்காளி	200	300	190	280	250	200
மரவள்ளிக்கிழங்கு	30	40	40	50	40	40
கோவா	180	200	120	180	200	120
கரட்	220	400	180	280	400	200
பூசணி	40	40	20	40	40	40
புபோல்	80	100	80	120	80	100
வாழைக்காய்	80	100	35	80	80	60
சின்ன வெங்காயம்	160	200	100	150	160	140
பெரிய வெங்காயம்	100	120	90	100	120	120
பாகற்காய்	300	400	300	240	300	250
வெண்டிக்காய்	120	100	130	100	120	100
கருணைக்கிழங்கு	100	100	65	100	120	80
பயற்றங்காய்	100	100	60	80	160	180
லீக்ஸ்	300	400	190	140	250	250
பீற்றூட்	160	200	70	200	200	120
கறிமிளகாய்	220	400	80	240	400	200
முருங்கைக்காய்	800	300	450	600	600	800
போஞ்சி	300	400	120	220	320	220
கத்தரிதம்புள்ள	80	50	50	80	60	80
கீரை-1பிடி	40	20	30	50	30	20
தேசிக்காய்	60	50	60	70	80	150
தேங்காய் (ஒன்று)	70	30-60	25-50	70	50-70	70
இராசவள்ளி	160	200	120	160	200	160
வெங்காயப்பூ	200	300	200	240	280	250
முள்ளங்கி	100	120	40	100	120	100
பொன்னாங்காணி	20	40	10	50	40	35
வல்லாரை	20	20	10	20	20	40
ஈரப்பலா	60	50	110	50	80	80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன் முடிவை கூறிவிட்டது

அடுத்து வரும் மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராஜாவே போட்டியிடுவார் என கூட்டமைப்புத் தெளிவாகக் கூறிவிட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று பெயர் கூறி அழைத்தாலும் இலங்கைத் தமிழரசுக் கட்சிதான் கூட்டமைப்பு என்பதில் இருவேறு கருத்துக்கிடமில்லை.

எனவே தமிரசுக் கட்சியின் சார்பில் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் மிகத் தெளிவாக – வெளிப்படையாக அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் மாவை சேனாதிராஜா என்பதை அறிவித்துள்ளார்.

இதேபோல் மாவை சேனாதிராஜாவும் தானே அடுத்த முதலமைச்சர் வேட்பாளராக வட மாகாணத்தில் போட்டியிடுவேன் எனக் கூறியுள்ளார்.

இது தவிர, பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனும் மாவை சேனாதிராஜாவே முதலமைச்சர் வேட்பாளர் என்பதைக் கோடி காட்டியுள்ளார்.

இந்நிலையில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் அவர்கள் மட்டுமே இன்னமும் எதுவும் கூறாமல் மௌனம் காத்து வருகிறார்.

அவரின் மௌனம் மாவை சேனாதிராஜாவின் விடயத்தில் பெரிதாக எதுவும் செய்யப் போவதில்லை.

பாராளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் தெரிவின்போதே சம்பந்தரை தமிழரசுக் கட்சி தூக்கி எறிந்துவிட்டது.

எனவே அவர் தப்பித்தவறி வாய் திறந்தால், அவரை மிக மோசமாக அவமானப்படுத்தவும் தமிழரசுக் கட்சி தயங்காது.

எனவே கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் அவர்கள் இனி எதுவும் செய்ய முடியாது என்ற நிலைமைக்கு வந்துவிட்டார்.

ஆக, வடக்கு மாகாண சபைத் தேர்தலில், தமிழரசுக் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதை தீர்மானிப்பதில் எம்.ஏ.சுமந்திரன், மாவை சேனாதிராஜா, சிறீதரன் ஆகியோரே செல்வாக்குச் செலுத்துவர் என்பது உறுதி.

நிலைமை இதுவாக இருக்கையில், வடக்கின் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் நிலைப்பாடு என்ன? என்பதுதான் இப்போதிருக்கின்ற கேள்வி.

2018 டிசம்பர் மாதத்துக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதான தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் தனது முடிவு பற்றி தமிழ் மக்களுக்குத் தெரியப்படுத்துவது கட்டாயமானதாகும்.

முதலமைச்சர் புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்து களம் இறங்குவாரா? அல்லது தன்னை அழைத்து வந்த இரா.சம்பந்தருக்கு எதிராகத் தனது செயற்பாடு அமையக்கூடாது என்ற விடயத்தில் மிகவும் உறுதியாக இருப்பாரா? என்பதை அவரே தெளிவுபடுத்த வேண்டும்.

வடக்கின் முதலமைச்சர் வேட்பாளரை கூட்டமைப்பு நிறுத்தலாம். தமிழரசுக் கட்சி நியமிக்கலாம். ஆனால் முதலமைச்சர் யார் என்பதைத் தீர்மானிப்பது தமிழ் மக்கள் என்பதால் மாண்புமிகு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தனது முடிவை தமிழ் மக்களிடம் தெளிவாக – விரைவாகக் கூறிவிட வேண்டும்.

அவரின் முடிவு என்ன என்பதைப் பொறுத்து தமிழ் மக்கள் அடுத்த கட்ட நடவடிக்கையை எடுத்து, தங்கள் முதலமைச்சர் யார் என்பதை முடிவு செய்வர்.

குற்றச்செயல்களுக்கு அடுத்தவர்களை குறைகூறாமல் எம் மத்தியில் மாற்றத்தை கொண்டு வர வேண்டும்

அருட்தந்தை எஸ்.ஜே.இம்மானுவெல் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது சமூகத்தில் இடம் பெறும் குற்றச்செயல்களுக்கு அடுத்தவர்களை குறை கூறாமல் எம்மத்தியில் மாற்றத்தை கொண்டு வரவேண்டும் என தெரிவித்த அருட்தந்தை எஸ்.ஜே.இம்மானுவெல், அரசியல் தலைவர்கள் தமது பதவிக்காக செயற்படாது மக்களை நேசித்து செயற்படுமாறு தெரிவித்துள்ளார்.

நேற்று ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தேன். ஆரம்ப காலத்தில் உலக நாடுகள் எம்மை பயங்கரவாதிகள் எனவே அடையாளப்படுத்தியிருந்தனர்.

அமெரிக்கா எம்மை பயங்கரவாதிகள் என் தெரிவித்ததை தொடர்ந்து 27 நாடுகள் புயங்கரவாதிகள் பட்டியலில் எம்மை இணைத்தார்கள். அதில் இருந்து மீளுவது மிக கடினமாக இருந்தது.

சர்வதேச தொடர்பு புலிகள் மத்தியில் பெரிதாக நடக்கவில்லை. புலிகள் தமது பொறுப்பாளர்களை இணைத்து செயற்பட்டார்களே தவிர வெளிநாட்டு அரசாங்கங்களுடன் தொடர்பை பேணவில்லை. அது பலயீனமாக போய்விட்டது. இந்தியா உட்பட 20 நாடுகள் இணைந்து பணம் ஆயுதம் கொடுத்து விடுதலைப்புலிகளை அழித்தார்கள். முன்னிலையில் அமெரிக்கா இருந்து அழித்தது.

முள்ளிவாய்க்கால் படுகொலை என்பது தன்னிய இலங்கை அரசால் மட்டும் செய்யப்பட்டது அல்ல. வெளி நாட்டு ஒத்துழைப்புடன் நடைபெற்ற இனப்படுகொலை ஆகும்

சர்வதேசம் இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு சாதகமான தீர்வைக் கொண்டு வரும் என நினைத்தார்கள். அதன் காரணமாக உலக தலைவர்கள் மௌனமாக இருந்தார்கள். எமக்கு சாதகமாக ஜக்கிய நாடுகள் சபையின் தலைமை முன்வரவில்லை. வெளிநாடுகளும் தமக்கு ஏற்ற வகையில் காய்களை நகர்த்தினார்கள்.

இருப்பினும் ஜக்கிய நாடுகள் சபையில் இலங்கை பொறுப்புக்கூறுவதற்கு பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே இலங்கை அரசு பொறுப்புகூற வேண்டிய தேவை உள்ளது.

மகிந்த அரசு எம்முள் பலரை இலங்கைக்கு வருவதற்கு தடைசெய்தார்கள். தற்போது எம்சிலருக்கான தடை நீக்கப்பட்டுள்ளது. ஏனையவர்களின் தடைகளும் நீக்கப்பட வேண்டும் என அரசிடம் கோரியுள்ளேன். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்னை இங்கு வரவழைத்தார்.

அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் உலகத்தமிழர் பேரவை உறுப்பினர்கள் சேர்ந்து அமெரிக்காவுக்கு சென்றோம். ஜ.நா சபையில் 4 கூட்டங்கள் நடத்தினோம். தற்போதைய அரசு தொடர வேண்டும் என்ற நோக்கத்தில் பேசியிருந்தோம்.

எமது நாட்டில் சனத்தொகை குறைந்து போகிறது. வெளிநாட்டில் உள்ளவர்கள். தாய் நாட்டுக்கு வர வேண்டும். வருங்கால இளைஞர்களுக்கு வாழ்வளிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அனைத்து மதத்தினரும் ஒன்றாக இருக்கவும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும் சேவை செய்ய வந்துள்ளேன்.

தற்போதைய அரசில் அதிருப்தி அதிகரித்து வருகிறது. வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. கடமைகள் அதிகரித்து செல்கிறது. அவர்கள் செயற்படுத்த வேண்டும். ஆனால் தமிழ் சமூகத்துக்குள்ளும் அதை விட பிரச்சினைகள் அதிகரித்துள்ளது. எல்லாவற்றுக்கும் மற்றவர்களை வெளி சக்திகளை பழி போட முடியாது.

எமக்குள் நடைபெறும் சம்பவங்களை பார்க்கும் போது மனவருத்தம். தமிழ் கலாசாரம் மொழி என்பவற்றால் தமிழ் சமூகம் பெருமைப்படுகிறோம். ஆனால் எமக்குள் நடைபெறும் ஊழல்களை இனம்கண்டு அப்புறப்படுத்த வேண்டும். எமது குறைகளை இனம் கண்டு கொள்ள வேண்டும்.

எமது பிரதேசத்தில் நடக்கும் குற்றச் செயல்களை பார்க்கும்போது, மனவருத்தமாகவுள்ளது. எமக்குள் இருக்கும் பிரச்சினைகளுக்கு எதிராக நாம் எழ வேண்டும். எமக்குள் விழித்தெழ வேண்டும். சமூகத்துக்குள் இடம்பெறும் போராட்டம் மிக முக்கியமானது.

அரசியல்வாதிகள் பதவிக்கு வந்தவுடன் மக்களை மறந்து விடுகிறார்கள். தமது அடுத்த தேர்தலுக்கு தான் பணிகளை செய்கிறார்கள். சிறிய சிறிய பிரச்சினைகளை சீர்படுத்தாமல் பெரிய முக்கிய மில்லாதது உள்ள பிரச்சினைகள் பற்றி பேசுகிறார்கள்.

பிரதேச சபைகளில் சர்வதேச தீர்மானங்களை நிறைவேற்றுகிறார்கள். அவை வீணானது. மக்களின் பிரச்சினைகளை முதலில் தீர்க்க வேண்டும். வட்டார கடமைகளை செய்யுங்கள் சர்வதேச கடமைகளை அதற்கென இருப்பவர்கள் பார்த்துக் கொள்வார்கள். மக்களை நேசிக்க வேண்டும் அதன்படி நடக்க வேண்டும்.

தமிழர்கள் இந்த நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிக அமைப்புக்களை உருவாக்கி உள்ளார்கள். இதனால் ஒற்றுமையில்லை. ஒற்றுமை என்பது தமிழர் மத்தியில் கடினமான விடயம். 'போர்க் காலத்தில் இருந்த ஒற்றுமை வேறு. போரின் போது தலைவரின் கீழ் செயற்பட வேண்டும். அப்போது தலைவராக பிரபாகரன் இருந்தார் ஒற்றுமை இருந்தது.

ஆனால் தற்போது ஜனநாயக முறைக்குவந்த பின்னர் எல்லோரும் பிரபாகரன் போல் வர நினைக்கிறார்கள். அது பிளவை ஏற்படுத்துகிறது. தமது இலட்சியம் தமது அமைப்பை பற்றி மட்டுமே பேசுகிறார்கள்.

இலட்சியத்தில் ஒற்றுமையாக இருப்பது நன்று. அதாவது சொந்த மண்ணில் தமிழர்களாக இருக்க வேண்டும் இதை தெய்வீக இலட்சியமாக கருதி இருக்க வேண்டும். அதற்கு அர்ப்பணிப்பு செய்ய வேண்டும் அத்துடன் ஒழுக்கம் இருக்க வேண்டும் இவ்வாறு இருந்தாலே ஒற்றுமையாக இருக்க முடியும்.

அதைவிடுத்து ஒவ்வொரு அமைப்பும் கட்சிகளும் பந்தயம் போடும் அமைப்பாக இருக்கக் கூடாது. தமிழர்கள் கால்தடம் போடுவார்கள். கட்சிகள், அமைப்புகள் வைத்திருப்பவர்கள் தமது நோக்கத்தில் தெளிவாக இருக்க வேண்டும். வேறு பிரிவாக இருந்தாலும் இலட்சியத்தில் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

இறுதி யுத்தத்தின் போது மக்களுக்காக சேர்க்கப்பட்ட பணம் இன்னும் மக்களுக்கு கொடுக்கவில்லை. அதை பல தளபதிகளுக்கு தெரிவித்தும் அவர்கள் அதை செய்ததாக தெரியவில்லை. தலைவர் பிரபாகரன் திரும்பி வருவார் என தெரிவித்து சிலர் பணத்தை வீணாக செலவளிக்கிறார்கள். தமது தேவைக்கு பயன்படுத்துகிறார்கள்.

பிரபாகரன் திரும்பி வந்தால் முன்னர் போன்று எதையும் செய்ய முடியாது. ஆனால் யார் மக்களுக்காக செயற்படுகிறார்கள் என்பதை சரியாக பார்க்க முடியும். முக்கியமாக முன்னாள் போராளிகளுக்கு உதவ வேண்டிய நிறைய தேவை உள்ளது. அவர்களை உள்வாங்க பின்வாங்குகிறார்கள். எனவே அவர்களுக்கு உதவி புரிய அனைவரும் முன்வர வேண்டும் என மேலும் தெரிவித்தார். (மு-9)

மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** நாவற்குழி கேரதீவு வீதி, தச்சன்தோப்பு, மறவனபுலவு, கோகிலாக்கண்டி, தனங்கிளப்பு, அறுகுவெளி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மலையாபருத்திக்குளம் கிராமம், பண்டாரிக்குளம் கிராமம், தவசிக்குளம் கிராமம், அட்டம்பஸ்கட கிராமம், புதுக்குளம் நீர் வழங்கல் சபை I மற்றும் II ஆகிய இடங்களிலும் **மனனார் பிரதேசத்தில்** மடுச் சந்தியிலிருந்து பூமலர்ந்தான் வரை ஆகிய பிரதேசத்திலும் மின் தடைப்படும். (இ-9)

அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

அபிஷேக பொருட்களும் அதன் பலன்களும்

பச்சை கற்பூரம் - பயம் நீங்குதல்
விபூதி - ஞானம்
வஸ்திரம் - ராஜயோகம்
சந்தனம் - செல்வம், சொர்க்கயோகம்
கஸ்தூரி - வெள்ளி உண்டாகுதல்
கோரோசனை - ஜபம் சித்தியாகும்
வலம்புரிசங்கு - தீவினை நீங்குதல்
சொர்ணம்(தங்கம்) - வைராக்யம்
சஹஸ்ரதாரை - இலாபம்
கும்பம்(ஸ்நபனம்) - அஸ்வமேதயாகப்பலன்
பழங்கள் - விருத்தி
மலர்கள் - மகிழ்ச்சி
தானியம் - தெய்வ தரிசனம் கிடைக்கும்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

தர்மத்தைக் கடைப்பிடி

✦ பிறரிடம் கைநீட்டி யாசிக்கும் போது, உன்னை நீயே தாழ்மைப்படுத்துகிறாய்.

✦ தர்ம வழியைக் கடைபிடித்து வாழ்பவன், மற்றவர் கூறும் பழிச் சொல்லை பொருட்படுத்த தேவையில்லை.

✦ மனிதன் கோபத்தில் அறிவை இழந்து உணர்ச்சி வயப்பட்டு கடுஞ்சொற்களைப் பேசுகிறான்.

✦ கடவுளிடம் முழுமையாகச் சரணடைந்து விட்டவன், வாழ்வில் ஒருபோதும் தளர்ச்சி உண்டாவதில்லை.

✦ தீவிர நம்பிக்கை இருக்குமானால், நீ மனம் உருகித் தேடும் பொருள் இருக்குமிடத்திற்கே உன்னைத் தேடி வரும்.

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
VACANCIES

Applications are invited by me up to 31st July, 2018 from suitably qualified persons for the following posts.

1. **GRADUATE TRANSLATOR, GRADE II (SINHALA/TAMIL)**

Qualifications:

i) a) A degree of a recognized University with Sinhala/ Tamil as a subject.
AND
b) A credit pass in English Language or Literature at the G.C.E. Ordinary Level) Examination or should have passed the G.C.E. (Advanced Level or Higher examination in the English medium.

ii) Preference will be given to graduates who have offered English as a subject for the degree and/ or who are proficient in all three languages.

Age: Not more than 45 years.

Salary Scale : U-MN 3 (II) - Rs.42,885-18X660-54,765 p.m (as at 01.01.2020)
Selection : By Test and Interview

2. **WORKS SUPERINTENDENT (CIVIL), GRADE II – (Vavuniya Campus)**

Qualifications:

a) National Diploma in Technology (NDT) or equivalent qualifications **and** have at least four years experience in the relevant field after obtaining such qualifications.

NOTE: Period of in-plant training will not be counted for the four years' experience.

OR

b) National Certificate in Technology (NCT) or equivalent qualifications **and** have at least ten years experience in the relevant field after obtaining such qualifications.

Age: Not more than 40 years.

Salary Scale : U-MN 2 (II) - Rs.37,275- 18x495 - 46,185 p.m (as at 01.01.2020)
Selection : By Interview

3. **SUPERVISOR (CIVIL), GRADE III / SUPERVISOR (ELECTRICAL), GRADE III**

Qualifications:

a) National Certificate in Technology or equivalent qualifications with 3 years experience may be obtained while following the NCT course;
OR
b) G.C.E(Ordinary Level) Examination in six subjects at not more than two sittings with at least 5 years' experience as a Supervisor in the relevant field in a Government, Local Government or State Corporation or a recognized Engineering Establishment.

Age: Not more than 40 years.

Salary Scale : U-MT1 (IIIA) - Rs.31,625-7x300;10x355-37,275 p.m (as at 01.01.2020)
Selection : By Interview

4. **BOOK KEEPER, GRADE II SEG.'B'**

Qualifications:

1. G.C.E. (Ordinary Level) Examination in six subjects at not more than two sittings with at least three credit passes including credit passes in Sinhala/Tamil/English Language or Literature and Arithmetic/ Commercial Arithmetic/Mathematics.

AND

2. **EITHER** (a) The National Certificate in Business Studies of the Sri lanka Technical College/Poly-technical Institute under the Ministry of Higher Education/ Ministry of Labour & Vocational Training;

OR (b) Passes in three subjects including Accountancy and Business Studies on one and the same occasion at the G.C.E. (Advanced Level) Examination.

Age: Not more than 40 years
Salary Scale : U-MN1 (IIIA) - Rs.30,725-17x300-35,825 p.m (as at 01.01.2020)
Selection: By Test in Accounts and Interview

AGE LIMIT : ***Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

STATUTORY BENEFITS

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Applications should be on **specified forms** issued by the University. Application forms and particulars for the above post should be obtained from the Office of the Deputy Registrar / Establishments [Non –Academic] of this University on a payment of Rs. 100/- for each application form at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order / Postal Order to the value of Rs. 100/- drawn in favour of the Bursar, University of Jaffna together with self addressed Rs.15/- Stamped envelope of 23X10 cm in size. Only Applications sent on the **specified** form will be accepted. **(Please annex copies of relevant documents).** The envelope containing the duly filled application form must bear **Title of the Post** on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the Deputy Registrar / Establishments [Non –Academic] of this University **on or before 31/07/2018.**

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected without intimation.

REGISTRAR
03.07.2018
(C-3140)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கபூர்வமான...

யினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் அமுலாக்கம் தொடர்பில் கருத்து தெரிவித்த இரா.சம்பந்தன் அவர்கள் பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருந்த அநேக விடயங்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என தெரிவித்தார்.

அதேவேளை இலங்கை அரசாங்கமானது இந்த பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கியது மட்டுமல்லாது இந்த பிரேரணையை நிறைவேற்றுவதற்கு மேலதிக கால அவகாசத்தினையும் கோரியிருந்த போது அக்கோரிக்கையை சர்வதேச சமூகம் ஏற்று அனுமதித்தும் இருந்தது. ஆகவே அரசாங்கமானது தமது வாக்குறுதிகளிலிருந்து பின்வாங்க முடியாது என்பதனையும் வலியுறுத்தினார்.

கடந்தகால சம்பவங்கள் மீள் நிகழாமையை உறுதி செய்யும் முகமாக ஒரு புதிய அரசியல் யாப்பு அங்கீகரிக்கப்படுவதின் அவசியத்தினை வலியுறுத்திய இரா.சம்பந்தன் மனித உரிமைகள் பேரவையின் பிரேரணையில் உள்ள அம்சங்களில் இது உள்ளடக்கப்பட்டுள்ளதனையும் எடுத்துக்காட்டினார்.

வடக்கு கிழக்கில் மந்த கதியில் இடம்பெறும் காணி விடுவிப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த இரா.சம்பந்தன் எமது காணிகளில் இராணுவம் பண்ணைகள் நடத்துவதனை அனுமதிக்க முடியாது எனவும் அவர்கள் எமது மக்களின் வாழ்வாதாரங்களை பாதிக்கும் இத்தகையான பொருளாதார நடவடிக்கைகளிலிருந்து விலகியிருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (ம)

மன்னார், வவுனியா...

செயலாளர் எஸ்.எல். முஹம்மத் ஹனீபா வவுனியா மாவட்டச் செயலாளராகவும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட செயலர்களுக்கான வெற்றிடங்கள் ஏற்பட்ட நிலையிலேயே இந்த நியமனம் நேற்று மாலை வழங்கப்பட்டது.

இந்த நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சரின் ஆலோனையையும் பெற்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு இந்த நியமனங்களை நேற்று மாலை வழங்கியது எனத் தெரிவிக்கப்பட்டது.(ம)

அரசியலமைப்பை...

மா அதிபருக்கு சபாநாயகர் கரு ஜயசூர்ய அறிவுறுத்தியுள்ளார்.

சபாநாயகர் அலுவலகத்தால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாடாளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை கூடிய போது இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில் எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படும் என கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. (ம)

விஜயகலாவை...

வல்லவர், அவரை நாம் அவசரப்பட்டு கொன்று புதைத்து விட்டோம். உண்மையில் அவர் இன்னமும் உயிருடன் இருந்திருக்க வேண்டும். இன்று இந்நாட்டில் உள்ள பல பிரபல சிங்கள அரசியல் தலைவர்களை விட பிரபாகரன் சிறந்தவர். பிரபாகரன் கொண்ட கொள்கையில் நேர்மையாக இருந்தார். இன்றுள்ள பல சிங்கள அரசியல்வாதிகள், கொண்ட கொள்கைக்கும், நாட்டுக்கும் துரோகம் செய்பவர்கள் என்று சொன்னது யார்? மனோ கணேசனோ, விஜகலாவோ அல்ல.

இந்தக் கருத்தை பகிரங்கமாக ஊடகங்களின் முன் நேரடியாக என்னிடம் பொதுபல சேன பொது செயலர் ஞானசார தேரர், என் அமைச்சுக்கு வந்து சொன்னார். இந்நிலையில் யாழ் மாவட்டத்தில் உடைந்து நொருங்கியுள்ள சட்டம், ஒழுங்கு நிலைமையை கண்டித்து ஒரு யாழ் மாவட்ட எம்பியாக, ஒரு தாயாக, ஒரு சகோதரியாக தன் கோபத்தை வெளிப்படுத்திய விஜயகலா மகேஸ்வரனை மட்டும் பிடித்துக்கொண்டு விமர்சிப்பது ஏன்? புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளதால், அதைப்பற்றி விஜயகலா பேசுவது சட்ட விரோதம் என கூறலாம். அப்படியானால், அன்று ஞானசாரர் என்னிடம் கூறியதும் சட்ட விரோதம் அல்லவா? என அமைச்சர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார். (ம)

நாடாளு...

யாமல் போனமையால் நாடாளுமன்ற நடவடிக்கைகள் யாவும் இன்று வரைக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் விடுதலைப் புலிகள் மீண்டும் தலைத்தூக்க வேண்டுமென யாழ்ப்பாணத்தில் ஆற்றிய உரை தொடர்பிலேயே சபையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

இதனால் சபையை இன்று வரை ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார். (ம)

சடலத்தை இனங்காண தொடர்பு கொள்ளவும்



வயோதிபர் ஒருவரின் சடலம் பொலிஸாரால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட சடலம் டபிள்யூ. ஜசரத்தின (வயது 65) இல.411/20, டேவிட்சன்வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு-4ஐ சேர்ந்தவருடையது என்றும் இவரை அடையாளம் காணும் பொருட்டு இவரது உறவினர்களை யாழ்.போதனா வைத்தியசாலையுடன் தொடர்புகொள்ளுமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர். (ம)

கேள்வி அறிவித்தல்

கமநல அபிவிருத்தி திணைக்களம் - கிளிநொச்சி
சிறிய நீர்ப்பாசன குளங்கள் புனரமைப்பு

கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் பின்வரும் விபரங்களைக் கொண்ட சிறிய நீர்ப்பாசன குளங்கள் புனரமைக்கும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்வி அடையாள இலக்கம்	வேலையின் விபரம்	மதிப்பீட்டு தொகை (வற் மற்றும் ஏனைய நீங்கலாக) (Rs Mn)	வேண்டப்படும் ஆகக்குறைந்த ICTAD தரம்/பதிவு	கேள்விப் பிணைப் பணம் செல்லுபடி யாகும் காலம்
KOC/DAD/06/MI/06/83/DAD07	பூநகரி கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட பொன்னா வெளிக்குளம் புனரமைத்தல்	4.169	C8	ரூபா 41000.00 வங்கி பிணை 26.10.2018 வரை
KOC/DAD/06/MI/06/227/DAD08	பூநகரி கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட சூரமுனைக்குளம் புனரமைத்தல்	2.801	C8	ரூபா 28000.00 வங்கி பிணை 26.10.2018 வரை
KOC/DAD/06/MI/05/10/DAD09	முழங்காவில் கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட பத்தன் மோட்டைக்குளம் புனரமைத்தல்	4.165	C8	ரூபா 41000.00 வங்கி பிணை 26.10.2018 வரை
KOC/DAD/06/MI/07/279/DAD10	பளை கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட பெரிய மசார்க்குளம் புனரமைத்தல்	3.111	C8	ரூபா 31000.00 வங்கி பிணை 26.10.2018 வரை
KOC/DAD/06/MI/08/365/DAD11	உருத்திரபுரம் கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட உருத்திரபுரக்குள கழிவுவாய்க்கால் புனரமைத்தல்	4.150	C8	ரூபா 41000.00 வங்கி பிணை 26.10.2018 வரை

அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளிற்காக தற்போது தகைமையுடையவர்களும் தகைமை பெற்றவர் களிடமிருந்தும் குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றது.

I. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

II. இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற் பவர் போதிய அளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.

III. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்திறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.

2. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கமநல அபிவிருத்தி திணைக்களம், கிளிநொச்சியில் பெற்றுக் கொள்ளலாம். (தொ.பே.இல-0212285904, பக்ஸ் இல - 0212285904)

3. கேள்வி ஆவணங்களை 04.07.2018ஆம் திகதியிலிருந்து 25.07.2018ஆம் திகதிவரை முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை வேலைநாட்களில் கிளிநொச்சி கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் மீளளிக்கப்படாத ரூபா 1,000.00 கட்டணத்தை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

4. இரு அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கேள்வி கோருவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் **தலைவர் திணைக்கள பெறுகைக்குழு கமநல அபிவிருத்தி திணைக்களம், கிளிநொச்சி** எனும் விலாசத்துக்கு 26.07.2018ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கப்பெறல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

6. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செல்வுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

7. நிதி அமைச்சினால் வெளியிப்பட்ட நிதிச்சுற்றறிக்கை 04/2016க்கு அமைவாக வடக்கு மாகாணத்தை சார்ந்த வர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

8. குறித்த வேலைகளுக்கான முதற்கூட்டம் (Pre Bid Meeting) 12.08.2018ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கமநல அபிவிருத்தி திணைக்களம், கிளிநொச்சியில் நடைபெறும்.

வே.ஆயகுலன்
திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர்,
கமநல அபிவிருத்தி திணைக்களம்,
கிளிநொச்சி.

(அ.வி.3138)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பாக்கி வெடி...

பெற்ற இச்சம்பவத்தில் தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் கட மையாற்றும் திருகோணமலை கந்தளாயைச் சேர்ந்த நஸீர் (வயது-21) என்ற பொலிஸாரே உயிரிழந்தவராவார்.

தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் மேற் படி உத்தியோக த்தர் நேற்று பொலிஸ் நிலைய நுழைவாயி லில் கடமையில் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அச்சமயம் அவரிடமிருந்த ரி-56 ரக துப்பாக்கி தவறுதலாக வெடித்ததாக கூறப்படுகி றது. இதில் வயிற்றுப் பகுதியில் படுகாயமடை ந்த அவர் தெல்லிப்பளை வைத்தியசாலை க்கு கொண்டு செல்லப்பட்ட போது அங்கு மரணமடைந்ததாக கூறப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை பிராந்திய பொலிஸார் மேலதிக விசாரணை யினை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-60)

ஹயஸ் வாகன...

கடந்து சென்ற போது கிளிநொச்சி பக்க மாகவிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ஹயஸ் ரக வாகனம் மோதியுள்ளது.

உடனடியாக குறித்த வாகனத்திலேயே மாணவியை ஏற்றிக் கொண்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு சென்றிருந்த போதும் மாணவி உயிரிழந்து விட்டார்.

உயிரிழந்த மாணவி குடும்பத்தில் ஒரேயொரு பெண் பிள்ளை ஆவார். சடலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட டுள்ளது. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை பொலிஸார் கைப்பற்றியு ள்ளதோடு, வாகன சார தியையும் கைது செய்துள்ளனர்.(ம-312,315)

உடனடியாக பத...

மாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், பிரத மர் ரணில் விக்கி ரமசிங்க அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் விடுதலைப் புலிகளின் மீள்எழுச்சி குறித்து அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கருத்து வெளியிட்டிருந்தார்.

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியமை தென்னிலங்கை அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் பிரத மரின் அறிவிப்பு வெளியாகி உள்ளது. (ம)

பேச்சுவார்த்தை...

க்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கா தமை காரணமாக இன்று முன்னெடுக்கவிருந்த சுகயீன விடுமுறை போராட்டம் திட்ட மிட்டப்படி முன்னெடுக்கப்படும் என அறிவித் துள்ளது.

இந்நிலையில், தொழிற்சங்கங்கள் என்ன கூறினாலும் சட்டத்தை மதிக்கும் அதி காரிகள் இன்று சேவைக்கு சமுகமளிப்பார்கள் என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அதன் பிரகாரம் இன்று அனைத்து பாடசாலைகளும் வழமை போல இயங்கும் என கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.(ம)

புலிகளின் மீள் உருவாக்கம்...

ஏற்படுத்தியுள்ளது.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் குறித்த விடயம் விவாதிக்கப்பட்டு அமைச்சருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டு பாரிய கருத்து மோதல் காரணமாக பாராளுமன்ற அமர்வு இன்றை தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக இவ் விடயம் தொடர்பாக விசாரணைகள் முடியும் வரை குறித்த அமைச்சு பதவியில் இருந்து விஜயகலா மகேஸ் வரனை இடைநிறுத்துமாறு பிரதமர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இந்த விடயம் குறித்த இன்றும் பாராளுமன்றில் விவா திக்கப்படவுள்ளது.

அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் திடீரென உடல்நிலை பாதிக்கப்பட்டு உள்ளதாக அமைச்சு வட்டார தகவல்கள் தெரிவி த்துள்ளன. யாழில். உள்ள தனது இல்லத்தில் தங்கியுள்ள இராஜா ங்க அமைச்சர் நேற்று செவ்வாய்க்கிழமை திடீரென உடல் நல பாதிப்புக்கு உள்ளானர். இதனையடுத்து அருகில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற, இராஜாங்க அமைச்சர் நேற்று மதியம் வீடு திரும்பியதுடன், தற்போது வீட்டில் ஓய்வு எடுத்து வருவ தாக தெரிவிக்கப்படுகின்றது. (ம)

சர்ச்சையில்...

தெரிவித்துள்ளார்.

கொழும் பில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப் பில் கலந்து கொண் டிருந்த போதே நாடா ளுமன்ற உறுப்பி னர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

மேலும், விடு தலைப் புலிகளை மீள உருவாக்க வேண்டும் என்ற இராஜாங்க அமை ச்சர் விஜயகலாவின் கருத்து தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி உடனடியாக பதிலளிக்க வேண் டும் என்றும் அவர் வ லி யு று த் தி யு ள்ளார். (ம)

விற்பனைக்கு

ஜப்பானில் இருந்து தருவிக்கப்பட்ட பாவி த்த யமகா அவுட் போட் என்ஜின் 25HP, 30 HP உடன் விற்பனைக்குண்டு

0774366704 (கி-3144)

விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள இரும்பு நிலை யுடன் 9'x 7' அளவுள்ள 06 கதவுகள் கொண்ட இரும்பு கடைக்கதவு உடன் விற்பனைக்கு.

0774366704 (கி-3143)

வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION MONEY TRANSFER 070 330 5500 WESTERN UNION MONEY TRANSFER

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

பதவிக்கான தேடல்

யாழ்.குடாநாட்டில் முதன்மை நிறுவனமான DNMC சர்வதேச நிறுவனத்திற்கு நிலையான 12 பதவி வெற்றிடங்களுக்கு நேர்முகத் தேர்வு ஆரம்பமாகின்றது. விருப்பமுள்ளவர்கள் தொடர்புகொண்டு உங்களுக்கான நேரத்தை உறுதிப்படுத்துங்கள்.

- தகைமை O/L மட்டும் போதுமானது.
- முன்னனுபவம் அவசியமில்லை.
- வயதெல்லை 18 - 30.

தொடர்பு: 077 848 5328

(4786)

உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை

- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
077 6655413

(C-3124)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

- மானிப்பாய் 0768226240
- யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
- நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-3065)

எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை

- அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
- அருள்ஸ் பிறைவேற் லிமிட்டற் நிறுவனங்களின் இணை நிறுவனம்.

அருள்

சாவகச்சேரி
இல. 01 NDB வங்கிக் கட்டடம், தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
076 443 1576

நெல்லியடி
இல. 01 பெற்றோல் செற் லேன் ,நெல்லியடி.
076 443 1576

கிளிநொச்சி
இல. 10, கரடிப்போக்கு, கிளிநொச்சி.
(வாகன புகைப்பரிசோதனை நிலையம் அருகில்)
076 443 1576

(C-3126)

FALC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1, A2, B1, B2.
V.ஜெகன் (Trained, in France-2007)

40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 14.07.2018 சனி 1.00 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி.
021 320 2973
ஆரம்பம் : 16.07.2018 மாலை 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

(சி-3134)

ரூ.75,000 - ரூ.215,000 சம்பளத்துடன் டுபாய் வேலைவாய்ப்புக்கள்

வீட்டு மின் உபகரணங்கள், இலத்திரனியல் சாதனங்கள் விற்பனை காட்சியறையில்

முகாமையாளர்
விற்பனை உத்தியோகத்தர்கள்
பிரதிநிதிகள்

விபரங்களுக்கு
0777 324 004

ஜூலை மாதம் பயண ஏற்பாடு

10வது ஆண்டில் காலடிக்கும்
SIKARAM ACADEMY
Success · Hospitality · English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017

Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists

221 - 1/1, மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம்
021 - 222 00 11

077 00 38 215
077 55 46 956
021 221 9 221

(சி-3132)

காணிகள் விற்பனைக்கு

- கீரிமலை சிவன் கோவிலுக்கு முன்பாக 50 பரப்பு காணி.
- கொல்லன்கலட்டி பிள்ளையார் கோவில் அருகாமையில் 5 1/2 பரப்புக் காணியில் 6 அறைகள் உள்ள வீடு.

உடன் விற்பனைக்கு உள்ளன.

தொடர்பு:- 077 4512789

(4776)

Ahtus
Ahtus Enterprises (Pvt) Ltd
ஆதுஸ் என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிட்

குழந்தைகள் தாய்மார்களுக்கு வேண்டிய அனைத்து பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

FARLIN
YOUR BABY IS OUR CONCERN

உலகின் அதி சிறந்ததை உங்கள் குழந்தைக்கு வழங்கிடுங்கள்

விற்றுத்தீர்தலுக்காக சிறுவர்களுக்கான சைக்கிள்கள் விலைக்கழிவுடன் விற்பனைக்குண்டு! முந்துங்கள்

இல.30, கன்னாதிட்டி றோட், (வண்.சிவன் கோயில் முன்பாக) யாழ்ப்பாணம்.
Tel : 077 742 7322

(சி-3141)

திறப்பு விழா

DHL

நிகழும் மங்களகரமான விளம்பி வருடம் ஆனி மாதம் 20ம் நாள் (04.07.2018) புதன்கிழமை மதியம் 12.00 மணி சுபவேளையில் எமது புதிய அலுவலகம் ஆரம்பிக்கப்படுகின்றது.

VISA

"திருமுருகன் கொம் நெற்"
பிறைவேட் லிமிடெட்

SriLankan Airlines

இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- உள்நாடு, வெளிநாடுகளுக்கான அதிவிரைவு பொதிகள் சேவை. (குறைந்த கட்டணத்தில்)
- சகல நாடுகளுக்கான விசா விண்ணப்பங்கள் மற்றும் Online Visa விண்ணப்பங்கள் செய்து தரப்படும்
- சகல நாடுகளுக்கான விமான சீட்டுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

321, கே.கே.எஸ் றோட், (முட்டாஸ் கடைச் சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம்.

077 755 4528
071 141 8711

(4784)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org